APPROVED BY THE TEXT BOOK COMMITTEE FOR SCHOOL USE.

Rajan's Continuous Readers.

# SOMADHATTAN

A ROMANCE IN TAMIL

ADAPTED FROM

**Don Quixote**



M. P. RAJAN & Co.,
PERAMBUR.

# சோமதத்தன்



(துரைத்தனத்தார் அங்கீகரித்தது)

**M. P. ராஜன் அண்டு கம்பெனி,**

12, ரங்கஷாயி நாயுடு தெரு,

பெரம்பூர்.

1933.

*Approved by the Text Book Committee, Madras, for School use.*
*Vide Fort St. George Gazette Part I—B dated 12-4-32 in Page 243.*

# பொருளடக்கம்

# சோம தத்தன்

## 1. நமது தேயம்

"நாடேன்ப நாடா வளத்தன ; நாடல்ல
நாட வளந்தரு நாடு."

நீர் வளம் நில வளம் பொருந்தி இப்பூவுலகத்திற்கே ஒரு திலகம்போல விளங்குவது நமது தாய் நாடாகிய இந்திய தேயம். இத்தேயத்தில் பல்வேறு ஜாதியார்களும் பல்வேறு விளை பொருள்களும் அடங்கிய பல சிறு பிர தேசங்கள் இருப்பதால், இஃது ஒரு கண்டமெனவே பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இந்து தேய சரித்திரத்தை மிக விரிவாய் எழுதிய மிகப் பெரிய மேதாவியான வின் ஸெண்டு ஸ்மித் என்னும் ஆசிரியரும், இந்தியா தேயம் பல் வேறு ஜாதியார்களையும் வகுப்பினர்களையும் உடைய ஒரு கண் காட்சிச் சாலை என்று எழுதியிருக்கிறார். இந்தியா வின் வடக்கே மிக ஓங்கி வானத்தை அளாவி நிற்கும் இமய மலையும், அதைத் தொடர்ந்தாற்போல மேற்கே ஸுலை மான், ஹாலா முதலிய மலைகளும், தென்புறம் மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத்தொடர்ச்சி மலையும் இந்தியா வுக்கு எல்லைகளாகச் சுவர் வைத்ததுபோல அவ்வளவு அழகாக அமைந்துள்ளன. இந்தியாவைச் சுற்றி முப் பக்கத்திலும் கடல் சூழ்ந்திருப்பது பௌர்ணமிச் சந்திர

னைச் சுற்றி நீல நிற வானம் அமைந்து இருப்பதுபோல இருக்கின்றது.

இந்தியா தேயத்தின் வடபுறம் புண்ணிய நதிகளாகிய ஸிந்துவும் கங்கையும் பாயப்பெற்று, மிகச் செழிப்பாய் இருக்கிறது. அங்கு வசிக்கும் ஜாதியார்களும் சிவந்த மேனியுடன் உயர்ந்து வளர்ந்து திடகாத்திரமுள்ளவர்களாய் இருக்கின்றார்கள். ஸிந்து நதிக்குத் தெற்கே இராஜ புதனம் என்னும் ஒரு பிரதேசம் இருக்கின்றது. ஆதி காலம் முதல் அந்நாட்டு வீரர்கள் இந்தியநாட்டு வீரர்களுள் முதன்மையாக விளங்கியவர்களாவார்கள்.

அஞ்சா நெஞ்சர்களாகிய பாபர் சக்கரவர்த்தியையும், அக்பர் சக்கரவர்த்தியையும் மனங் கலங்கச் செய்த இராணு சங்கர சிங்கனையும் இராணு பிரதாப சிங்கனையும் ஈன்ற நாடு இராஜ புதனமேயாம். இன்றைக்கும் அவர்களை அங்குள்ளார் மிகவும் போற்றி வருகின்றனர். மற்றும் ஆடவர்களைப்போலவே அங்குள்ள பெண்டிர்களும் சிறிதும் குன்றாத தீரத்தை உடையவர்களே. மதவெறி கொண்ட அவுரங்கசீப் சக்கரவர்த்தியுடன் பொருது தோல்வி யடைந்து புறங் காட்டி வீட்டுக்குத் திரும்பிய யசவந்த சிங்கனை அவன் மனைவி நோக்கி, "சமர்க் களத்தில் எதிரியை வென்று வீரக் கொடியை நாட்ட வேண்டும். இன்றேல், போர் முனையில் இறந்து வீர சுவர்க்கப் பேரின்பத்தையடைய வேண்டும். இவையே ஓர் உண்மை இராஜ புத்திரனது இலக்கணம். ஆதலால், போரில் தோற்றுத் திரும்பிய இராஜ புத்திரராகிய உம்முடன் யான் வாழேன்!" என்று சொல்லித் தன்னறைக்குத் தாழிட்டுத் தன்னுயிரையும் மாய்த்துக்கொண்டாள். அவளைப்

போன்ற பல்லாயிரம் பெண்டிர்கள் அங்கு அக்காலத்தும் உண்டு; இக்காலத்திலும் உண்டு.

இராஜ புதனத்திற்குத் தெற்கே விந்திய மலைச் சாரலையடுத்தாற்போ லிருக்கும் மலைப் பிரதேசத்தில் மகாராஷ்டிரர் என்னும் ஜாதியார் வசிக்கின்றனர். அவர்கள் மிக்க பலசாலிகள்; சுறுசுறுப்புள்ளவர்கள்; டாம்பீகமற்றவர்கள்; கருமமே கண்ணுயினவர்கள்; தந்திரமே உருக்கொண்டவர்கள். இந்தியாவை ஆண்ட மொகலாய சக்கரவர்த்திகள் எவ்வளவு முயன்றும், அம்மகாராஷ்டிரர்கள், தங்களது ஆயுளினும் சிறந்த சுதந்திரத்தை இழக்கவில்லை. சிவாஜியையும், இராஜாராமையும், அவன் மனைவி தாராபாயையும் இந்தியா முழுதும் இற்றைக்கும் போற்றுகிறது.

மகாராஷ்டிர நாட்டிற்குத் தெற்கே தென்னிந்தியா உளது. ஆங்கில அரசாட்சியை இந்தியாவில் ஸ்தாபிக்கும் வரையில் தென்னிந்தியாவை அனேக சிற்றரசர்களும், பாளையக்காரர்களுமே ஆண்டு வந்தார்கள்.

---

## 2. சோம தத்தன் இளமைப் பருவம்

தக்ஷிணத்தின் மேற்குப் பக்கத்திலும் வடபக்கத்திலும் உள்ள மலைப்பிரதேசத்தில் மகாராஷ்டிரர்கள் நமது கதை தொடங்கும்பொழுது வசித்து வந்தார்கள். அவர்கள் உயரமாயில்லாவிட்டாலும், மிக்க தேக பலமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்து, சிக்கனமாகக் காலம் கழித்து வந்தார்கள். அவர்கள் இந்து மதக் கொள்கைகளையே தழுவி வந்தார்கள். அவர்களுடைய நாட்டிற்கு வடக்கே மொகலாய இராச்சியமும்

தெற்கே விஜயபுரம், கோல்கொண்டா முதலிய மகம்மதிய இராச்சியங்களும் இருந்தன. ஆகவே, மகம்மதிய மதம் அக்காலத்தில் ஓங்கியிருந்ததால், சிறு நாடாகிய மகாராஷ்டிரத்தில் வசித்த மகாராஷ்டிரர் இந்துமதத்தை மிக்க ஆர்வத்துடன் போற்றி வந்தனர். அவர்கள் மிகவும் கடவுள் பக்தியுள்ளவர்கள்.

மகம்மதியர்கள் தங்கள் நாட்டைக் கைப்பற்ற வண்ணம் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் மலைகளின் உச்சியில் கோட்டைகளைக் கட்டி, அவைகளில் வசித்து வந்தார்கள். வருஷந்தோறும் ஆறு மாதம் விவசாயம் செய்து, ஆறுமாதம் போர் வீரர்களாகவோ, கொள்ளைக்காரர்களாகவோ அவர்கள் காலங் கழித்து வந்தார்கள். எவ்வளவு முயன்றும் மகம்மதியர்களால் மகாராஷ்டிரத்தைக் கைப்பற்ற முடியவில்லை. மகாராஷ்டிரர்கள் ஒருவருக்கொருவர் அங்கங்கேயே சம்பந்தம் செய்துகொண்டதாலும், அவர்களுடைய பாஷை, பழக்க வழக்கங்கள் பிரத்தியேகமாக இருந்ததாலும், இந்தியாவின் மற்றப் பாகத்திற்கும் அதற்கும் ஒரு விதச் சம்பந்தமுமில்லாமல், அவர்கள் ஒரு தனி ஜாதியார்களாகவிருந்து வந்தார்கள். அவர்களிற் சிலர், நம் கதை தொடங்குங் காலத்தில், விஜய புரம் முதலிய தக்ஷிண ராஜ்யங்களில் அரசு புரிந்த மகம்மதிய சுல்தான்களிடம் போர் வீரர்களாகவும் அதிபதிகளாகவும் அமர்ந்திருந்தார்கள்.

அக்காலத்தில் இராய துர்க்கம் என்ற ஒரு சிறு பிரதேசம் மகாராஷ்டிரத்தில் இருந்தது. அவ்விடத்தில் சோமதத்தன் என்னும் ஒரு வாலிபன் இருந்தான். அவன் தந்தை அவனது இளவயதிலேயே இறந்ததனாலும், அவ

னைப் பாதுகாக்க ஒருவருமில்லாமற் போனமையாலும், அவன் அதிகமாகக் கல்வி கற்கக் கூடாமற் போயிற்று. ஆயினும், அவன் சிறிது எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டான். அவனுடைய தாய், அவனுக்கு எப்பொழுதும் இந்திய வீரர்களின் சரித்திரங்களைச் சொல்லுவது வழக்கம். அவைகளைக் கேட்கும்பொழுதெல்லாம், அவனும் அம்மாதிரியே ஒரு பெரும்போர் வீரனாகவேண்டுமென்னும் அவா மிகவும் கொண்டான்.

இவ்வண்ணம் அவன் இருக்குங்கால், அவனுடைய வீட்டின் ஒரு பக்கத்திலிருந்து பழைய புத்தகம் ஒன்றை அவன் கண்டெடுத்தான். அதில் முற்காலத்துப் போர் வீரர்களின் பழக்க வழக்கங்கள், தீரச் செயல்கள் முதலியவைகள் அடங்கியிருந்தன. அதைச் சோம தத்தன் மிகவும் கவனத்துடனும் கருத்துடனும் மேலும் மேலும் படித்து மனப்பாடம் செய்துவிட்டான். அது முதல் அம்மாதிரிப் புத்தகங்கள் அனேகம் படிக்கக் கருதி, அவன் தகப்பன் சம்பாதித்துச் சேமித்து வைத்த திரவியத்தையும் நிலத்தையும் விற்றுப் புத்தகங்கள் வாங்கிப் படித்து வந்தான். அடிக்கடி வெளிச்சென்று வீரச்செயல்கள் செய்ய அவாக் கொண்டவனாதலால், சோம தத்தன், அதற்கு இல்லறம் இடையூறாக விருக்குமென்று உன்னி, ஓர் இல்லக்கிழத்தியைக் கொள்ளாமல், வீட்டில் ஒரு வயோதிக ஸ்திரீயுடனும் ஓர் ஆதரவற்ற சிறு பெண்ணுடனுமே நாட்களைக் கடத்தினன்.

இவ்வாறு வருடங்கள் பல சென்றன. ஊரார் எல்லாரும் சோம தத்தனை ஒரு பித்தனென்றே நினைத்திருந்தனர். ஏனெனில், அவனுடைய காரியங்கள் அம்மாதிரி

இருந்தன. அவன் எப்பொழுதும் புத்தகங்கள் படிப்பதும், எவராவது வந்தால், தான் ஒரு பெரும்போர் வீரன் ஆகப்போவதாகவும், உலகம் முழுதும் தன்னைச் சிறிது காலத்துள் புகழப்போவதாகவும், தான் வெளிச்செல்லுங் காலத்தில் அவ்வயோதிக ஸ்திரீயையும் சிறுமியையும் அவ்வூராரே கவனித்துக்கொள்ள வேண்டுமென்றும் பலவாறுகப் பேசி வந்தான். ஊரார் அவனைப் பித்தனுகக் கருதினும். அவர்கள் அவனிடத்தும், அவன் வீட்டிலுள்ளாரிடத்தும் அன்புடனேயே இருந்துவந்தார்கள். அடிக்கடி பணம்கொடுத்தும், பதார்த்தம் கொடுத்தும் அவர்களுக்கு அவ்வூரார் உதவி புரிந்தனர். ஏனெனில், அவ்வூரார்கள் அயலாரைத் தங்களைப்போலவே நினைப்பவர்கள்.

---

## 3. சோம தத்தனுடைய போர்க் கோலமும் பிரயாணமும்

சோம தத்தனுக்கு வயது ஐம்பதாயிற்று. வெளிச்சென்று வீரச் செயல்கள் புரிந்து கீர்த்தி பெற வேண்டுமென்னும் எண்ணமும் அவனுக்கு வளர்ந்து கொண்டே வந்தது. அடிக்கடி வெளிச் செல்வதும் தேகப் பயிற்சி செய்வதுமாகவிருந்ததால், அவனுடைய தேகம் மெலிந்திருப்பினும், அதன் கட்டுச் சிறிதேனும் தளரவில்லை. இப்படியிருக்கும் நாளில் ஒரு நாள் அவனைப் போலவே மெலிந்த ஒரு குதிரையை அவன் கண்டு, அதை வாங்கிக்கொண்டு வீடுசென்று, அதை மிகவும் கவனமாய்ப் போஷித்துவந்தான்; பிறகு, வீட்டின் ஒரு மூலையில் கிடந்த கவசம் ஒன்றைஎடுத்து, அதை நன்கு தேய்த்துச் சிறிது

பிரகாசம் உண்டாகும்படி செய்தான்; அதுபோலவே அங்குக்கிடந்த ஒரு பழைய எஃகுக் குல்லாயையும் தேய்த்தான். ஆனால், போர் வீரர்கள் எந்நாட்டிலும் தங்கள் முகத்தை இரும்பால் மூடியே சண்டையிடுவார்கள் என அவன் படித்திருந்ததால், ஒரு மரப் பலகையை எடுத்துச் சரிப்படுத்தி எஃகுக் குல்லாயுடன் சேர்த்து அமைத்து, அதை முக மூடியாகச் செய்தான். அவன் அது கத்திக் குத்தைத் தாங்குமாவெனப் பரீட்சிக்கக்கருதிக் கத்தியால் ஓங்கி அதை வெட்ட அப்பலகை பிளந்துபோயிற்று. பின்னும் அவன் தான் கொண்ட கருமத்தை விடானாகி, அம்மரத்திற்கு இரும்புப் பட்டம் முதலியவை தைத்து, அதைச் சரிப்படுத்தினான்.

வெளி நாடுகளுக்குச் சென்று சமர் செய்து கீர்த்தியைப் பரவச் செய்யும் வீரன் ஒவ்வொருவனும் மூன்று விஷயங்களைக் கவனித்து நடத்தல்வேண்டும் என்று அவன் புத்தகத்தில் படித்திருந்தான்; ஆதலால், அவைகளைக் கவனிக்கத் தொடங்கினான். நம் சோம தத்தன் பழைய வீரர்களைப்போலவே ஆக வேண்டும் என்னும் நோக்கம் கொண்டவனாதலால், வீரர்கள் கையாண்ட முறைகளில் ஒன்றையும் விடக்கூடாதல்லவா? முதலில் குதிரை வேண்டுவது அவசியமாகவிருந்தது. அதற்கு அவனுடைய மெலிந்த குதிரையே போதுமானது. ஆயினும், அக்காலத்து வீரர் ஒவ்வொருவரும், தத்தம் குதிரைகளுக்கு ஒவ்வொரு பெயர் வைத்திருந்தனர். மேனாட்டு வீரனாகிய அலெக்ஸாந்தர் அவன் குதிரைக்குப் புஸிபாலஸ் எனப் பெயரிட்டிருந்தான். அதனால், சோம தத்தன் மூன்று

நாட்கள் யோசித்து, இறுதியில் நீல வேணி என்ற ஒரு சிறந்த பெயரை அக்குதிரைக்கு இட்டான். பிறகு, சோம தத்தன் என்னும் சாதாரணப் பெயர் அவனுடைய வீரத்தைக் குறிக்காதது போல அவனுக்குத் தோன்றியதால், அதி வீர பராக்கிரம ராயதுர்க்ககேசரி சோம தத்தன் என்ற பெயரைத் தானே வைத்துக்கொண்டு, அது மிகவும் அழகாகவிருப்பதாகக்கருதிச் சந்தோஷித்தான். போர் வீரர்கள், தங்களுடைய அன்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரமான மிக்க வனப்புள்ள ஒரு ஸ்திரீயின் பெயரைச் சொல்லிக்கொண்டு சண்டையிடுவது வழக்கம். பிறகு தோற்றவர், அந்த ஸ்திரீக்கு முழந்தாளிட்டு, அவளுக்கு வேண்டியவரான போர்வீரர் தம்மைத் தோற்கடித்ததாகவும், ஆகவே, தாம் அவளுடைய அடிமையென்றும் ஒப்புக்கொள்ள வேண்டும். அம்மாதிரியே சோமதத்தனும் செய்யவிரும்பி, தான் எந்தச் சீமாட்டியின் பெயரை ஆதரிக்கலாம் என நினைந்தான். ஆனால், அவனால் ஒன்றும் முடிவு செய்யக் கூடவில்லை. எனினும், முப்பது வருடங்களுக்குமுன் அருகேயிருந்த சூரிய துர்க்கம் என்ற விடத்தில் ஓர் ஏழைப் பெண்ணை அவன் மணம் புரிய எண்ணியிருந்தான். பெண்ணும் அவள் வீட்டாரும் அதற்குச் சிறிதும் சம்மதிக்கவில்லை. ஆதலால், அம்மணம் நிறைவேறாமற் போயிற்று. அதனால், அவளையேதான் ஆதரிப்பது நன்று என அவன் நினைத்துக்கொண்டான். ஆயினும், அவள் பெயரை மற்றவரிடம் சொன்னால், அது கம்பீரமாக இருக்கவேண்டுமல்லவா? ஆதலால், சில நாட்கள் யோசனை செய்து, முடிவில் ரூபசௌந்தர்ய திலக ரூபமதி என்பதை அவள் பெயராக மதித்தான்.

அவன் திக்கு விஜயத்திற்குப் புறப்பட எல்லாம் சித்தமாயின. ஆயினும், அவனுடைய வீட்டிலுள்ளோருக்கும், ஊராருக்கும் தெரியாமலே அவன் புறப்பட உத்தேசித்தான். ஏனெனில், அவர்கள் அவனை முன்னமே பித்தன் என அறிந்திருந்தார்கள். அவன் அடிக்கடி போர்க்கோலம் கொள்ளவும், வெளிச்சென்று புகழ் பெறவும் விரும்பியதும் அவர்களுக்குத் தெரியும். எங்கு அவ்வாறு அவன் செய்துவிடுவானோ எனவே அவர்கள் பயந்தார்கள். ஆதலால், இரவே பிறர் அறியாமற் செல்வதற்குச் சரியான காலம் என எண்ணி, இரவிலேயே அவன் புறப்பட உத்தேசித்தான்.

முடிவில் கடுங்கோடைச் சித்திரைத் திங்களில் ஓர் ஓரையில் கவசத்தை யணிந்து, ஆயுதங்களைத் தரித்துக் கொண்டு இரவு மூன்று மணிக்குச் சோம தத்தன் வீட்டை விட்டுக் கிளம்பினான். சோம தத்தன் சற்று உயரமானவன்; மெலிந்த சரீரத்தை யுடையவன்; உடம்பில் இருப்புக் கவசமும், காலில் பாத ரக்ஷையும், தலையில் எஃகுக் குல்லாயும் மர மூடியும் அணிந்து, அவனுடைய இளைத்த குதிரையின்மீது ஏறிக்கொண்டு, ஒரு கையில் கேடயமும் மற்றொரு கையில் ஈட்டியும் இடுப்பில் வாளும் கொண்டு சென்றது அவனைக் காண்போர் போர் வீரனாக மதிக்கச் செய்தது. ஆயினும், கூர்ந்து கவனிப்போர்க்கு, அவனது கோலம், மிகவும் நகைத்தற்கே இடங் கொடுத்தது. சோம தத்தனோவெனில், தான் ஒரு பெரிய போர் வீரனென்றும் கடைசியில் அன்றே தான் உலகப் பிரசித்தியடையும்படி கீர்த்தியடைய நேர்ந்தநாளென்றும் நினைத்து மிகவும் மனமகிழ்ந்தான். அவன் தெரு வழியே செல்லா

மல், வீட்டுப் பின் புறமாகவே வெளிக்கிளம்பினுன். எவ ராவது அவனைக் காண நேரிட்டால், அவன் புகழடையக் கூடாதபடி அவனைச் செல்லவொட்டாமல் தடுப்பார்கள் என அவன் பயந்தான்போலும்!

சோம தத்தன் அரை மைல் தூரம் சென்றிருப்பான். அவன் உடனே திடீரெனக் குதிரையை நிறுத்தி ஏதோ ஆலோசனை செய்பவன்போல நின்றுவிட்டான். ஒரு யோசனையின்மேல் அவன் மிகவும் வருத்தமும் கஷ்ட மும் அடைந்ததாகத் தோன்றிற்று. முன் காலத்தில் ஒரு வன் போர்வீரனுகவேண்டினுல் அதற்குச் சில கருமங்கள் உண்டு. எவ்வித்தையும் குரு மூலமே ஒரு சீடன் கற்றுக் கொள்ள வேண்டும். ஆதலின், போர் வீரனுவதற்கும், ஒருவன் அரசனையோ, தளகர்த்தனையோ, அல்லது வேறு எவனுவது வீரனையோ அடைந்து, அவன் முன் முழந் தாளிட்டுத் தலை வணங்க வேண்டும். பிறகு அப்பெரி யோன் வீரனை நோக்கி, "நீ இன்று முதல் போர் வீரனுக வெளிச்சென்று சமர் செய்து கீர்த்தியை அடைவாயாக," என்று சொல்லித் தோளில் கத்தியால் மும்முறை தட்டு வான். அதன் பிறகே அவன் போர் வீரனுகக் கருதப்படு வான். இவ்விஷயம் சோம தத்தன் ஞாபகத்திற்கு வர, அவன் அடியற்ற மரம்போல அசைவற நின்றுவிட்டான். எவரிடம் போய் வீரனுகச் செய்துகொள்வது என்ற எண் ணம் அவனுக்குத் தோன்றிற்று. எல்லாவற்றிற்கும் ஒரு சமாதானம் செய்துகொள்ளும் மனம் அவனிடம் இருந்தமையால், முதன்முதல் எவனைக் காண்கின்முனே அவன் மூலமே அச்சடங்குகளை நிறைவேற்றிக்கொள்ள எண்ணிக்கொண்டான். பிறகு கவசமும் கேடயமும்

தூய வெண்மையாக இருக்க வேண்டுமென்றும், எங்காவது வெற்றி பெற்ற பிறகே அவ்வீரன் அதன்மேல் ஏதாவது வெற்றிக்கு அறிகுறியாகப் பதித்துக்கொள்ள வேண்டும் என்றும் அவன் படித்திருந்தான். ஆயினும், அதற்கு எங்காவது வழி தங்கினல், அப்பொழுது கவசத்தை நன்கு தேய்த்தால் வெண்மையாய்விடும் என மனச் சமாதானம் செய்துகொண்டான்.

அதன் பிறகு தன் குதிரை எந்த வழியிற் செல்லுமோ, அவ்வழியே நாள் முழுதும் போய்க்கொண்டிருந்தான்; குதிரையை இஷ்டம்போல விட்டாலே, கடவுள் தனக்குப் புகழ் வரச் செய்வார் என நினைத்தான். தானாக ஒரு வழியே செல்லுதல் கூடாது என அவன் எண்ணினான். காலை முதல் சோம தத்தன் ஓர் உணவும் சாப்பிடாததால், பசிப் பிணியால் மிகவும் வருந்தினான். எங்காவது, ஒரு கோட்டையோ, குடிசையோ இருக்கின்றதாவெனப் பல பக்கமும் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கடைசியில் ஓர் இடத்திலிருந்து புகை கிளம்புவதைக் கண்டு, அம்மார்க்கமே குதிரையை நடத்திச் சென்றான்; சில நிமிஷங்களுக்குள் அங்கு ஒரு சத்திரம் இருப்பதைக் கண்ணுற்றான்; வேகமாகச் சவாரி செய்து சத்திர வாயிலை யடைந்தான்.

ஆனல், சத்திரத்தை யடைந்தவுடன் சோம தத்தன் பசிப் பிணியை மறந்தான். அந்தச் சத்திரத்தை அவன் சுற்றிலும் அகழி வெட்டப்பட்டுக் கோபுரங்களும் அனேக வாயிற்படிகளும் உள்ள ஒரு பெரும்பிரபுவின் கோட்டையாக எண்ணினான்; வாயிலில், எவனாவது ஒரு வேலையாள் தாரை வாசித்தும் தப்பட்டை யடித்துக்

கொண்டும் தன்னை எதிர்கொண்டழைத்துக் கீழிறக்கிக் குதிரையைப் பத்திரமாக மாளிகைக்குள் அழைத்துச் செல்வான் என நினைத்தான். ஆனால், ஒருவரும் வர வில்லை. ஆதலால், தானே குதிரையை விட்டிறங்கி முன் சென்று, இரு பணிப் பெண்களைக் கண்ணுற்றான். அவர் கள் நமது வீரன் கண்களுக்கு அக்கோட்டையிலுள்ள இரு சீமாட்டிகள்போலப் புலப்பட்டார்கள். ஆதலால், அவர்களை அவன் புன்சிரிப்புடன் நோக்க, அவர்கள் அவனது தோற்றத்தைக் கண்டு பயந்து ஓட ஆரம்பித் தார்கள். உடனே சோம தத்தன் தன் முக மூடியைச் சற்று எடுத்து, வாடி வதங்கித் தோலும் எலும்பும் உள்ள முகத்தை அவர்களுக்குக் காண்பித்துக் கம்பீர மாக, "ஓடாதீர்கள். உயர் குலச் சீமாட்டிகளே, போர் வீரனது இலக்கணம், பேதைகளாகிய பெண்களுக்கு ஒரு காலும் இடுக்கண் விளைவிக்காமையே. அதிலும், சுத்தவீர னாகிய யான் உங்களுக்கு இன்னல் இழைப்பேனா?" எனப் பகர்ந்தான். இவைகளைச் செவியிற் கேட்டலும், அப் பெண்கள் கெக்கலி கொட்டி நகைத்துச் சோம தத்தனைப் பரிகசிக்கத் தொடங்கினார்கள். உடனே அவன் மிகவும் வெகுளி மேற்கொண்டு, அவர்களைப் பார்த்து, "பெண்க ளுக்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற இந்நான்கு குணங்களே அணிகலன்கள் என்பது உயர் குலப் பெண் களாகிய உங்களுக்குத் தெரியாதா? ஆதலால், நீங்கள் இவ்வாறு சிரித்தல் முற்றிலும் தவறு. ஆயினும், யான் கோபம் கொள்ளவில்லை. ஏனெனில், வீரனுக்குப் பகைவ ரிடம் கோபம் வரவேண்டுமே யொழியப் பேதைகளாகிய மகளிர்களிடம் கோபம் வருவது அழகன்று. யான்

உங்கள் கட்டளையை நிறைவேற்றச் சித்தமாயிருக்கின்றேன்," என்றான். அவர்களிடம் இம்மாதிரி எவரும் பேசியதில்லையாதலால், அவர்கள் பின்னும் அதிகமாக நகைக்கத்தொடங்கினார்கள். சோம தத்தனுக்குக் கோபம் அதிகரித்தது.

அச்சமயத்தில் சத்திரத்துச் சொந்தக்காரன் வெளி வந்து, சமாசாரத்தையறிந்துகொண்டான்; சோம தத்தனைப் பார்த்ததும் அவன் ஒரு பித்தனெனக் கண்டுகொண்டான். நுட்ப புத்தியுடையவனாதலால், சத்திரக்காரன், சோம தத்தனை விளித்து, "ஐயா, கோபம் கொள்ளற்க. இவர்கள் அறிவிலிகள். தாங்கள் இவ்விடம் வந்த காரணம் யாது? தங்களுக்கு இரவு கழிக்கவேண்டின், இங்குப் படுக்க இடம் கிடையாது. மற்றச் சௌகரியங்கள் செய்ய யான் சித்தமாயிருக்கிறேன்," என்றான்.

சோம தத்தன் அவனை அம்மாளிகையின் சிற்றரசன் என்று மனத்தில் பாவித்துக்கொண்டு, அவன் தன்னிடம் மிகவும் வணக்கம் கொண்டிருப்பதற்குச் சந்தோஷித்து, "ஐயா, எனது அந்தஸ்தை நீர் அறிந்தீரெனக் கண்டு கொண்டேன். யான் இன்று இரவை இங்கேயே கழித்தல் வேண்டும். எனக்குப் படுக்கை இல்லையேயெனச் சிறிதும் வருத்தமில்லை. ஏனெனில், உண்மை வீரனாகிய எனக்கு நித்திரை என்பதே இல்லை; போர் செய்வதே நித்திரை. ஆயுதங்களே எனக்கு அணிகலன்கள்," என்றான்.

உடனே சத்திரக்காரன், "அப்படியாயின், மிகவும் நல்லது. தாங்கள் படுக்க நிலமும் பாறையும் இங்கு உள," என்று கூறினான். சோம தத்தன் நாள் முழுதும் பட்டினியாய் இருந்ததால், மிகுந்த கஷ்டத்துடனே அவனைத்

தொடர்ந்தான். பிறகு, தன் குதிரை மிகவும் உயர்ந்த ஜாதியாதலால், மிகவும் ஜாக்கிரதையாக அதைக் கவனிக்கச் சத்திரக்காரனிடம் சோம தத்தன் சொன்னான். அவனும் புன்சிரிப்புடன் அம்மெலிந்த குதிரையைக் கொண்டு போய்க் கட்டிவிட்டு வந்தான். அதற்குள் அவ்விரு பெண்களும் அவனுடைய கவசத்தை நீக்க அவனுக்கு உதவி புரிந்தார்கள். அதில் அனேக கட்டுகள் இருந்ததனால் அவைகளை நீக்க அவன் சம்மதிக்கவில்லை. கடைசியில் உடம்பில் உள்ள கவசத்தை மாத்திரம் நீக்கினார்கள். அப்பொழுது அவனைப் பார்ப்போர் நகைக்காமலிருக்க முடியாது.

பிறகு சத்திரக்காரன் சோம தத்தனுக்குப் போஜனம் அளித்தான். சோமதத்தன் போஜனம் செய்தவிதம் ஒன்றும் அறியாத அறிவிலியையும் நகைக்கச் செய்தது. சத்திரக்காரன் சிறு ரொட்டித் துண்டும், நன்றாய் வேகாத பணியாரமும், கொஞ்சம் தண்ணீருமே கொடுத்தான். ஆயினும், சோம தத்தன் முக மூடியை எடுக்க மறுத்தானதலால், அதைச் சற்றுத் தூக்கி வேறொருவர் ரொட்டித் துண்டு முதலியவற்றை அவன் வாயிற் போட வேண்டுவதாயிற்று. இவ்வாறு அந்த எளிய போஜனம் அருந்த மணி ஒன்றாயிற்று. பிறகு நீர் அருந்த வேண்டுமே! அதற்கு என் செய்வது? சத்திரக்காரன் ஒரு குழாயை எடுத்து முக மூடியின் சந்தின்வழியாக அதில் நீரை ஊற்றிக் கொடுத்தான். சோம தத்தன் சிறிதேனும் கஷ்டத்தைப் பொருட்படுத்தவில்லை; எல்லாத் துன்பங்களையும் பொறுத்தான். மற்றவர் தன்னைப் பரிகசிக்கத் தக்க விதமாய்த் தான் நடந்துகொள்வதைப்பற்றி அவன்

சிறிதேனும் எண்ணினானில்லை. இவ்வாறு போஜனமும் முடிந்தது.

---

## 4. சோம தத்தன் போர் வீரனாக வேண்டிச் சடங்கை முடித்தல்

போஜனம் செய்து முடிந்ததும், சோம தத்தன் அந்தச் சத்திரக்காரனைத் தனியாக ஓர் அறைக்கு அழைத்துச்சென்று, கதவைத் தாழிட்டு, அவனுடைய கால்களில் வீழ்ந்து, "பெரியவரே, உம்மால் எனக்கு ஓர் அனுகூலம் நடக்க வேண்டும். அதைச் செய்ய நீர் மறுக்கக் கூடாது," என்றான்.

சத்திரக்காரன் ஒன்றும் தோன்றானாய்ச் சிறிதுநேரம் அதிசயித்து நின்று, பிறகு அவனை யெழுப்பி நிறுத்தி, "என்ன ஐயா, என்னால் உமக்கு என்ன ஆகவேண்டும்? சொல்லும்," என்றான். உடனே சோம தத்தன், "உமது பெருந்தன்மை எனக்குத் தெரிந்ததால்தான் உம்மை யான் வேண்டிக்கொண்டேன். தங்கள் தாராள சிந்தையும், தயாள குணமும், மிக்க சௌரியமும், பராக்கிரமமும் உலகம் அறிந்த விஷயமே. நான் போர் வீரனாகி உலகப் பிரசித்தியடைய வேண்டுகின்றேனாதலால், தங்களது உதவியை நாடி நின்றேன். தாங்கள் அருள் சுரந்து, என்னை அந்தப் பாக்கியத்தை யடையச் செய்யவேண்டும். இரவு கழிந்ததும் நாளைக் காலையிலேயே தாங்கள் அச்சடங்கை முடிக்க வேண்டும்," என்றான்.

சத்திரக்காரனுக்கு முன்னமே சோம தத்தன் எவ்விதப் பித்தம் பிடித்தவன் என்பது தெரியுமாதலால்,

தானும் அவ்வேடிக்கையைச் சிறிது அனுபவிக்க எண்ணி, அவ்வாறே செய்யச் சம்மதித்தான்.

போர் வீரச் சடங்கு முடிப்பதற்கு முன்னிரவு கவசத்தை ஒரு கோயிலில் நீரில் போட்டு வைத்து, அதை வீரன் தூங்காமல் காக்கவேண்டும். சத்திரக்காரன் வேடிக்கைக்காகவே சம்மதித்தானாதலால், அம்மாளிகையிலிருந்த கோயிலைப் புதுப்பிக்கவேண்டி அப்பொழுதுஇடித்துவிட்டதாகவும், கோயிலில்லாவிட்டால் பாதகமில்லை யென்றும் கூறி, முற்றத்தில் இருந்த ஓர் அகன்ற தொட்டியில் கவசத்தைப்போட்டுச் சோமதத்தனை இரவுமுழுதும் அதைக் காக்கச் சொன்னான்; பிறகு சோம தத்தனிடம் ஏதாவது பணம் இருக்கின்றதா எனக் கேட்டான். அதற்குச் சோம தத்தன், தான் ஒரு புத்தகத்திலும் போர் வீரன் பணம் எடுத்துச் செல்ல வேண்டும் என்று படித்ததில்லையாதலால், கையில் ஒருகாசும் கொண்டுவரவில்லை யென்று பகர்ந்தான். சத்திரக்காரன் உடனே அவனை விளித்து, "ஐயா, சோம தத்தரே, நீர் இனிமேல் இவ்வாறு செய்யாதீர். புத்தகங்களில் இவ்வளவு சிறு விஷயத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுவது அவசியமில்லை என்பதற்காக ஆசிரியர்கள் சொல்லாமல் விட்டார்களே யொழிய, மற்றொன்றும் இல்லை. பொதுவாக ஒரு வீரன் வெளிக்கிளம்பினால், அவனுடன்கூட அவனுக்கு உதவி புரிய ஓர் ஆள் புறப்படுவதுண்டு. அவன் வசம், அவ்வீரன் காயமடைந்தால், காயத்தை ஆற்றுவதற்கு மருந்தும், வேண்டிய உணவுப் பொருள்களும், செலவிற்குப் பணமும் கொடுப்பதுண்டு. அப்படி ஓர் ஆள் இல்லாமற்போனால், வீரனே அவைகளைக் கொண்டு செல்லல் வேண்டும்," என்றான்.

சோம தத்தன் அவைகளை மிகவும் கவனித்து அறிந்து கொண்டு, தானும் அவ்வாறே அது முதல் செய்வதாக மொழிந்தான்.

இரவு மணி பன்னிரண்டு இருக்கும். சத்திரத்து முற்றத்தில் கவசத்தை ஒரு தொட்டியில் போட்டுவிட்டு ஒரு கையில் ஈட்டியும் மற்றொரு கையில் கத்தியும் கொண்டு அங்கும் இங்கும் சோம தத்தன் உலாவிக்கொண்டே யிருந்தான். இதற்குள் சத்திரக்காரன் இவ்விஷயத்தைச் சத்திரத்தில் உள்ள அனைவருக்கும் சொல்ல, எல்லோரும் இவ்விந்தையைக் காணக் குழுமினர். அவர்கள் அவனது அறியாமைக்கு அதிசயித்தார்கள். ஆனல், சோம தத்தன் வேறெதையும் கவனியாமல், தன் வாய்க்குள் ஏதேதோ சொல்லிக்கொண்டு, சிலசமயம் கவசத்தை உற்று நோக்கி யும், சில சமயம் கத்தியையோ, ஈட்டியையோ ஆட்டிக் கொண்டும், உலாவிக்கொண்டே யிருந்தான். ஆகாயத் தில் சந்திரன் நன்ருகப் பிரகாசித்ததால், அவன் செய்யும் ஒவ்வொரு விஷயமும், பிறர் கண்களுக்கு நன்கு புலப்பட் டது.

இஃது இங்ஙனமிருக்க, அச்சத்திரத்தில் இறங்கி யிருந்த ஒருவன், தனது குதிரைக்குத் தண்ணீர் காட்ட வேண்டி அவ்விடத்திற்கு வந்து, அந்தத் தொட்டியிலுள்ள கவசத்தை எடுத்து வெளியே எறிந்துவிட்டு, தன் குதி ரைக்குத் தண்ணீர் காட்டினன். அது கண்ட சோம தத் தன் கோபாவேசத்துடன், "ஏ! வீரனே, உனக்கு அறி வில்லையா? யான் ஜகப்பிரசித்தி யடையப் போகும் அதி வீர பராக்கிரம ராய துர்க்க கேசரி சோம தத்தன் என்பதை நீ அறியாயா? அறியாவிட்டாலும் என்ன? நீ இப்படிப்

பட்ட துன்மார்க்க காரியம் செய்யலாமா? இப்பொழுது ஒரு நொடிப்பொழுதில் யான் உன்னை எமனுலகிற்கு அனுப்புகிறேன்!" எனக் கர்ஜித்து, அவன்மேல் பாய்ந்து, ஈட்டியால் குத்தியும், கையைப் புடைத்தும் அவனைக் கீழே வீழ்த்தினன்; பிறகு, கவசத்தை அதி ஜாக்கிரதையாகவெடுத்து, மறுபடியும் அந்தத் தொட்டியில் போட்டுவிட்டு, முன்போலவே காவல் புரிந்துவந்தான். இவைகளையறியாத மற்றொருவன், அவ்விடம் அவனது குதிரையையும் இட்டுவந்து கவசத்தைவிட்டெறிந்துவிட்டுத் தண்ணீர் காட்டலானன். அப்பொழுது சோமதத்தன் அவனைக் கத்தியால் மண்டையில் குத்தி, இரண்டு மூன்றிடங்களில் காயம் உண்டாக்கிவிட்டான். அதற்குள் அங்கு மறைந்திருந்த ஜனங்களும் அவ்விடம் ஓடிவந்தார்கள். குதிரைக்காரர்களுக்குச் சொந்தமானவர்கள் கற்களையெடுத்துச் சோமதத்தன்மேல் சரமாரியாகப் பொழிந்தார்கள். உடனே, சோமதத்தன் கடவுளைத் தன் மனத்தில் நினைத்துக்கொண்டும், ரூபமதியைத் தன்னைக் காப்பாற்ற வேண்டிக்கொண்டும் தன்னால் கூடியவரையில் சமாளிக்கப்பார்த்தான். ஆனால், அது முடியாமற் போயிற்று. ஆகவே, தன்னுடைய உடம்பைக் கவசத்தாலும், தலையைக் கேடயத்தாலும் மூடிக்கொண்டு, தொட்டியிலேயே உட்கார்ந்துவிட்டான். அப்பொழுது சத்திரக்காரன் வந்து, எல்லாரையும் விலக்கி, "இவன் பைத்தியக்காரன் என்று முன்னமே யான் உங்களுக்குச் சொன்னேனே! இவன் அனைவரையும் கொன்றாலுங்கூட இவன்மேல் ஒருவரும் வழக்குத் தொடுக்கமுடியாது; பைத்தியக்காரன் என்று இவனை விட்டுவிடுவார்கள்," என்றான்.

இதற்குள் சோம தத்தன் அங்கிருந்தவர்களை நோக்கி, "தைரியமற்றவர்களே, ஓர் உண்மை வீரனை நீங்கள் இப்படி எதிர்ப்பது அழகன்று. ஆனால், நான் இதற்குப் பயந்தவனல்ல. வாருங்கள் ; பார்க்கலாம். இவைகளை இவ்வளவு நேரம் தடுக்காமல் வேடிக்கை பார்த்த இம்மாளிகையின் அதிகாரி ஒரு வீரனல்லன். அவனுடைய இழிய குணம் நன்கு விளங்குகின்றது," என்று பலவாறு பேசினான்.

ஆனால், அங்குக் கூடியவர்களனைவரும், சத்திரக்காரன் சொன்ன பிற்பாடு, அவ்விடம்விட்டு அகன்றார்கள். காயம் பட்டவர்களை அவர்கள் எடுத்துச் சென்றார்கள். சோம தத்தனோ, முன் போலவே அவனது கவசத்தைத் தொட்டியில் போட்டுக் காவல் புரியத் தொடங்கினான்.

சத்திரக்காரனுக்கோ, எப்படியாவது சோம தத்தனை வெளிக் கிளப்பிவிட்டாற் போதுமெனத் தோன்றிற்று. ஆதலால், அவனுடைய பைத்தியக்கார எண்ணத்தைச் சீக்கிரம் நிறைவேற்றி அனுப்புவதே சிறந்த வழியென அவனுக்குத் தோன்றியதால், அவன் சோம தத்தனை யணுகி, "வீரரே, இங்கு உம்முடன் போர் செய்த அறிவிலிகளை நீர் எள்ளளவும் மதிக்க வேண்டா. இப்பொழுது அவர்கள் உம்மை அவமரியாதையாக நடத்தியதுபற்றி யான் மிகவும் விசனிக்கின்றேன். எனக்கு அவ்விஷயங்கள் இதுவரையில் தெரியாமற்போயின. ஆயினும், யான் அவர்களை நன்கு தண்டித்தேன். ஆதலால், நீர் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டா. மேல் நடக்க வேண்டிய வேலையை நாம் கவனிக்க வேண்டும். கோயிலிலேயே ஒருவனைப் போர் வீரனாகச் செய்யும் சடங்குகளைச் செய்ய வேண்டும். என்றாலும், இங்குக் கோயில் இல்லாத

தால், அருகேயிருக்கும் மைதானத்தில் அச்சடங்குகளைச் செய்து முடிக்கலாம்,'' என்றான். சோம தத்தனும் அவையனைத்தையும் உண்மையென நம்பியே சம்மதித்தான். அவனுக்கு அச்சடங்குகளை உடனே நிறைவேற்றிக்கொண்டு வெளிச்சென்று புகழ் பெற ஆவல் இருந்தது. ஆதலால், சத்திரக்காரன், ஒரு வேலையாள், அவ்விரு பணிப்பெண்கள், சோம தத்தன் முதலானவர்கள் பக்கத்திலிருந்த மைதானத்திற்குச் சென்றார்கள். சோம தத்தனை நோக்கிச் சத்திரக்காரன், கிழக்கு முகமாக நின்று காளி தேவியை வழிபடும்படி சொன்னான். பிறகு, கவசம், ஈட்டி, கத்தி முதலியவைகளுக்குத் தூபமிட்டுக் கற்பூர ஆரதி எடுத்துச் சோம தத்தனைக் குனியச் செய்து, கத்தியால் அவன் புஜத்தில் ஓங்கி ஒரு தட்டுத் தட்டினான். பிறகு அவ்விரு பெண்களையும் சத்திரக்காரன் பார்த்து, "சீமாட்டிகளே, இராய துர்க்க கேசரி சோம தத்தருக்குக் கவசம் முதலியவைகளை யணிய உதவி புரியுங்கள்,'' என்றான்.

அவர்களும் புன்னகையுடன் அவ்வாறே செய்து முடித்தார்கள். உடனிருப்போர்களுக்கு ஒவ்வொரு விஷயமும் பரிகாசமாகத் தோன்றினாலும், சோம தத்தன் எல்லாவற்றையும் உண்மையெனவே நம்பினான். சத்திரக்காரனுக்குப் பல தடவை சோம தத்தன் வந்தனம் செய்தான்; பிறகு நேராகச் சத்திரம் சென்று, நீல வேணிக் குதிரையை அவிழ்த்துக்கொண்டு வந்து, சத்திரக்காரன் உதவியினால் அதன்மேல் ஏறிக்கொண்டு, அவனிடம் உத்தரவு பெற்றுப் புறப்பட்டான்.

## 5. சோம தத்தனது முதற் போர்

சோம தத்தன், நீல வேணியின்மேல் ஏறி உட்கார்ந்து, மிக்க சந்தோஷத்துடன், தான் வீரன் செய்யவேண்டிய சடங்குகளை நன்கு முடித்ததால், புகழ் அடைவதே மிச்சம் என நினைத்துக்கொண்டு, உல்லாசமாகப் போய்க்கொண்டிருந்தான். அச்சமயம், கையில் பணமும், சில மூலிகைகளும் வீரர்கள் எடுத்துச் செல்ல வேண்டுமென அவனுடைய குருவாகிய சத்திரக்காரன் சொன்னது அவன் ஞாபகத்திற்கு வர, உடனே குதிரையைத் தன் வீடு நோக்கிச் செலுத்தினன். எப்பொழுதும் குதிரைகளுக்கு வீடு செல்வதில் மிகவும் இஷ்டமல்லவா ? ஆகவே நீல வேணியும், மிக்க வேகத்துடன் சென்றுகொண்டிருந்தது. அச்சமயம் வழியே நான்கு பாதைகள் சந்தித்த ஓர் இடம் குறுக்கேயிருந்தது. அங்குச் சோம தத்தன் சற்றுக் குதிரையை நிறுத்தி, நிதானிக்கத் தொடங்கினன். ஏனெனில், வீரர்கள், அனேக பாதைகள் சந்திக்குமிடம் அடைந்தால், தாமாக ஒரு வழியும் போகாமல், குதிரை இஷ்டத்திற்கு விட்டுவிட வேண்டும். அப்பொழுது கடவுள் ஆஞ்ஞைபோலக் குதிரையும் செல்லும் ; வழியில் புகழ் அடையக் கூடிய சம்பவங்களும் நேரும். இவ்வாறு சோம தத்தன் புத்தகங்களில் படித்திருந்தானதலால், குதிரையை அதன் இஷ்டம்போல விட்டுவிட்டான். அதுவும் ஒரு பாதை வழியே சென்றது. சில வியாபாரிகள், அவர்களுடைய வேலைக்காரர்களுடன், ஆக்ரா (Agra) விற்கு வியாபார விஷயமாய் அவ்வழியே போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களைச் சோம தத்தன் கண்டான்.

உடனே தான் அன்றே வீரனாக ஆனதால், தன்னுடைய சௌரியத்தைப் பரீக்ஷிக்கவே கடவுள் முதன் முதல் சில வீரர்களைத் தான் சந்திக்கச் செய்தாரென நிச்சயித்துக் களைத்துக்கொண்டு, உரத்த குரலுடன், "ஓ வீரர்களே, பிரபுக்களே, யானே உலகப்பிரசித்திபெற்ற இராயதுர்க்க கேசரி. நீங்கள் இப்பொழுதே என் முன் வணங்கி ரூப சௌந்தர்ய திலக ரூபமதியே உலகப் பிரசித்தியும் புகழும்பெற்ற வனப்புள்ள மாது சிரோமணியென ஒப்புக்கொண்டீர்களாயின், உங்களை விட்டேன்; அப்படியின்றேல், நீங்கள் ஒவ்வொருவராக வந்தாலும் சரி; அனைவரும் ஒருமிக்க என்னை எதிர்த்தாலும் சரி; யான் சிறிதும் அஞ்சேன். உங்களுடன் சமர் புரிவது திண்ணம்," என்றான்.

வந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லையெனினும், கணப்பொழுதில் சோம தத்தன் எப்படிப்பட்ட பித்தம் தலைக்கேறியவன் என்பதைக் கண்டுகொண்டு, அவர்களில் ஒருவன், "சுத்த வீரரே, நீர் சொல்லியது முற்றிலும் சரியே. ஆயினும், நாங்கள் அப்படிப்பட்ட இலாவண்ய வதியைப் பார்க்காமல் எவ்வாறு ஒப்புக்கொள்வது? எங்களுக்கு அவளை நீர் காட்டினால், நாங்கள் நீர் சொல்லுவது சரியானால், ஒப்புக்கொள்கிறோம்," என்று மறுமொழி பகர்ந்தான்.

அதைக் கேட்டதும் சோம தத்தனுக்கு எல்லையற்ற கோபம் வந்தது. "ஆஹா! நன்கு சொன்னாய்! சுத்த வீரனாகிய என்னுடைய வார்த்தையில் உனக்கு நம்பிக்கையில்லையா? ஒரு நொடிப்பொழுதில் உன்னை நிலத்தில் வீழ்த்தி நம்பச் செய்து, அச்சீமாட்டிக்கு அடிமையாக அனுப்புகின்றேன்!" என்று சொன்னான்.

அப்பொழுது மற்றொரு வியாபாரி, "ஐயா, வீணே எதற்கு இவ்வம்பு? ஒரு நெல் அளவு சிறிய படமாயிருந்தாலும் போதும். அம்மாதின் சித்திரத்தை நீர் காண்பியும். அவளுக்கு ஒரு கண் குருடாயும், நாசி நீண்டும், வயிறு பருத்தும், கை கால்கள் மெலிந்தும் அவலக்ஷணமாகவிருப்பினும், நாங்கள் அவளைப்போன்ற வனப்புள்ளவள் இல்லையென ஒப்புக்கொள்கிறோம்," என்றான்.

இச்சொற்களைக்கேட்டதும் சோமதத்தனுக்கு அதிக கோபம் வந்தது. உடனே அவ்வியாபாரியை ஈட்டியின் ஒரே குத்தால் யம புரத்திற்கனுப்பக் கருதி, அவன்மேல் பாய்ந்தான். அவனுக்கு நல்ல காலமாதலால், நீல வேணி தடுக்கிக்கீழ் விழுந்தது. சோமதத்தனும்விழுந்தான். எழுந்திருக்க மிகவும் பிரயத்தனப்பட்டும் முடியாமற்போயிற்று. ஏனெனில், அவன்மேலிருந்த கவசத்தின் பளு அவ்வளவு அதிகம். ஆயினும், அவன் சும்மாவிருக்கவில்லை. "போக்கிரிகளே, உங்களை விடேன். யான் எழுந்ததும் உங்களைச் சும்மாவிடேன்; நையப் புடைப்பேன். ஓடாதீர்கள்; நில்லுங்கள்," என்று வீர வார்த்தைகள் பேசிக் கிடந்தான்.

அப்பொழுது வியாபாரிகளுடைய வேலைக்காரர்களில் ஒருவன், இந்த டம்ப வார்த்தைகளைக் கேட்டு மனம் பொறுணுகி, அவனை அணுகி, ஈட்டியைப்பிடுங்கி உடைத்து, சோம தத்தனை நையப் புடைத்தான். அவன் எஜமானன் அவனைத் தடுத்தும், ஒரு சிறிதும் பிரயோசன மில்லாமற் போயிற்று. கடைசியில் அவன் கை வலி எடுத்த பிறகே சோம தத்தனை விட்டான். ஆயினும், சோம தத்தன், சௌரிய மொழிகளை மொழிந்துகொண்டே யிருந்தான். இதற்குள் அவ்வியாபாரிகள் தங்கள் வழியே சென்றார்கள்.

சோம தத்தனே, உடம்பு முழுதும் பலத்த காயத்துடன், ஓர் ஆதரவுமற்றுத் தனியே கிடந்தான். அப்பொழுது அவன் படித்த புத்தகங்களிலுள்ள வீரர்கள் அம்மாதிரிக் கஷ்டங்கள் அடைந்ததைஞாபகப்படுத்திக்கொண்டு, சற்று மனச் சமாதானம் செய்துகொண்டான்.

அச்சமயம் சோம தத்தனுடைய அண்டை வீட்டுக்காரன், மற்றோர் ஊர் சென்று, சில பண்டங்களை விற்றுவிட்டுத் தன் ஊர் செல்ல அவ்வழியே வந்துகொண்டிருந்தான். அவன் கீழே கிடந்த சோம தத்தனைக்கண்ணுற்று, யாரோ ஒரு போர் வீரன் என எண்ணி, அவனை எடுத்து நிறுத்தி, முக மூடியை விலக்கிப் பார்க்க, சோம தத்தனென அறிந்து, மிகவும் விசனப்பட்டு, அவன் அவ்வாறு கிடக்கக் காரணம் என்ன என விசாரித்தான்.

அப்பொழுது சோம தத்தன், தன்னுடன் பகை கொண்ட ஒரு வீரன் அநேகரை அழைத்துக்கொண்டு தன்னுடன் போர்செய்யவந்தானென்றும், ஆயினும், தான் மிக்க பராக்கிரமத்துடன் சண்டைசெய்ததாகவும், அச்சமயம் தன் குதிரை கால் இடறிக் கீழ் வீழ்ந்ததால் தானும் விழுந்ததாகவும், அப்பொழுதே அவர்கள் 'பிழைத்தோம்!' என ஓடிவிட்டதாகவும் கூறினன்.

ஆனல், அவ்வூரான், சோம தத்தனுடைய பைத்தியத்தை யறிந்தவனுதலால், அவனைச் சமாதானம் செய்து, ஊருக்கு அழைத்துச் சென்றான். மாலைப் பொழுதில் அவர்கள் அவ்வூர் எல்லையை யடைந்தார்கள். அவ்வூரான் சோம தத்தனுடைய எளிய நிலையை எவருங் காணு வண்ணம், நன்ருக இருட்டும் வரையில் கிராமத்திற்கு வெளியி

லேயே தங்கி, பிறகு சோம தத்தனை அவனுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

அச்சமயம் சோம தத்தன் வீட்டிலுள்ளோர் அனைவரும், "சோமதத்தன் எங்குச் சென்றானோ! நான்கு நாட்களாக அவனையும் அவனுடைய குதிரையையும் கவசம் கத்தி முதலியவைகளையும் காணோமே! போர்செய்து புகழ் பெற வேண்டுமென அவன் அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருந்தவனாதலால், அவ்வாறே அவன் செய்தானோ!" என்று பலவாறு பேசிக்கொண்டு இருந்தார்கள்.

அப்பொழுது கதவு தட்டும் சத்தம் கேட்கவே, உள்ளிருந்தவர்கள் ஓடி வந்து, கதவைத் திறந்தார்கள். மிக்க அலங்கோல ஸ்திதியில் சோம தத்தன் இருந்ததைப் பார்க்க அவர்களுக்கு மிகவும் துக்கம் வந்தது. ஆயினும், சோமதத்தனோ, அவர்களை நோக்கி, "உலகத்தில் தங்களுக்குச் சமானமில்லை என்று இறுமாப்புக்கொண்டிருந்த பத்து வீரர்கள் என்னுடன் சமர் புரிந்தார்கள். ஆனாலும், நான் ஒருவனே அவர்களை நன்கு புடைத்தேன். அச்சமயம், என் குதிரை இடறி விழுந்தது. அவர்கள் 'பிழைத்தோம்!' என ஓடிவிட்டார்கள்," என்று பெருமையாகச் சொன்னான். ஆனால், அங்குக் கூடியவர்களுக்கு அவனுடைய பைத்தியம் தெரியுமாதலால், "உண்மையே! நீர் சொல்வதற்கு முன்னாலேயே, உமது கீர்த்தி இங்குங்கூடப் பரவிற்று. உமது சௌரியமும் வீரச் செயல்களும் உலகமெங்கும் பரவிவிட்டன. ஆதலால், இப்பொழுது நீர் இளைப்பாறும்," எனச் சொன்னார்கள்.

பிறகு அவ்வீட்டுப் பெண் பிள்ளைகள் சோம தத்தனையழைத்துச் சென்று, உடைகளை நீக்கி, ஸ்நானம் செய்வித்

துப் படுக்கையில் கிடத்தினார்கள். அப்பொழுது சோம தத்தன், "என் உடம்பில்காயங்கள்பலவிருக்கின்றனவா?" என, அவர்கள், "ஒன்றுமில்லை," என்றார்கள். சோம தத்தன், "அப்படியாயின், சரி. எனக்குக் குதிரையினின்று கீழ் விழுந்ததால் உடம்பு சிறிது நோகின்றது. குதிரை மாத்திரம் விழாமலிருந்தால், அத்துஷ்டவீரர்களை ஒருவன் தப்பாமல் யம புரம் அனுப்பியிருப்பேன். இருப்பினும், பாதகமில்லை. மறுபடியும் அவர்களைச் சந்தித்து யான் தோற்கடித்து, ரூபமதிக்கு அடிமைகளாக அனுப்புவேன்," என அரற்றிக்கொண்டிருந்தான்.

## 6. சோமதத்தன் வெளிச்செல்லாவண்ணம் ஊரார் செய்த முயற்சிகளும், சோம தத்தன் பாலாஜியுடன் வெளிச் சென்றதும்

இரவு முழுதும் சோம தத்தன் அரற்றிக்கொண்டிருந்ததை அவன் வீட்டிலுள்ளவர் அனைவரும் கேட்டுக் கொண்டே யிருந்தார்களாதலால், வைகறைப் பொழுதிலேயே எழுந்து, அவ்வீதியில் அவர்களுக்கு முக்கிய நண்பர்கள் சிலரை அழைத்து வந்து, சோம தத்தனை வெளிக் கிளம்பாதபடி செய்தற்கு என்ன செய்வதென்று யோசித்தார்கள். பலர் பல வேறு வழிகளைச் சொல்லினர். சிலர் அவனை அயல்நாட்டிற்குஅழைத்துச் செல்லவேண்டுமென்றனர். சிலர் அவனைக் கட்டிப்போட வேண்டுமென்றனர். ஆனால், அங்குக் கூடியவர் அனைவர்க்கும் சோம தத்தனுடைய பித்தம் நன்கு புலப்பட்டது.

முடிவில் சோம தத்தனுடைய முக்கிய நண்பர் இருவர், (ஒருவர் வர்த்தகர், மற்றவர் விவசாயி) ஓர் ஆலோசனை சொல்லினர். அதாவது, சோம தத்தன் அனேக வீரச் செயல்களைப்பற்றி எழுதிய புத்தகங்களைப் படித்ததாலேயே அவன் மனம் மாறியதால், அவ்வீட்டிலுள்ள புத்தகங்களைப் படித்துப் பார்த்து, வீரச் செயல்களைப்பற்றிச் சொல்லும் புத்தகங்களை அனலி லிடவேண்டும். பிறகு, அப்புத்தக அறையையே அவன் கண்டு கொள்ளாவாறு, அதைச் சுவர் வைத்து மூடிவிட வேண்டும் என்பது.

இந்த யோசனையே அங்குக் கூடியவர்களுக்கும் மிகவும் சிறந்ததாகப் பட்டது. ஆதலால், அவ்வாறே சோம தத்தன் வீட்டுப் பெண்டிர் இருவரும் செய்ய நினைத்தனர். அவர்கள் புத்தகங்கள் எல்லாவற்றையுமே தீயிலிடவேண்டுமென்றார்கள். ஆனால், நண்பர்களான வர்த்தகரும் விவசாயியும் அதற்கு ஒப்பவில்லை.

பிறகு அவர்கள் புத்தக அறைக்குச் சென்று, புத்தகங்களை யெடுத்து, ஒவ்வொன்றாகப் பரிசோதிக்க ஆரம்பித்தார்கள். அச்சமயம், சோம தத்தன் உரத்து, "வீரர்களே, போர் வீரர்களே, உங்களால் ஆனமட்டும் பாருங்கள். என்னைத் தோற்கடிப்பது உங்களால் கூடாத காரியம்," என்று கூவிக்கொண்டே, தனது படுக்கையை விட்டெழுந்து, கத்தியை வலசாரி இடசாரியாகச் சுழற்றிக் கொண்டிருந்தான். உடனே நண்பர்கள் அங்குச் சென்று, "ஐயா, தாங்கள் படுங்கள். தங்கள் சௌரியம் உலகம் அறிந்ததே. தங்கள் சத்தத்தைக் கேட்டே அவ்வீரர்கள் ஓடிப்போய்விட்டார்கள்," என்று அவனது பெரும் பித்தம் அடங்கமொழிந்து, அவனைப் படுக்கையில் கிடத்தினார்கள்.

பிறகு அவர்கள் அவனுக்குச் சிறிது ரொட்டியும் நீரும் அளித்து, நித்திரை போகச் சொன்னார்கள். அவனும், முன்னாள் நிகழ்ச்சியால் மிகவும் களைத்திருந்தானாதலால், விரைவாகவே நித்திரையிலாழ்ந்தான்.

அச்சமயம், அவ்வீட்டுப் பெண்டிர்களும் அவர்கள் நண்பரும் விரைவில் புத்தகங்களையெல்லாம் ஆராய்ந்து, அனலிலிட்டார்கள். அந்தோ! ஆயிரக் கணக்கான புத்தகங்கள்—நிலம், வீடு முதலியவைகளை விற்றுச் சோம தத்தன் வாங்கிய புத்தகங்களனைத்தும் ஒரு கணப்பொழுதில் தீக்கிரையாயின. பிறகு, மண்ணும் சுண்ணும்பும் கலந்து கதவைப் பெயர்த்து, அவ்வறையையே மூடச் செய்தார்கள். அவர்களுக்கே அங்கு ஓர் அறை இருந்ததோ என ஐயமுண்டாகும்படி செவ்வையாக அவர்கள் எடுத்த கருமத்தை முடித்தார்கள்.

சோம தத்தனோ, அன்று முழுதும் தூங்கினான். அன்று இரவு, அவனுக்குப் பெருத்த ஜுரம் உண்டாயிற்று. மூன்று நாட்கள் விடாமல் ஜுரம் அடித்துக் கொண்டேயிருந்தது. ஜுரத்திலும் அவன் போர், வீரச் செயல் முதலிய விஷயங்களைப்பற்றியே பிதற்றிக்கொண்டிருந்தான். மூன்றாம் நாள் இரவு ஜுரம் சற்றுக் குறைந்தது. எனினும், அவன் ஒரு வாரம் படுக்கையிலேயே கிடக்கும்படி ஆயிற்று. உடம்பு குணமானவுடன் எழுந்து, நேராக அவன் புத்தக அறையை நோக்கிச் சென்றான். ஆனால், அவ்வறை இருந்தவிடமே கண்ணுக்குப் புலப்படவில்லை. சுற்றிச் சுற்றிப் பார்த்தான். என்ன பார்த்தும், பயன் என்ன? அவ்வறையைக் காணவில்லை. உடனே அவன் பெண்டிர்களைக் கூப்பிட்டு, "என் புத்தக அறை

எங்கே? புத்தகங்கள் எங்கே? நீங்கள் நான் இல்லாத பொழுது அவற்றை வேறெங்காவது வைத்தீர்களா?" என்று வினவினன். ஆனால், அவ்விருவரும், சோம தத்தனுடைய மனப்பிரமைக்குத் தக்கவாறே மறு மொழி பகர்ந்தனர்: அவர்கள் அவனை மிக்க பரிவுடன் நோக்கி, "ஐயா, நாங்கள் என்ன சொல்லுவோம்! ஆகாயத்தினின்று திடீரென ஒருவன் இறங்கி வந்தான். அவன் ஏதோ ஜபம் ஜபிக்க, அறையே புத்தகங்களுடன் மேல் கிளம்பிப் போயிற்று. அவன் போகும் பொழுது, 'நான் சோம தத்தனுடைய விரோதி. இப்புத்தகங்கள் எல்லாவற்றையும் அவன் படித்தால், அவன் என்னைக்காட்டிலும் அதிக சாமர்த்தியவான் ஆய்விடுவான். அதனாலேயே யான் இவ்வாறு செய்கிறேன்,' என்று சொல்லி மறைந்தான்,'' என அவனுக்கு மிகவும் சாமர்த்தியமாகச்சொன்னார்கள். சோம தத்தன், பித்தம் பிடித்தவனாதலால், அக்கதையை நம்பினான். அவன் புன்சிரிப்புடன், "உண்மையே! அவனுக்குப் பூசன் என்று பெயர். அவன் தன் மந்திர பலத்தால் மற்றொரு வீரனுக்கு உதவி புரிகிறான். ஆயினும், அவன் சுத்த வீரனாகிய என்னை யாது செய்யக் கூடும்?'' என்றான். அவர்கள், "ஆம்,'' என ஒப்புக் கொண்டார்கள்.

மேற்சொல்லிய சம்பாஷணை நடந்து இரண்டு மூன்று வாரங்கள் வரை சோம தத்தன், அமைதியுடன் வீட்டிலேயே யிருந்தான். அவன் வெளிச் செல்ல வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவனாகவே தோன்றவில்லை. பொழுது போவதற்குள், வியாபாரியும், விவசாயியும் அவன் வீட்டிற்கு வந்து அவனுடன் அளவளாவிச் செல்

வார்கள். சோம தத்தன் அவர்களிடம், நாடு முழுதும் துஷ்டர்கள் குடிகொண்டிருக்கிறார்களென்றும், அவர்களை யொழிக்க அனேக வீரர்கள் வேண்டுமென்றும் சொல்வது வழக்கம். சில சமயம் அவர்கள் அவன் கூறுவது உண்மையன்று என மறுப்பார்கள்; சில சமயம் ஒப்புக்கொள்வார்கள். ஏனெனில், அவன் இஷ்டம்போல நடந்தாலே, அவன் மனத்தைத் திருப்ப முடியும் என அவர்கள் கருதினார்கள்.

இப்படியிருக்கையில் ஒன்றும் அறியாத சாதாரண வேலையாள் ஒருவன், அவன் வீட்டிற்குச் சற்று அப்பால் வசித்து வந்தான். அவனை ஒரு நாள் சோம தத்தன் கூப்பிட்டு, "அப்பா, உன் பெயர் என்ன?" என்றான். அவன், "ஐயா, என் பெயர் பாலாஜி. என்னால் ஆக வேண்டுவது யாதாயினும் உண்டாயின், சொல்லுங்கள்," என்றான்.

சோம தத்தன் அவனுடைய க்ஷேம லாபங்களை விசாரித்து, அவன் மிகவும் ஏழ்மை ஸ்திதியில் இருப்பதாகக் கண்டுகொண்டான். அவன் அறிவாளியுமல்லன். சோமதத்தன் அவனிடம் தான் ஒரு பெரிய வீரனென்றும் அவன் தன்னுடன் வந்தால் நிரம்பப் பணமும் கௌரவமும் புகழும் கிடைக்கும் என்றும், அவனை ஓர் அரசனாகச் செய்யும் வன்மையும் தனக்கு உண்டென்றும் பலவாறு சொன்னான். பிறகு சோம தத்தன் நாள் தவறாமல் அவனை யழைத்து அவனுக்குப் போதித்ததனாலும் தரித்திரத்தைச் சீக்கிரம் போக்கப் பாலாஜி ஆசைகொண்டதனாலும் சோமதத்தனுடன் புறப்படச் சம்மதித்தான். சோமதத்தன் மனம்பூரித்தான்; சத்திரக்காரன் சொன்னவாறு, தனக்கு ஓர் ஆள் கிடைத்ததுபற்றிச் சந்தோஷித்துக் கடவுளே தான் புகழ்

பெற வேண்டிப் பாலாஜியைத் தன்னிடம் அனுப்பினதாக நினைந்து, கடவுளை வாயார வாழ்த்தி வணங்கினான். பிறகு, அவனையும் போர்க்கோலம் கொள்ளுமாறு செய்யவேண்டி, வீட்டிலுள்ள பண்டங்களை விற்றும், மற்றும் சிலவற்றை அடகு வைத்தும் பணம் சம்பாதித்து, அவனுக்கு உடை, வாள், கேடயம் முதலியவைகளை வாங்கிக்கொடுத்து, மீதிப் பணத்தை ஒரு பையில் போட்டு, ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ள அவனிடம் கொடுத்தான்; சில நாட்கள்வரையில் போதுமான ஆகாரம் கொஞ்சம் சேமித்துக்கொண்டான். பாலாஜியிடம் ஒரு கழுதை இருந்தது. அவன் ஏறி உடன்வர அது போதுமென நினைத்தான்; அவனுக்குப் போதுமான துணிகளும் வாங்கிக்கொடுத்தான். இவ்வாறு எல்லாம் தயாரானவுடன், ஒருநாள் இரவு சோமதத்தனும் பாலாஜியும் எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல், தத்தம் வாகனத்தில் அமர்ந்து, ஊரைக் கடந்தார்கள்.

---

## 7. காற்று இயந்திரத்துடன் சோம தத்தன் போர் புரிதல்

அப்பொழுது தினகரன் கிழக்கே ஆகாயத்தில் உதயமானான். அவர்கள் போய்க்கொண்டிருந்த சாலை, இரு பக்கங்களிலும் புளி, தென்னை, வேம்பு, ஆல் முதலிய விருக்ஷங்கள் அடர்ந்து, மிகவும் அழகாக இருந்தது. குளிர்ந்த காற்று மிகவும் ஆரோக்கியமாக வீசிக்கொண்டிருந்தது. சோம தத்தன் மிகவும் சந்தோஷத்துடன், தன் பெயர் உலகம் முழுவதும் பரவுவதற்குக் காலம்

கிட்டியதுபோலும் என நினைத்துக்கொண்டே செல்லுவானாயினன். பாலாஜியோவெனில், தனக்கு நற்காலம் வந்ததாலேயே சோம தத்தன் பழக்கம் கிடைத்ததென்றும், தான் அச்சூரனுடைய உதவியால் ஓர் அதிபதியாகக்கூடுமென்றும் மனோராஜ்யம் செய்துகொண்டே சோம தத்தன் பின் சென்றான்.

இவ்வாறு அவர்கள் ஆலோசனை செய்துகொண்டே இரண்டு மைல் தூரம் சென்றார்கள். அப்பொழுது பாலாஜி, சோம தத்தனை நோக்கி, "வீரரே, தாங்கள் கூறிய வாக்குறுதியை மறக்கக் கூடாது. எளியேன்மீது அருள் புரிந்து, கூடிய சீக்கிரத்தில் என்னை ஒரு சிறிய மாகாணத்திற்காவது அதிபதியாக்க வேண்டுகிறேன். தாங்கள் வெகு சீக்கிரம் என்னை ஓர் அரசனாகச் செய்வதாகச் சொன்னீர்கள். அவ்வெண்ணமே என்னை மிகவும் வருத்துகின்றது. நான் அரசாளும் திறமை உடையேனோ, அல்லவோ என உமக்கு எள்ளளவும் சந்தேகம் வேண்டா. என்னை நீர் அப்பதவிக்குக் கொண்டு வந்து பாரும் என் சாமர்த்தியத்தை!" எனச் சொன்னான்.

சோம தத்தன் அதைக்கேட்டுப் புன்முறுவல்செய்து, "அப்பா, பாலாஜி, நீ பயப்பட வேண்டா. சொன்ன சொல் தவறுவது என்போன்ற வீரர்க்கழகன்று. அனேகமாயிரம் வீரர்கள் அவர்களுடன் இருந்து உதவி செய்த உன்போன்ற வேலையாட்களுக்குப் பல வருடங்கள் சென்ற பிற்பாடே கௌரவமான பதவிகள் அளித்திருக்கின்றார்களெனினும், யான், இன்று முதல் எட்டுநாட்களில் உன்னை ஒரு பெரிய இராஜ்யத்திற்கு அதிபதியாக்குவேன். என் ஆற்றலைப் பார்," என்றான்.

பாலாஜி மிக்க களிப்புடன், "நீர் அப்படிச் செய்தால், உமக்குப் பல வந்தனம் செய்வேன். அப்பொழுது என் தரித்திரம் என்னை விட்டகலும். என் மனைவி ஓர் அரசியாகவும் என் அருமைக் குழவிகள் அரச குமாரர்களாகவும் அரச குமாரிகளாகவும் ஆவார்கள். ஆஹா! அவர்கள் அப்பொழுது எவ்வளவு சந்தோஷ மடைவார்கள்! ஐயா, நாங்கள் உம்மை எந்நாளும் மறவோம்; எப்பொழுதும் உம்மைப் போற்றிக்கொண்டே இருப்போம்," என்று சொன்னான்.

சோம தத்தன் களங்கமற்ற அவன் சொற்களைக் கேட்டு நகைத்துக்கொண்டே சென்றான்.

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டே செல்லுங்கால் சிறிது தூரத்தில் ஒரு மைதானத்தில் ஏழு அல்லது எட்டுக் காற்று இயந்திரங்கள் நடப்பட்டிருந்தன. அவைகளைச் சோம தத்தன் உற்று நோக்கி, அசைவற்று நின்று விட்டான். பிறகு, அவன் பாலாஜியை நோக்கி, "அப்பா, பாலாஜி, நான் நினைத்ததைக்காட்டிலும் துரிதமாகவே என் சௌரியத்தைக் காண்பிக்கும் சமயம் எனக்குக் கிட்டிற்று. அதோ பார்! சில அரக்கர் என்னுடன் போர் புரியத் தயாராயிருக்கின்றனர். அவர்களை இதோ ஒரு கணப் பொழுதில் நாசம் செய்கின்றேன்," என்றான்.

அதைக் கேட்டுப் பாலாஜி ஒன்றும் தோன்றாது, "ஐயா, அவை காற்று இயந்திரங்களல்லவா? அவை வீரர்களுமல்ல; அரக்கர்களுமல்ல. ஆகையால், அவற்றோடு நீர் சண்டை போடுவதில் பிரயோஜன மில்லை. வாரும்; போவோம்," என்றான்.

சோமதத்தனே, அதை ஒப்பவில்லை. "உனக்குப்போர் விஷயம் ஒன்றுந் தெரியாது. அவர்கள் அரக்கர்களே. எனக்குப் பூசன் என்று ஒரு விரோதி உள்ளான். அவன் பெரிய மந்திரவாதி; என் அறையைப் புத்தகங்களோடு எடுத்துச்சென்ற அயோக்கியன். ஆதலால், அவனே இவர்களைக் காற்று இயந்திரங்களாகச் செய்து வைத்திருக்கின்ருன்," என்று சொல்லிக்கொண்டே, குதிரையைத் தட்டிக்கிளப்பி, அக்காற்று இயந்திரங்களில் ஒன்றைத்தாக்கினன். அச்சமயம் காற்று வீசவே, இயந்திரம் சுழன்றது. சோமதத்தன் அதைக்கண்டு, "ஒகோ! இவ்விந்தை நம்மிடம்சரிப்படாது. நீ எப்படி உன் கைகளை ஆட்டினுலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது," எனக் கூவிக்கொண்டே ஈட்டியால் குத்த, ஈட்டி அநேக துண்டங்களாகப் போனதுமன்றிச் சோம தத்தனும் குதிரையினின்று பலமாகக் கீழே விழுந்தான்.

பாலாஜி உடனே கழுதையைவிட்டிறங்கிச் சோம தத்தனை யணுகி, "ஐயா, நான் முன்னமே சொன்னேனே! தாங்கள் அதைக் கேட்கமாட்டேனென்றீர்களே! இவைகள் இயந்திரங்களல்லவா? இவைகளைப் பித்தம் பிடித்தவர்களே தாங்கள் நினைத்தபடி நினைப்பார்கள். ஐயோ! அடி பலமாக விழுந்ததோ? நீர் செய்ய வேண்டிய காரியங்கள் அனேகம் உள்ளனவே! உமக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால், பிறகு என்னை யார் அரசபதவிக்குக் கொண்டு வருவது?" என்று பிரலாபித்தான்; மிக்க கஷ்டத்துடன் சோமதத்தனை உட்காரவைத்து உடம்பைச் சற்றுப் பிடித்துப் பிறகு அவனுடைய குதிரையின்மீது உட்கார வைத்தான். ஆனல், குதிரையின்மீது சரியாகச் சோம தத்தன்

உட்காரக் கூடவில்லை. ஏனெனில், விழுந்ததால் அவனுக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.

ஆனால், அப்பொழுதாவது அவன் செய்த தவற்றைச் சிறிதேனும் அறிந்தானா? இல்லை. "இருக்கட்டும்; இத் தடவை பூசன் என்னை ஏமாற்றிவிட்டான்; எங்கு என்னை அவனுடைய ஆட்கள் ஜயிக்கமாட்டார்களோ வெனப் பயந்து திடீரென இயந்திரங்களாகச் செய்துவிட்டான். பல நாளைத் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான்! ஆதலால், கூடிய சீக்கிரத்தில் அவனும் அவனைச் சார்ந்தோரும் என்னிடம் சிக்காமல் போகார்கள். அதுபொழுது பார்த்துக்கொள்கிறேன்," என இவ்வாறு பாலாஜியிடம் சொல்லிக்கொண்டே சோம தத்தன் சென்றான். ஆனால், பாலாஜி மறு மொழி ஒன்றும் சொல்லவில்லை. ஏதோ ஒன்றைப்பற்றி யோசனைசெய்வான்போல அவன் சென்று கொண்டிருந்தான்.

மணியும் பன்னிரண்டாயிற்று. கதிரவன் கிரணங்களோ, செல்வோரை மிகவும் கடுமையாகத் தாக்க ஆரம்பித்தன. வீட்டில் சுகமாக உண்டு உறங்கிக் கிடந்த பாலாஜிக்குப் பசிப்பிணி உண்டாயது. அவன் சோம தத்தனைப் பார்த்து, "ஐயா, வெகு நேரம் பிரயாணம் செய்ததால், நீரும் களைத்திருப்பீர். ஆதலால், சிறிது உண்டி அருந்தலாமே!" என்றான். ஆனால், சோம தத்தன் தனக்கு ஒன்றும் வேண்டாவென்றும், பாலாஜி வேண்டிய மட்டும் உண்ணலாம் என்றும் சொன்னான். சொன்னதுதான் தாமதம். உடனே பாலாஜி பையைத் திறந்து ரொட்டி மூட்டையையவிழ்த்து, ரொட்டித் துண்டுகளில் மூன்றை மெதுவாகத் தின்றுகொண்டே சோமதத்தனைத் தொடர்ந்

துசென்றுன் ; பிறகு, ஒரு பெருஞ்சீசாவிலிருந்த சாராயத்தில் சிறிது குடித்தான். அப்பொழுது அவன் இருந்த நிலைமையை நோக்கினல், எவரும் அவனைப்போன்ற சுகவாசி ஒருவருமில்லையெனவே சொல்லுவர்.

இவ்வாறு பத்து மைல் தூரம் சென்றுர்கள். அதற்கு மேல் அடர்ந்த காடாகத் தோன்றிற்று. சூரியனும் அஸ்தமித்தான். இருளும் கொஞ்சம் கொஞ்சமாகச் சூழ ஆரம்பித்தது. ஆதலால், ஒரு மரத்தடியில் அவர்கள் இளைப்பாற எண்ணித் தங்கள் வாகனங்களினின்று இறங்கி, அவைகளை ஓர் இடத்தில் கட்டிஞர்கள். பிறகு, பாலாஜி படுத்துக்கொண்டான் ; சிறிதுநேரத்திற்குள் நன்றுகக் குறட்டைவிட்டுக்கொண்டு தூங்கிவிட்டான். ஆனல், சோம தத்தன் இரவு முழுதும் தான் செய்ய வேண்டிய அபூர்வச் செயல்களைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தான். சில சமயம் எழுந்திருந்து உலாவுவான் ; சில சமயம் உட்காருவான்; ஆனல், சிறிதேனும் அவன் உறங்கவில்லை.

---

## 8. சோம தத்தன் ஒரு சீமாட்டியைக் காப்பாற்றச் சமர் செய்தல்

பொழுது நன்றுக விடிந்ததும், சூரியன் உதயமாகியும், பாலாஜி எழுந்திருக்கவேயில்லை. அவன் நன்றுகத் தூங்கிக்கொண்டிருந்தான். சோம தத்தன், தூங்கவேயில்லையாதலால், எழுந்து தன் உடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு, பிறகு பாலாஜியை எழுப்பினுன். பாலாஜி எழுந்து, முகம் கைகால்களைக் கழுவிக்கொண்டு ரொட்டித்

துண்டில் ஒன்றைத் தின்று, தண்ணீரும் குடித்துவிட்டுப் புறப்பட ஆயத்தமானுன்.

சோம தத்தன் அப்பொழுதுங்கூட ஒன்றும் தின்னவில்லை. படுத்து உறங்குதலும், போஜனம் செய்தலும் சுத்த வீரனுக்கு அழகல்ல என்று சோம தத்தன் நினைத்தான். மிகவும் பசிப்பிணி வாட்டுமாயின், கொஞ்சம் அதைத் தணிக்க ஆகாரம் சாப்பிடுவதே நன்று என அவன் நினைத்தான். ஆனல், பாலாஜிக்கு அவ்வித எண்ணம் ஒன்றுமில்லை. கொண்டுவந்த ஆகாரமும் சாராயமும் குறையக் குறைய, அவைகளை எப்படி நிரப்புவது என்னும் எண்ணமும், அவை சீக்கிரம் ஆய்விடுகின்றனவே என்னும் துக்கமும் அவனுக்கு உண்டாயினவே யொழிய வேறில்லை.

சோமதத்தனும்,பாலாஜியும் புறப்பட்டுச்சென்று ஒரு பெருஞ்சாலையை யடைந்தார்கள். அப்பொழுது பாலாஜியைச் சோம தத்தன் விளித்து, “பாலாஜி, யான் சொல்வதைச் சற்றுக் கவனித்துக் கேள்: வீரர்களுக்கு எவ்வெப்பொழுது அபாயம் நேரிடும் என்பது தெரியும். இப்பாதையிலேயே யான் புகழ் பெறக் கூடும். அநேக சம்பவங்கள் நேரப்போகின்றன. அரிய வீரச் செயல்கள் செய்யப் போகின்றேன். உன்னை அரச பதவிக்குக் கொண்டு வரும் சந்தர்ப்பமும் இங்கேயே நடக்கப் போகின்றது. ஆயினும், நான் உன்னைக் கவனிக்கச் சொல்லும் விஷயம் வேறு: நான் எவருடன் சண்டை செய்தாலும், தோல்வி யடைவேன் போலத் தோன்றினுலும், நீ என் உதவிக்கு வரக்கூடாது. நான் ஒருவனுகவேதான் போர் செய்ய வேண்டும். அப்படி மிக்க அபாயத்தில் நான் அகப்பட்

டுக்கொண்டால், அப்பொழுது நீ எனக்கு உதவி செய்ய லாம். மற்றச் சமயத்தில் நீ சற்று விலகி நிற்க வேண்டுமே யொழியப் போரில் கலந்தலே கூடாது. அதற்கு இரு காரணங்கள் உண்டு: முதலாவது, நீபோர்வீரனுகவேண்டு மாயின், செய்ய வேண்டிய சில சடங்குகள் உண்டு. அவை களைச் செய்யாதவரையில், நீ போர் செய்யக் கூடாது. இரண்டாவது, யான் ஒருவனுகவே யிருந்து சண்டை செய்து புகழும் பெயரும் அடைய அவாக் கொண்டுள் ளேன்," என்முன்.

உடனே, பாலாஜி, "ஐயா, நீர் இப்பொழுது சொல் லிய வார்த்தைகளைக் கடவுள் இட்ட கட்டளையாகவே நான் பாவிப்பேன். எனக்குச் சண்டையென்றுலே பயம். நான் ஒரு விதப் போரையும் பாராதவன். என் வீட்டில் என் மனைவி என்னை மிரட்டிக் கோபித்தாற்கூட, யான் பதில் சொல்லுவதில்லை. ஆதலால், நான் உம்முடன் கலந்து போர் செய்து உமது கீர்த்திக்குக் குறைவு வைப்பேன் என நீர் சிறிதும் கவலைப்பட வேண்டா. ஆபினும், யான், காரணமின்றி எவராவது உம்மைச் சண்டைக்கிழுத்தால், சிறிதும் பின் வாங்கேன். தாங்கள் சொல்லிய வார்த்தை களில் ஒரு விஷயமே என்னை மனம் பூரிக்கச் செய்வது. அதாவது, இப்பாதையிலேயே யான் அரசாளும் பதவி யடையத் தக்க சம்பவம் நேரப்போகிறது என்றீர்களே! அதை யான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். நீரும் துரித மாக முன் போம்," என்முன்.

சோமதத்தனும், பாலாஜியும் முன்னும் பின்னுமாகச் சிறிது தூரம் சென்றுர்கள். இரண்டு பர்லாங்குக்கப்பால், பலர் வருவதுபோலத் தூசி கிளம்பிற்று. இருவரும் உற்று

நோக்கினர். இரு குதிரைகள்மேல், இரு பவழ வியாபாரிகளும், சற்று அப்பால் ஒருபல்லக்கில் ஒருசீமாட்டியும், அவளுடன் எட்டுக் காவலர்களும் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களைத் தூரத்தே கண்டதும், சோம தத்தன் கத்தியை உருவினான்; தோளைத் தட்டிச் சிங்கம்போலக் கர்ச்சித்தான். "இஃது என்ன அனியாயம்! இந்த அயோக்கியர்கள் அவ்வுயர் குலத்துச் சீமாட்டியை அபகரித்துச் செல்கின்றார்களே! யான் இவர்களை விடேன். இதோ! ஒரு நொடிப் பொழுதில் இவர்கள் அனைவரையும் எம புரம் அனுப்பி, அச்சீமாட்டியை விடுவித்து, எனக்கு உவந்த ரூபலாவண்ய ரூபமதியிடம் சென்று என் சௌரியத்தையும் நான் செய்த போர் வன்மையையும் பற்றிச் சொல்லச் செய்து, என்றும் அழியாப் புகழை யடைவேன்," என்று பாலாஜியை நோக்கிச் சொன்னான்.

உடனே பாலாஜி திகைத்து, "ஐயா, யான் சொல்வதைச் சற்றுக் கேளும்: இச்சம்பவமும், நீர் இயந்திரத்துடன் சண்டையிட்டதுபோலவே முடியும். அவர்கள் வியாபாரிகள்; நகரத்திற்குச் சென்று வர்த்தகம் செய்து தம் நாடு திரும்புபவர்கள். அவர்கள் போர் வீரர்களுமல்ல; ஒருவரையும் அபகரித்துச் செல்பவருமல்ல. தயவு செய்து நீர் உம் வழிச்செல்லும்," என்றான்.

இதைக் கேட்டதும் சோம தத்தனுக்குக் கோபம் பொங்கிற்று. நீ மூடனாகக் காண்பித்துக்கொள்கிறாய். நான் அப்பொழுதே இவ்விஷயங்களில் நீ தலையிடக்கூடாது என்றேனே! உனக்கு இவ்விஷயங்கள், குருடன் ஒரு நல்ல சோலையின் காட்சியைப் பார்க்க விரும்புவதுபோல இருக்கும். என் விரோதி மந்திரவாதி; மிக்க பலவான். அவன்

'உன் கண்களுக்கு இம்மாதிரியே தோன்றச் செய்வான்,'' என்று சொல்லிக் குதிரையைத்தட்டி முன் சென்று, அவ் வியாபாரிகள் வரும்வழியின் குறுக்கே நின்று அவர்களைப் பார்த்துப் பின் வருமாறு சொன்னான் : "துஷ்டர்களே, உலகில் உங்களைப்போன்ற போக்கிரிகள் அனேகர் இருக்கிறார்களென்றே, உங்களைத் தொலைக்க என்போன்ற வீரர்களைக் கடவுள் படைத்திருக்கிறார். அஃது ஒரு புறம் இருக்கட்டும். அதோ! அப்பல்லக்கில் இருக்கும் சீமாட்டியை நீங்கள் பலாத்காரமாக எடுத்துச் செல்கிறீர்கள். அவளை இக்கணமே விடுவிக்கிறீர்களா, அல்லது என் வாளுக்கு இரையாகப் போகிறீர்களா?''

சோம தத்தனுடைய கவசம் முதலியவைகளையும், அவனையும் சற்று உற்று நோக்கிவிட்டு, வர்த்தகர்களில் ஒருவன், சோம தத்தனை விளித்து, "ஐயா, போர் வீரரே, நீர் தவறாக நினைத்துவிட்டீர். நாங்கள் பவழ வியாபாரிகள். நாங்கள் எங்களுடைய ஊர் செல்லுகின்றோம். அச் சீமாட்டிக்கும் எங்களுக்கும் ஒரு விதச் சம்பந்தமுமில்லை. நீர் வேண்டுமாயின், அவர்களைக் கேளும். நாங்கள் உம்முடன் சண்டை செய்யத் தயாராயில்லை. நீர் வழி விடும்; நாங்கள் செல்கின்றோம்,'' என்றான்.

ஆனால், சோம தத்தன் அவர்கள் வார்த்தையைச் சிறிதேனும் நம்பவில்லை. "மிகவும் நயமாகப் பேசி என்னை ஏமாற்றிவிடலாமென நீங்கள் கருதினீர்களோ? அது ஒரு காலும் முடியாது,'' எனச் சொல்லிக்கொண்டே, அவன் அவ்வர்த்தகனைக் கத்தியால் ஒரே குத்தாய்க் குத்தினான். அவ்வர்த்தகனுடைய நல்ல காலம், அடி நன்றாகப் படவில்லை. ஆனால், அவ்வியாபாரி குதிரையினின்று கீழே

வீழ்த்தப்பட்டான். தன் தோழன் இவ்வாறு கீழ் வீழ்ந்தவுடன், மற்றொரு வர்த்தகன், மிகப் பயந்தவனாதலால் குதிரையைத் தட்டி வேறு வழியாக ஓட்டம் பிடித்தான். உடனே சோம தத்தன் பல்லக்கருகிற் சென்று, அதில் உட்கார்ந்திருந்த பெண்ணை நோக்கி, "உயர் குலத்துதித்த அணங்கே, உன்னை இன்று யான் காப்பாற்றியதற்குக் காரணம் உன்னுடைய பூர்வப் பிறப்பில் நீ செய்த புண்ணியமே. எனது அரிய வீரச்செயலையும் நீ கண்டிருப்பாய். நான் உன்னை வேண்டுவது ஒன்றே. அதாவது, நீ நேராகச் சூரிய துர்க்கம் சென்று, ரூபமதியென்னும் பெண்ணரசியிடம் நான் உன்னைக் காப்பாற்றிய விஷயத்தைப் பற்றியும், எனது பராக்கிரமம் முதலியவற்றைப் பற்றியும் புகழ்ந்து கூறிச் செல்ல வேண்டும். இன்றேல், உன்னை யான் விடமாட்டேன்," என்றான். அந்தப் பெண் ஒன்றும் தோன்றாமல், வாளாவிருந்தாள்.

அச்சமயம், பாலாஜி, கீழ் வீழ்த்தப்பட்ட வர்த்தகனுடைய சட்டை துணி முதலியவைகளைக் கழற்றத் தொடங்கினான். அச்சமயம் அவர்கள் வேலைக்காரன் அவனை யணுகி, சோம தத்தன் தூரத்தில் நிற்பது கண்டு, பாலாஜியை நையப்புடைத்து உடல்முழுதும் இரத்தம்வடியச்செய்து, எஜமானனை மூர்ச்சைதெளியச்செய்து, அவனை இட்டுக்கொண்டு அவன் வழிச் சென்றான்.

சோம தத்தன் இவ்வாறு அப்பெண்ணைத் தொந்தரவு செய்வது கண்டு, அவளுடைய காவலாளர்களில் ஒருவன் மற்றவரைக்காட்டிலும் பலத்திலும் தைரியத்திலும் சிறந்தவனாதலால், சோம தத்தனை நோக்கிச் சென்று, "ஐயா, இதுவரையில் நாங்கள் பொறுத்தோம். இப்பொழுதே

நீர் அப்புறம் சென்று எங்களைச் செல்ல விடுகிறீரா? அல்லது இன்றுடன் உமது ஆயுளை யொழிக்க எண்ணமா?" என்று உரத்துக் கேட்டான். உடனே சோம தத்தன் கோபாவேசனாய், "அடே, மூடா, என்னையா நீ இவ்வாறு சொன்னாய்? எவருக்குக் காலம் கிட்டிற்று என்பதை இதோ ஒரு நொடிப்பொழுதில் காண்பிக்கின்றேன். வா," என்று சொல்லிப் போருக்கு ஆயத்தமானான். அவ்வேலையாளும் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு, சோம தத்தன் முன் வந்தான். இருவருக்கும் ஒரு பலத்த போர் நிகழ்ந்தது. வேலையாள், சற்று வாலிபனாதலாலும், தேக பலம் உடையவனாதலாலும், இருமுறை சோம தத்தனை வீழ்த்தியும், ஒரு முறை இடப்புஜத்தில் குத்தி இரத்தம் வரச்செய்தும்; மற்றொரு முறை கத்தி வெட்டால் அவன் காதில் அரைப் பாகம் அறுபடவும் செய்தான். பாவம்! சோம தத்தனுக்குக் கவசம் மாத்திரம் இல்லாமற் போயிருந்தால், அப்பொழுதே அவன் இறந்திருப்பான். சண்டையில் அவன் முக மூடியிற் பாதி உடைந்தும் போயிற்று. அவன் தனக்கு இவ்வளவு கஷ்டம் நேர்ந்தும், சிறிதும் பின் வாங்காமல், சிங்கம்போலக் கர்ச்சித்து, அவ்வேலையாள் மீது பாய்ந்து, ஒரே அடியால் அவனைக் கீழே தள்ளி, அவன் மார்பின்மேல் உட்கார்ந்து, "அடே, தற்புகழ்ச்சிக்கார அற்பனே, இதோ உன்னை எமபுரம் அனுப்புகிறேன். உன் மாமிசத்தைத் தின்னக் கழுகுகளும், நரிகளும் காத்துக்கொண்டிருக்கின்றன," என்று சொல்லிக் கொண்டே, கத்தியை ஓங்கினான்.

அச்சமயம் தூரத்தில் பல்லக்கிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த அந்த ஸ்திரீ பயந்து, "ஐயா, வீரரே,

அவனை விட்டுவிடும். ஒரு காரணமுமில்லாமல் எங்களை நீர் ஏன் இவ்வாறு கஷ்டப்படுத்துகின்றீர்?'' என்றாள். உடனே சோம தத்தன் எழுந்து, அவளை நோக்கி, "உயர் குலத்துதித்த நங்காய், நீயே என்னை இவ்வாறு இறைஞ்சிக் கேட்கும் பொழுது, சுத்த வீரனாகிய யான் எவ்வாறு மறுக்கக் கூடும்? இவனை நீயே காப்பாற்றினாய். ஆனால், நீ செல்லும்பொழுது இங்கு நடந்த எல்லாவற்றையும் பெண்கள் நாயகமாகிய எனது உள்ளங் கவர்ந்த ரூபமதியிடம் சொல்லிச் செல்ல வேண்டும்,'' என்றான். அவளுக்கு ரூபமதி யாரென்பதும், அவள் எங்கிருக்கின்றாளென்பதும் தெரியாவாயினும், அவ்விடத்தை விட்டுத் தப்பினாற் போதுமென நினைத்தாளாதலால், உடனே அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டாள். சோம தத்தனும் மிக்க சந்தோஷத்துடன் அவளைப் புகழ்ந்து வழி விட்டு அனுப்பினான். அவர்களும், 'இம்மட்டும் தப்பினது நமது புண்ணியமே,' என்று கருதிச் சென்றார்கள்.

---

## 9. பாலாஜியின் மடமை

இதுகாறும் பாலாஜி, வியாபாரியின் வேலையாள் ஒருவனால் நையப் புடைக்கப்பட்ட பிறகு எழுந்து, சற்றுத் தூரத்திலிருந்து, தன் எஜமானனுடைய அபூர்வச் செயல்களைக் கண்டு அதிசயித்துக்கொண்டிருந்தான்; சோம தத்தன் ஜயமடையக் கடவுளைத் தோத்திரித்துக்கொண்டிருந்தான். சண்டை முடிந்து அவர்கள் சென்றபிறகு, பாலாஜி சோம தத்தனை யணுகி, " அன்புள்ள எஜமானரே, தாங்கள் சொல்லியவாறு இப்பொழுது என்னை ஏதாவது ஒரு

சிறு மாகாணத்திற்கு அதிபதியாக்குங்கள். இப்பொழுது நடந்த சண்டையில் தாங்கள் ஜயித்ததால், கட்டாயம் எனக்கு ஓர் இராஜ்யம் கிடைக்குமென நம்புகின்றேன். அஃது அளவிற் சிறியதாகவிருப்பினும், பாதகமில்லை. இந்த யுத்தத்தில் எனக்குக்கூடப் பலத்த அடிபட்டது. இதுவரையில் எனக்கு இம்மாதிரி அனுபவம் இல்லை. இனிமேல் என் உடம்பு தாங்காது. ஆதலால், சிறிய இராச்சிய்மாயிருப்பினும், அதை யடைந்து நான் திருப்தி யடைவேன்," என்றான்.

சோம தத்தன், புன்முறுவலுடன், "பாலாஜி, 'ஆக்கப்பொறுத்தவன் ஆறப்பொறுக்கவேண்டும்'—'பொறுத்தவர் பூமியாள்வார்; பொங்கினவர் காடாள்வார்' என்ற முதுமொழிகளை நீ மறந்தனையோ? இம்மாதிரிச் சண்டைகள் இன்னம் பல புரிந்தாலே, இராஜ்யம் கிடைக்கும். அவ்விஷயத்தில் உனக்குச் சிறிதும் சந்தேகம் வேண்டா. நான் உன்னைச் சண்டையில் குறுக்கே வராதே என்று சொன்னேன். நீ என் வார்த்தையைக் கேளாததால், உனக்குக் கஷ்டம் வந்தது. இனிமேலாவது நீ சண்டையில் தலையிடாதே. அது கிடக்கட்டும். நான் இப்பொழுது புரிந்த போரை நீ கண்கூடாகக் கண்டாயே! உனது அபிப்பிராயம் என்ன?" என்றான்.

பாலாஜி தலையை அசைத்துக்கொண்டு, "தலைவரே, எனக்குச் சண்டையென்றாலே எப்படியிருக்கும் என்று தெரியாது. இப்பொழுது பார்த்ததிலிருந்து, தங்களைப் போன்ற வீரர்கள் இப்புவியிலே இல்லை என யான் தடையின்றிச் சொல்வேன். தங்களைப்போன்ற எஜமானரிடம் யான் வேலைக்கு அமர்ந்தது, என் பூர்வ ஜன்ம புண்ணியப்

யலனே. எனக்கு ஓர் இராஜ்யம் சீக்கிரம் சம்பாதித்துக் கொடுத்தீராணுல், யானும், என் மனைவி மக்களும், தங்களைத் தெய்வமாகவே கொண்டாடுவோம்,'' என்ருன்.

சோம தத்தன் தனது செளரியத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதும், மிக்க சந்தோஷங் கொண்டான். அவன் தனக்கு மிகவும் பசியாக விருந்ததால், பாலாஜியை அவனிடமிருந்த உணவுப் பொருள்களில் ஏதாவது மீதி இருந்தால் கொடுக்கச் சொன்னுன். அவன், "தலைவரே, காய்ந்த சில ரொட்டித்துண்டுகளும், கொஞ்சம் வெங்காயமுமே யிருக்கின்றன. அவைகளை உமக்கு யான் எவ்வாறு அளிப்பது?'' என்ருன். அதற்குச் சோம தத்தன், "உனக்குப் போர் வீரர்கள் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது தெரியாது. நீ புத்தகங்களைப் படித்ததில்லை. ஆனுல், யான் பல்லாயிரம் புத்தகங்களைப் படித்திருக்கின்றேன். வீரர்கள், எஃது அகப்பட்டதோ, அதை உண்டே திருப்தியடைய வேண்டும். தம் பசிப்பிணியைத் தீர்க்க உண்ணவேண்டுமேயன்றி, நல்ல உண்டிக்கு நாக்கை நீட்டுவது சுத்த வீரர்களுக்கு அழகன்று. ஆதலால், உன்னிடம் எஃது இருக்கின்றதோ, அதுவே எனக்குப் போதும்,'' என்ருன்.

உடனே பாலாஜி, "அப்படியானுல் சரி; போர் வீரர் மாத்திரந்தானே அவ்வாறு உண்ண வேண்டும்? யான் நல்ல போஜனம் அருந்தலாமல்லவா?'' என்று கேட்டான்.

சோம தத்தன், "நீ உன்னிஷ்டம்போலச் சாப்பிடலாம். யான் சொல்லியது வீரர்களுக்கேயன்றி, அவர்களுடைய வேலையாட்களுக்கன்று,'' என்ருன்.

பாலாஜி, "நல்லது; வந்தனம், ஐயா. இனிமேல் நல்ல உண்டி கிடைத்தால் எனக்கு வைத்துக்கொண்டு, உலர்ந்த பழம் முதலியவைகளை உமக்குச் சேமித்து வைக்கிறேன்," என்றான்.

பிறகு சோம தத்தன், இருந்ததைப் புசித்தான். பிறகு அனேக விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே அவர்கள் வேகமாகச் சென்றார்கள். கதிரவன் மேற்குக் கடலில் மறைவதற்குள்ளாகவே ஏதாவது ஓர் இடத்தை யடைந்து அங்கு இரவுப் பொழுதை அவர்கள் கழிக்க எண்ணினார்கள். சோம தத்தனுக்குச் சண்டையில் காது அறுந்து உடல் முழுதும் காயம் ஏற்பட்டதால், அவனால் அவ்வலியைத் தாங்கக் கூடவில்லை. பாலாஜி அவனிட மிருந்த தேங்காயெண்ணெயைப் புண்மேல் தடவினான். அப்பொழுதும் வலி நிற்கவில்லை.

இம்மாதிரி அவர்கள் போய்க்கொண்டேயிருந்தார்கள். வழியில் ஒரு சத்திரமேனும், மாளிகையேனும், இல்லை. இருளும் சூழ்ந்தது. நல்லவேளையாகச் சிறிது தூரத்தில் ஆட்டிடையர்களுடைய குடிசை ஒன்று அவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது. அங்கேயே இரவைக் கழிக்க எண்ணி, அவர்கள் அவ்விடத்தை யடைந்தார்கள்.

ஆட்டிடையர்கள், அவர்களுக்குச் சிறிது பக்குவப் படுத்தின ஆட்டிறைச்சியையும் ஆட்டுப் பாலையும் கொடுத்தார்கள். அவர்கள் அவற்றைப் புசித்தார்கள். பாலாஜி, மறு நாள் அம்மாதிரி நல்லுண்டி கிடைக்குமோ, கிடைக்காதோ என்று ஐயமுற்று, வயிறாரப் புசித்தான். பிறகு சோம தத்தன் தன்னுடைய வீரத்தைப் பற்றியும் தான் செய்த அரிய செயல்களைப் பற்றியும் அவ்வாட்டிடையர்க

ளிடம் சொல்லிக்கொண்டிருந்தான். பாலாஜியும் அடிக்கடி தலையாட்டிக்கொண்டும், தன் எஜமானனைப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டும், சிறிது நேரம் உட்கார்ந்திருந்துவிட்டுக் குடிசையின் ஓரத்தில் தரையில் படுத்துச் சிறிது நேரத்தில் குறட்டை விட்டுக்கொண்டு நன்கு தூங்கினான். சோம தத்தன் சற்றுப் படுப்பதும், பிறகு வெளிச் சென்று தன் குதிரை பத்திரமாய் இருக்கின்றதா என்று பார்ப்பதுமாக இரவைக் கழித்தான்.

மறுநாட் காலை பாலாஜியும், சோமதத்தனும் எழுந்து இடையர்களிடம் சொல்லிக்கொண்டு, அவர்கள் செய்த உபசாரத்திற்கு வந்தனமளித்துத் தம் வாகனங்களில் ஏறி, வட கிழக்குத் திக்கை நோக்கிப் புறப்பட்டார்கள். அப்பொழுது சோம தத்தன் தன் முகத்தைத் தடவி முக மூடியில் பாதி உடைந்து போனதை யறிந்தான். அப்பொழுது அவன் துக்க சாகரத்தில் மூழ்கினான் என்றே நாம் சொல்லலாம். உடனே அவன், "அடா, பாபிகளா, சண்டையில் என் உயிரை இழந்தாலும், யான் அதைப் பொருட்படுத்தேன். என் முக மூடியை உடைத்துவிட்டீர்களே! யான் எங்குச் சென்று மற்றொன்று பெறுவது?" என்று பிரலாபித்தான்.

பாலாஜி அவனைத் தேற்றி, முக மூடியில்லாவிட்டால் பாதகமில்லை யென்றும், அவனுடைய சௌரியம் நாடு முழுதும் பரவிப் போனதால், அவன் வீரன்தானோவென எவரும் அயிர்க்க இடமில்லை யென்றும் கூறிச் சிறிது ஆறுதல் செய்தான். சோம தத்தனும், "இஃது உண்மையே," என மறு மொழி சொல்லி, பாலாஜியுடன் சென்றான்.

## 10. சோம தத்தன் ஆட்டு மந்தைகளுடன் போர் செய்தல்

இவ்வாறு பாலாஜியும் சோமதத்தனும் பேசிக்கொண்டே சென்றார்கள். அப்பொழுது, திடீரெனச் சோம தத்தன், " பாலாஜி, இன்று ஒரு விசேஷ நாள் என எனக்குத் தோன்றுகிறது. எனது சௌரியத்தைக் காண்பிக்கும் தினம் இதுவே. யான் ஓர் உயர்ந்த நிலையை இன்று அடைவேன்," என்றான்.

பாலாஜி, "ஐயா, திடீரென இவ்வாறு சொல்கின்றீரே! உமக்கு ஆரூடப் பழக்கமும் உண்டோ?" என்றான்.

சோம தத்தன் அதற்கு, " ஆரூடம் எனக்குத் தெரியாது. ஆனால், என் இடக்கண், இடப்புயம் முதலியவை துடிக்கின்றன. என் வீட்டில் இருக்கும் பெண், ஒரு தடவை அவளுக்கு அவ்வாறு நேர்ந்ததாகவும், அன்று அவள் ஏதோ ஓர் அதிர்ஷ்டம் அடைந்ததாகவும் சொல்லி இருக்கிறாள்," என்றான்.

பாலாஜி நகைத்து, " ஆம் ஐயா, இடப்புறம் துடித்தல் பெண்களுக்கு நன்மை; ஆடவர்களுக்கு வலப் புறம் துடித்தலே நன்மை. ஆடவர்களுக்கு இடப் புறம் துடித்தல் தீமைக்கு அறிகுறி," என்று கூறினான்.

உடனே சோம தத்தன் மிகவும் கோபம் கொண்டு, "நீ வரவரத் துன்மார்க்கனாய்விட்டாய்; ஒன்றும் தெரியாமல் கல்விக் கடலைக் கரை கண்ட என்னிடமே வீண்வாதம் செய்கின்றாய். சாமானிய ஆடவர்களுக்கு நீ சொல்லியது பொருந்தும். ஆனால், என்னைப்போன்ற தனி வீரர்களுக்கு இடப்புறம் துடித்தலே சிறந்தது," என்று சொல்லி, ஒரு

குன்றின்மேல் ஏறி, நாற்புறமும் கவனித்தான்; உடனே கை கொட்டித் தொடை தட்டி ஆரவாரித்தான்.

பாலாஜி, "ஐயா, யான் செய்த பிழையைத் தாங்கள் பொறுத்தருள வேண்டுகின்றேன். எதற்காகத் தாங்கள் இம்மாதிரிச் சந்தோஷிக்கின்றீர்கள்?" என்று கேட்டான்.

சோம தத்தன் அவனை நோக்கி, "பாலாஜி, நீ என் அருகேவா; கீழ்த்திக்கைப்பார். தூசி அதிகமாகக் கிளம்புகின்றது. குதிரைகள் ஓடி வரும் சத்தம் கேட்கின்றது. கத்தியும் கேடயமும் ஒன்றோடொன்று படும் சத்தம் என் காதுக்கு எவ்வளவு இனிமையாக இருக்கின்றது! யான் இன்று ஓர் அருஞ்சம்பவம் நேரப்போகின்றது என்ற பொழுது, நீ நகைத்தாயே! உடனே பார்த்தாயா, யான் கூறிய சொற்களின் உண்மையை! நீ இவ்வாறு என்னை நம்பாமல், ஏதோ தடுத்துக்கொண்டும், பிதற்றிக்கொண்டும் இருந்தாயானல், யான் உன்னை எவ்வாறு அதிபதியாக்கக் கூடும்?" என்ருன்.

உடனே பாலாஜி, அவனுடைய கழுதையை விட்டுக் கீழிறங்கிச் சோம தத்தன்முன் தரையில் விழுந்து, "என் அன்புள்ள எஜமானரே, யான் ஏதோ தவறித் தங்கள் பெருமையை யறியாது சொன்னதை ஒரு பெருங்குற்றமாகத் தங்களைப்போன்ற அறிஞர்கள் பாராட்டலாமா? 'சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம், பெரியோராயிற் பொறுப்பது கடனே,' என்பது தங்களுக்குத் தெரியாத விஷயமா?" என்று கூறிப் பிரலாபித்தான்.

சோம தத்தன் பிறகு அவனை எழுந்திருக்கச் சொல்லி, "நீயும் உன் கழுதையின்மேல் ஏறிப் பார். உன் கண்களுக்கு அங்கு வரும் சேனை புலப்படுகின்றதா?" என்ருன்.

பாலாஜி சற்று உற்றுப் பார்த்துவிட்டு, "ஐயா, என் கண்ணுக்குச் சேனை புலப்படவில்லை. ஆனால், தூசி அதிகமாகக் கிளம்புவது மாத்திரம் தெரிகிறது. அது சேனை வருவுதாலே ஏற்பட்டது என்றால், மேற்கேயிருந்தும் தூசி கிளம்புகின்றதே! அதுவும் ஒரு சேனையாகவே யிருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன்," என்றான்.

சோமதத்தன் சற்று நிதானித்துப் பார்த்துவிட்டுப் புன்சிரிப்புடன், "உண்மையே! அவை இருதிறத்தாருடைய சேனைகளே. மேற்கே வருவது, மிகவும் பலவானும், மூர்க்கனுமான விஜயபுர மன்னன் அசடாகானுடைய சேனை. கிழக்கே வருவது, தெலுங்கு தேசத்தையாளும் தைலப்பனுடைய சேனை. தைலப்பனுடைய குமாரி சௌந்தர்யவதியைப் பலாத்காரமாக எடுத்துப் போய், அசடாகான் அவனுடைய அந்தப்புரத்தில் வைத்துக்கொண்டான் இதோ! ஒரு நொடிப்பொழுதில் அவர்கள் நம்மெதிரில் போர் புரியப் போகின்றார்கள். யான் தைலப்பனுடன் சேர்ந்து அசடாகானைச் சிறைப்பிடித்து அவனுடைய வீரர்களைப் புறங்காட்டி யோடச்செய்வேன். நீயும் போர்செய்ய ஆயத்தமாயிரு. போர் முடிந்தவுடன், அசடாகானுடைய இராஜ்யத்தில் ஒரு பகுதியை உனக்குத் தருகின்றேன்," என்றான்.

பாலாஜி ஒன்றும் தோன்றாது, பதிலும் சொல்லாமல், தலையசைத்துக்கொண்டு நின்றான்.

இதற்குள், தூசி உண்டானதற்கு எது காரணமாக விருந்ததோ, அதுவும் சமீபத்தில் வந்தது. அதுஓர் ஆட்டு மந்தையே. அதுபோலவே மற்றொரு பக்கத்திலிருந்தும் ஓர் ஆட்டு மந்தை வந்துகொண்டிருந்தது. அவைகளைப் பாலாஜி கண்ணுற்றான்; உடனே போருக்கு ஆயத்தமாக

இருந்த தன் எஜமானனை விளித்து, "ஐயா, தாங்கள் அவசரப்பட வேண்டா; போர் செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. அவைகள் தாங்கள் நினைத்தபடி சேனைகள் அல்ல. அவைகள் ஆட்டு மந்தைகளே," என்றான். ஆனால், சோமதத்தன் பாலாஜி கூறியதைச் சிறிதும் செவி சாய்த்துக் கேட்கவில்லை. அவன் பாலாஜியைப் பார்த்து, "நீ மிகவும் பயந்தவன். 'மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்,' என்றபடி உன் பயமானது உன் கண்களுக்கு இரு பெருஞ்சேனைகளை ஆட்டு மந்தைகளாகத் தோற்றுவிக்கிறது," எனச் சொல்லி, ஒரே பாய்ச்சலாக அவ்வாட்டு மந்தைகளுக்கிடையே பாய்ந்து, தன் ஈட்டியால் குத்தியும், வாளால் வெட்டியும், பல ஆடுகளைச் சின்னபின்னமாக்கினான். ஆட்டிடையர்கள் பார்த்தார்கள்; ஆடுகள் காயம் பட்டதையும், சில இறந்ததையும் கண்டு மிகவும் கோபங்கொண்டு, அங்கு மலிந்து கிடந்த பெருங்கற்களையெடுத்துக் கயிற்றில் வைத்துக் கவண் கற்களாகச் சோமதத்தன்மேல் எறிந்தார்கள். ஒரு கல் அவன் மார்பைப் பலமாகத் தாக்கிற்று; மற்றொன்று தலையைத் தாக்கிற்று; இன்னொன்று அவன் வாய்க்கு நேராக வந்து தாக்கி, அவன் பற்களில் எட்டைவிழச்செய்தது. வேறொன்று அவனை, அவனுடைய பரிமாவினின்றும் கீழேவீழ்த்தியது. சோமதத்தன் சவம் போல அசைவற்றுக் கிடந்தான். இடையர்கள், இறந்த ஆடுகளைத் தூக்கிக்கொண்டும், மற்றவைகளை விரட்டிக்கொண்டும் தங்கள் வழியே சென்றார்கள். இது நிற்க.

பாலாஜி சற்றுத் தூரத்தில் ஒரு குன்றின்மேலேறி நின்று, தன் எஜமானன் அறியாமையை நினைத்துத் துக்கித்துக்கொண்டிருந்தான். இடையர்களும் ஆடுகளும் அவ்

விடத்தை விட்டு அகன்ற பிறகு, அவன் மெதுவாகக் குன்றைவிட்டுக் கீழிறங்கி, அசைவற்றுக்கிடந்த சோம தத்தன் பக்கத்தில் வந்து, அவனைத் தூக்கி மார்பில் சாய்த்துக் கொண்டு, "என் அன்புள்ள எஜமானரே, தாங்கள் எப்பொழுதும் போரையே நினைத்துக்கொண்டிருப்பதால், எதைக் கண்ணுற்றாலும், தங்களுக்கு எதிரியாகவும், வீரனாகவும் தோன்றுகிறது. முன்பு காற்று இயந்திரங்களையும் அவ்வாறே நினைத்தீர்கள். இப்பொழுதும் ஆடுகளைப் போர் வீரர்களெனக் கருதிச் சண்டை செய்து, இந்நிலைமை அடைந்தீர்கள். யான் என்ன சொன்னாலும் கேட்க மாட்டேனென்றீர்களே! யாது செய்வது!" என்று கூறி, மிகவும் துக்கித்தான்.

சோம தத்தனோ, பெருமூச்சுடன் பேசக் கூடச் சக்தி இல்லாமல், "அப்பா, பாலாஜி, எனக்குப் பேசக் கூடச் சக்தியில்லை. உனக்கு இவ்விஷயம் ஒன்றும் தெரியாது. என் விரோதியாகிய பூசனுடையசக்தி ஒருவராலும் அறிய முடியாது. அவன் பெரிய மந்திரவாதி; என்மேல் மிகவும் பொறாமை கொண்டவன்; அதனாலேயே இம்மாதிரி இடுக்கண்களை எனக்கு விளைவிக்கின்றான்; எங்கு என் கீர்த்தி பரவிவிடுமோவென்று என் சாமர்த்தியத்தைக் காண்பிக்கக்கூடாமல் தன் மந்திர சக்தியால் வீரர்களை இயந்திரங்களாகவும், ஆடுகளாகவும் மாற்றிவிடுகின்றான். இன்னும் என்னென்ன செய்வானோ! யான் அறிகிலேன். ஆனால், யான் முன் வைத்த காலைப் பின்வாங்கேன். 'முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை, இன்மை புகுத்திவிடும்.' 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்.' ஆதலால், இறுதியில் பூசனுடைய சூழ்ச்சிகளெல்லாம் பயனற்றேபோகும்.

என் பிரதாபமே உலகெங்கும் பரவப்போகின்றது. அது கிடக்கட்டும். நீ தயவு செய்து, உன் விரலை என் வாயில் வைத்து, என் பற்களில் எத்தனை போய்விட்டன என்பதைப் பார்," என்றான்.

பாலாஜியும் அவ்வாறே செய்து, "ஐயா, கீழ்ப்புறம் முன் நான்கு பற்களும் போயின. மேற்புறமோ, இரு கடை வாய்ப் பக்கம் தவிரப் பாக்கியெல்லாம் குழந்தை வாய்போல மிகவும் மழமழப்பாய் இருக்கிறது," என்றான்.

அதைக் கேட்ட சோம தத்தன் ஓவெனக் கதறி, "எனக்கு ஒரு பல்கூட இதுவரையிலும் விழவில்லையே! பற்கள் இல்லாவிட்டால், முகம் வனப்பே கொடுக்காதே! என்னைக் கண்டவர் எவ்வாறு வீரனென மதித்து எனக்கு மரியாதை செய்வார்கள்! வைரக் கற்களும், இரத்தின மணிகளுங்கூட ஒரு பல்லுக்குச் சமானமாகாவே!" என்று புலம்பினான். கடைசியில் அவன், "ஒருவன் புகழ் பெற வேண்டுமானால் எல்லாக் கஷ்டங்களையும் அனுபவித்தே தீரவேண்டும். ஆதலால், நடந்ததைப்பற்றித் துக்கிப்பது என்போன்ற வீரர்க்கழகன்று. உடல் வலியும், பல்வலியும் எனக்கு அதிகமாகவிருப்பதால், பாலாஜி, நீயே முன் செல்; நாம் தங்குவதற்கு ஓரிடத்தைச் சீக்கிரம் கண்டுபிடி. இதுவரையில் நானே முன் சென்றேன். இப்பொழுது நீ உன் இஷ்டம்போலச் செய்," என்றான்.

பாலாஜியும், அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு சோம தத்தன் முன்னே சென்றான். ஆனால், அவனது முகத்தில் துக்கக் குறி இருந்தது. ஏன்? அவனுடைய எஜமானனுடைய பரிதாபகரமான நிலையை அவன் நினைத்ததாலா? அன்று. இனிமேல், தன் எஜமானன் எங்குப்

போர்செய்யும் எண்ணத்தை ஒழித்துவிடுவானே ! எங்குத் தான் உன்னத பதவியாகிய அரச பதவியை யடைய முடியாமற் போகுமோவென நினைத்தான் பாலாஜி. அதுவே அவன் விசனத்திற்குக் காரணமாயிற்று.

## 11. சோம தத்தன் விந்தையான கிரீடத்தைப் பெறுதலும், நாடகக்காரர்களுடன் சண்டையிடுதலும்

சோம தத்தனும் பாலாஜியும் சிறிது தூரமே சென்றார்கள். அப்பொழுது ஒருவன் கழுதையின்மேல் ஏறிக்கொண்டு வருவதை அவர்கள் கண்டார்கள். அவன் தலையில் ஏதோ ஒன்றைக் கவிழ்த்துக்கொண்டிருந்தான். அது பொன்போல மிகவும் பிரகாசித்தது. அதைக் கண்டவுடன், சோம தத்தன், " ஆஹா ! என் அதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்வேன் ! இவன் தலையில் கவிழ்த்துக் கொண்டிருக்கும் வஸ்து மேக நாதன் என்ற ஓர் அரக்க அரசனுடைய கிரீடம். அஃது எவ்வாறோ இவ்வீரனிடம் வந்திருக்கிறது. யான் இவனுடன் பொருது அதை அடைய வேண்டும்,'' என்று கூறி, அவன் சற்றுச் சமீபத்தில் வரும்வரையிற் காத்திருந்தான்.

உண்மையில் அங்குவந்தவன் யார் என்றால், ஒரு நாவிதன். அங்கு ஓர் ஊர் மிகவும் சிறியது. அதில் வைத்தியனும் இல்லை ; நாவிதனும் இல்லை ; மற்றோர் ஊர் சற்றுப் பெரிது. அவ்வூரில் அந்த நாவிதன் வசித்து வந்தான். அவனுக்குக் கொஞ்சம் வைத்தியமும் தெரியும். அவன், அந்தச் சிற்றூருக்கு ஒருவர்க்கு க்ஷவரம் செய்வதற்கும் மற்றொரு

வருக்கு உதிரம் வடியச்செய்து வைத்தியம் செய்வதற்கும் போய்க்கொண்டிருந்தான். உதிரம் வடிய வைக்க ஒரு பெருங்கிண்ணத்தை அவன் எடுத்துச் சென்றுகொண்டிருந்தான். அந்தக் கிண்ணம் புதியதாகவிருந்ததால், பொற்கிண்ணம்போலப் பிரகாசித்தது. மழை வந்ததால் கையில் குடை இல்லாததால் அதை அவன் தலைமேல் கவிழ்த்துக் கொண்டான். சோம தத்தன் எப்பொழுதும் வீரர்களையும் அவர்களுடைய உடைகளையும் செயல்களையும் பற்றியே நினைத்துக்கொண்டேயிருந்தானாதலால், எதைப் பார்த்தாலும் அவனுக்கு வீரர்கள் சம்பந்தமாகத் தோன்றிற்று. பாலாஜி தன் எஜமானன் செய்தவற்றை யறிந்து நகைத்தான்; பிறகு எங்கு அவன் கோபங் கொள்வானோ எனப் பயந்து, சிரிப்பை அடக்கிக்கொண்டான். ஆயினும், சோம தத்தன் அதைக் கண்டு, "நீ ஏன் நகைத்தாய்?" என அவனை வினவ, பாலாஜி, "ஐயா, இவன் மிகவும் உல்லாசமாக வருகின்றான். ஆனால், நொடிப்பொழுதில் உம்மிடம் அகப்படப்போகின்றானே என்று நினைத்துச் சிரித்தேன்," என்று சமயோசிதமாகப் பதிலளித்தான்.

அப்பொழுது, அந்த நாவிதன் அருகே வர, ஈட்டியைச் சாய்த்துக்கொண்டு சோம தத்தன் அவன்மேல் பாய்ந்தான். அவன் மிகவும் திடுக்கிட்டுக் கழுதையினின்றும் கீழே விழுந்து, கிண்ணத்தை விட்டுவிட்டு ஓடிவிட்டான். உடனே சோம தத்தன் அக்கிண்ணத்தைக் கையிலெடுத்துப் பார்த்து, 'ஓகோ! இதன் முகமூடியைக்காணவில்லையே! ஒரு சமயம் இது பொன்னாக விருப்பதால், இவன் இதிற் பாதியை உருக்கிவிட்டான்போலும்! சரி;

பாலாஜி, பார்த்தாயா! இஃது எவ்வளவு பெரிதாக இருக்கிறது! இதிலிருந்து இதன் சொந்தக்காரனுன மேக நாதனுடைய தலை எவ்வளவு பெரியதாகவிருக்கும் என்பதை யூகித்துக்கொள். இப்பொழுது நான் இதை இவ்வாறே வைத்துக்கொள்ளுகின்றேன். அடுத்த நகரத்தை நாம் அடைந்தவுடன், இதனுடன் முக மூடியும் சேர்த்து நான் அணிய வேண்டும்,'' என்றான்.

பாலாஜி, சோமதத்தனுடைய அறியாமையை நினைத்துத் தனக்குள் சிரித்துக்கொண்டு, "தாங்கள் அப்படியே செய்யுங்கள்,'' என்றான். பிறகு அவர்கள் முன்போலவே பிரயாணம் செய்தார்கள்.

சிறிது தூரம் அவர்கள் சென்றதும், அவர்களெதிரே ஒரு வண்டி வந்தது. அதில் உட்கார்ந்திருந்த மனிதர்கள் வெவ்வேறுவிதமாக வேஷம் தரித்திருந்தார்கள். குதிரைகளை ஓட்டிச்சென்ற வண்டிக்காரன், பிசாசுபோல வேடம் தரித்திருந்தான். வண்டி மூடி இல்லாமல் திறந்திருந்தது. வண்டியில் முதலில் எமன் வேடந் தரித்த ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் பக்கத்தில் ஒருவன் தேவ தூதனுகை வேடம் தரித்து உட்கார்ந்திருந்தான். ஒரு பக்கம் அரச வேடந் தரித்த ஒருவனும், அவனுக்கடுத்தாற்போல அரசி வேடந் தரித்த ஒருவனும், சில வேலையாட்களும், மற்ற நாடக பாத்திரங்களும் உட்கார்ந்திருந்தார்கள். திடீரென அவர்களைப் பார்த்தவுடன் பாலாஜியும் சோமதத்தனும் திடுக்கிட்டார்கள். சோம தத்தன், தனக்குப் போர்புரியச் சமயம் மற்றொன்று வாய்த்ததென நினைத்து, தன் மனத்தைத் தைரியம் செய்துகொண்டு, அவ்வண்டியினெதிரில் நின்று, "ஏ, வண்டிக்காரா, உன்னை யான் 'வண்

டிக்காரா,' என்று கூப்பிடுகிறதா, அல்லது 'பிசாசே' என்று கூப்பிடுகிறதா? நீ யாராயிருந்தாலும் சரி; உன் வண்டியில் போகும் ஆட்களும் நீயும் யார்? ஏன் இப்பயங்கர வேடங்கள் தரித்தீர்கள்? உங்கள் உயிர்களின்மேல் பற்று இருந்தால், நான் கேட்ட வினவிற்கு உடனே நீ விடையளிக்கவேண்டும். இல்லாவிட்டால், ஒரு நொடியில் உங்களை எம புரம் அனுப்பிவிடுவேன்," என்றான்.

அதற்கு அவ்வண்டியோட்டி, "ஐயா, எங்களை அதிகாரத்துடன் கேட்க நீர் யார் என நாங்கள் கேட்கலாமென்றாலும், நாங்கள் சண்டைக்கு வந்தவர்களல்லவாதலால், எங்களைப்பற்றிச் சொல்லிக்கொள்ள நாங்கள் பின் வாங்கவில்லை. நாங்கள் ஊர் ஊராகச் சென்று நாடகம் ஆடிப் பிழைப்பவர்கள்; இன்று காலை, பக்கத்து ஊரில் நாடகம் ஆடினோம்; இன்று மாலை அடுத்த ஊரில் அதே நாடகத்தை ஆடப்போவதால் எங்கள் வேடத்தைக் கலைக்காமற் செல்லுகின்றோம். இதுவே எங்கள் விஷயம். வேறு உமக்கு யாதாயினும் சொல்லவேண்டுமானால், காலதாமதஞ் செய்யாமற் கேளுங்கள்," என்றான்.

அதற்குச் சோம தத்தன், "நல்லது. யான் முதலில் ஏதோ ஒரு பெரும்போர் நிகழுமென நினைத்தேன். அப்படிக்கின்றி நீங்கள் நாடக பாத்திரங்களென யான் அறிந்தேன். மிகவும் சந்தோஷமாயிற்று. எனது குழவிப் பருவ முதல் நாடகமென்றால் எனக்குப் பிரியமதிகம். யான் பள்ளியிற்கூட நாடகம் ஆடியிருக்கின்றேன். நீங்கள் சுகமாகப் போய் வாருங்கள். உங்களுக்கு யாதாயினும் உதவி செய்யவேண்டியிருப்பின், யான் செய்யத் தயாராயிருக்கின்றேன்," என்றான்.

அப்பொழுது அவர்களில் ஒருவன், சோம தத்தனைப் பார்த்து, "உங்களுக்கு நாடகம் பார்க்க விருப்பம் இருப்பின், எங்களுடன் வரலாமே!" என்றான். ஆனால், சோம தத்தன், தான் வந்த காரியம் அரிய வீரச் செயல்கள் செய்யவேண்டியதாதலால், தான்வர அவகாசமில்லையென மொழிந்து, அவர்களுக்கு மேல் செல்ல வழிவிட்டான். அச்சமயம் அவ்வண்டியிலிருந்த ஒரு குரங்கு நீல வேணியின் வாலைக் கடிக்க, அது உடனே வட்டமிட்டு ஓடவாரம்பித்தது. சோம தத்தன் அதை அடக்கி நிறுத்த என்ன செய்தும் பயனற்றுப் போயிற்று. அப்பொழுது பாலாஜி தன்னுடைய கழுதையைவிட்டுக் கீழிறங்கி, தன் எஜமானனிருந்த அபாய நிலைமையைக்கண்டு, அவனைக் காப்பாற்ற ஓடினான். அவன் போய்ச் சேர்வதற்குள் சோம தத்தன் குதிரையினின்று கீழே விழுந்தான். அவனைத் தேற்றும் பொருட்டுப் பாலாஜி அவனை நெருங்கினான். அச்சமயம் அவன் கழுதை ஓட்டமெடுத்தது. ஆயினும், அவனுக்குத் தன் எஜமானனிடமிருந்த அன்பானது, கழுதை போனால் போகட்டுமென அவனைச் சோம தத்தன் பக்கத்திலேயே இருத்திற்று. பாலாஜி, சோம தத்தனை மார்பிற் சாய்த்துக்கொண்டு, அவன் முகத்தில் தண்ணீர் தெளித்து, அவனைத் தேற்றிக் குதிரைமேல் உட்கார வைத்தான். அதற்குள் ஓடிய கழுதையும் பாலாஜியிடம் வந்து சேர்ந்தது. சோம தத்தன் மிக்க கோபத்துடன், "அந்நாடகக் கூத்தாடிகளை யான் இலேசில் விடேன். என்னிடம் பயந்தவர்கள்போல நடித்துவிட்டு, அவர்கள் என்னை ஆபத்தில் சிக்கும்படி செய்தார்களே!" என்று கத்தினான்.

ஆனால், பாலாஜி அவனைச் சமாதானம் செய்து, "ஐயா பொறுங்கள். இதிலாவது உலக அனுபவமுள்ள

என் சொற்களைக் கொஞ்சம் கேளுங்கள். நாடகம் ஆடுபவர்களைக் கண்டால், ஜனங்களுக்குப் பிரியம் அதிகம். எங்கள் பாட்டன் ஊரில் இரு கூத்தாடிகள் ஏதோ ஒரு குற்றம் சாட்டப்பட்டுக் கொண்டுவரப்பட்டார்கள். ஆயினும், ஒருவராவது அவர்களுக்கு விரோதமாகச் சாக்ஷி சொல்ல முன் வரவில்லை. ஆதலால், அவர்களை நீதிபதி விடுவித்தனர். உலகம் அவ்வாறு நாடகக்காரர்களைப் போற்றுகின்றது. ஆதலால், தாங்கள் அவர்களுடன் சண்டையிட்டால், தங்களுக்கே ஆபத்தாக முடியும்,'' என்ருன்.

ஆனல், சோம தத்தன் அவன் வார்த்தையைக் கேட்கவில்லை. குதிரையைத் தட்டி வெகு வேகமாகக் கூத்தாடிகள் சென்ற வழியே செலுத்தினன். சிறிது தூரத்திலேயே, வண்டியில் உட்கார்ந்திருந்தவர்கள் சோம தத்தனைப் பார்த்தார்கள். சோம தத்தனுடைய விஷயத்தை அப்பொழுதே அவர்கள் அறிந்தார்களாதலால், அனைவரும் உடனே வண்டியைவிட்டுக் கீழிறங்கி, ஒவ்வொருவரும் கல்லோ, தடியோ, எது கைக்கு அகப்பட்டதோ, அதை வைத்துக்கொண்டு சண்டைக்கு ஆயத்தமாய் நின்ருர்கள். சோம தத்தன் அவர்களைப் பார்த்தான். பாலாஜி சொல்லியது அவன் ஞாபகத்திற்கு வந்தது. தவிர, அதுவரையில் அவன் சண்டையிட்டதில் உண்டான இரத்தக்காயங்களும் அவன் நினைவிற்கு வந்தன. ஆகையால், அவன் தன் பின்னல் வந்த பாலாஜியை நோக்கி, ''பாலாஜி, நீ சொல்லியது சரியே. இவர்களுடன் சண்டையிடுவதில் என்ன பிரயோஜனம்? இவர்களில் எவனும் வீரனல்லன். இவர்களுடன் சண்டையிட்டால் எனக்குப் புகழும் கிடைக்காது. பயனற்ற விஷயங்களில் தலையிடுபவன் மூடன்

என யான் படித்திருக்கிறேனாதலால், திரும்பிச் சென்று நமது வேலையைக் கவனிப்பதே நமக்குச் சிறந்தது எனத் தோன்றுகிறது,'' என்றான்.

பாலாஜி, "போகின்றது. இப்பொழுதாவது தங்களுக்கு இம்மாதிரி நல்ல எண்ணம் தோன்றியது. இதுவே, தாங்களும் நானும் செய்த பாக்கியம்,'' என்றான்.

பிறகு இருவரும் வேறு பாதை வழியாகச் சென்றார்கள். இதற்குள் இருள் சூழ, அவர்கள் ஒரு மரத்தடியில் இறங்கி, தங்கள் வாகனங்களை மரத்திற் கட்டிவிட்டுச் சிறிது உணவு புசித்தார்கள். வழக்கம்போலப் பாலாஜி படுத்த உடனே குறட்டைவிட்டு உறங்கினான். சோமதத்தன் சற்று நேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்துவிட்டு, நித்திரை செய்தான்.

---

## 12. சோமதத்தன் அரி ஐயன் ஆதல்

கதிரவன் கீழ்க்கடலிலிருந்து உதயமானான். சோமதத்தன் எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டுப் பாலாஜியை எழுப்பினான். பாலாஜி எழுந்து, தனது கழுதையையும், எஜமானன் குதிரையையும் மரத்தினின்று அவிழ்த்து வந்து, அவைகளுக்குத் தீனி வைத்துப் பிறகு தானும் சோமதத்தனுமாகச் சிறிது ஆகாரத்தைப் புசித்துவிட்டு, இருவரும் பிரயாணத்தைத் தொடங்கினர். வழியில் இடையர் சிலர் தம் ஆடுமாடுகளை ஒட்டிக்கொண்டு சென்றனர். அவர்களை நிறுத்திப் பாலாஜி அவர்களுடன்வார்த்தையாடிக்கொண்டிருந்தான். சோமதத்தன் மெதுவாக முன் சென்றுகொண்டிருந்தான். அச்சமயம், அவ்விடை

யர்களிடம் மிகவும் கெட்டியாகத் தோய்ந்த தயிர் இருந்தது. பாலாஜி, உண்டி விஷயத்தில் மிகவும் முன் யோசனையுடன் இருந்தானுதலால், கிடைத்த பொழுது தயிரை வாங்கி வைத்துக்கொள்ளுதல் சாலவும் நன்று என்று மனத்துள் உன்னி, அவர்களிடம் விலை பேசி ஒரு படித் தயிர் வாங்கினுன். ஆனுல், அதை வைத்துக்கொள்ளப் பாத்திரம் ஒன்றுமில்லாததால், நாவிதனிடமிருந்து சோம தத்தன் தலை மூடியென்று எண்ணிப் பெற்ற கிண்ணத்தில் தயிரை வாங்கிக்கொண்டான்.

அதே சமயத்தில் சோம தத்தன், பாலாஜியை மிக அவசரமாக உரக்கக் கூப்பிட்டான். பாலாஜியும் கிண்ணத்துத் தயிருடன் வேகமாகச் சென்று, "ஐயா, என்ன விசேஷம்? நீர் என்னை மிகவும் துரிதமாகக் கூப்பிட்டீரே!" என்று கேட்டான். அதற்குச் சோம தத்தன், "அதோ பார்! இரு வண்டிகள், கொடிகள் ஆகாயத்தில் பறக்க, வேகமாக வருகின்றன. யான் சீக்கிரம் போருக்கு ஆயத்தமாக விருக்கவேண்டும். இது மிகவும் அபூர்வமான சம்பவமென எனக்குத் தோன்றுகிறது. தலை மூடியில்லாமல் சமர்செய்வது என்போன்ற வீரர்க் கழகன்று. ஆதலால், சீக்கிரம் என் தலை மூடியைக் கொடு," என்றுன்.

சோம தத்தன் செய்த ஆரவாரத்தில், பாலாஜி கிண்ணத்தில் தயிர் இருப்பதை மறந்து, அதை அவனிடம் கொடுக்க, அவனும், 'அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு,' என்றபடி அதில் இருக்கும் தயிரைக் கவனியாமல் அதைத் தலையில் கவிழ்த்துக்கொண்டான். உடனே, உடலெல்லாம் நீரும் தயிர்க்கட்டியுமாயிற்று. சோம தத்தனுக்கு அது என்னவென்பதுகூடப் புலப்படவில்லை. ஆதலால்,

அது வியர்வையாக இருக்குமோ என்று தொட்டுப் பார்த்துக் கடைசியில் வெள்ளைக் கட்டிகளை எடுத்து மோந்து பார்த்துத் தயிரென அறிந்து, பாலாஜியை நோக்கி, ‘அடா, துன்மார்க்கா, என் முக மூடியிலா நீ தயிரை வாங்கி வைப்பது? கண்டோர் ஏளனம் செய்யுமாறு என்னைச் செய்தாயே!” என்று பலவாறு தூஷித்துக் கோபித்துக்கொண்டான். பாலாஜி, சோம தத்தனிடம் நன்கு பழகியதால், அவனை எவ்வாறு ஏமாற்றக்கூடும் என்பதை நன்கு அறிந்துகொண்டான். ஆதலால், அவன் தன் கைகளைத் தலையின்மேல் கூப்பி, “என்னைக் காப்பாற்ற வந்த தலைவரே, யான் அறிந்திருந்தால், இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்வேனோ? பூசனென்னும் மந்திர வாதி எப்படித் தங்களுடைய விரோதிகளை இயந்திரங்களாகவும், ஆடுகளாகவும் உரு மாற்றித் தங்களுக்குப் புகழ் வராமல் செய்து துன்புறுத்துகின்றானோ, அவ்வாறே என்னையும் என் விரோதியாகிய ஒரு மந்திர வாதி வருத்துகின்றான். இல்லாவிட்டால், தயிர் தங்களது தலை மூடிக்குள் எவ்வாறு வரக்கூடும்? அவன் இன்னமும் என்னென்ன இன்னல்கள் எனக்குச் செய்யப் போகின்றானோ, யான் அறிகிலேன்! அகதிக்குத் தெய்வமே துணை,” என்று இவ்வாறு அரற்றிப் பிரலாபித்தான். உடனே சோம தத்தன் அவன் வார்த்தைகளை நம்பி அவனிடம் தயைகூர்ந்து, “அப்பா, எனதருமைப் பாலாஜி, நீ வருந்தற்க. எந்த வேளையில் எது நடக்கவேண்டுமோ, அது நடந்தே தீரும். விதியை வெல்ல எவரால் கூடும்? ஆதலால், நாம் இனிச் செய்யவேண்டிய காரியத்தைப்பற்றி ஆலோசிப்போம்,” என்றான்.

இதற்குள் வண்டிகளும், அவர்களைச் சமீபித்தன. உடனே சோம தத்தன் வழக்கம்போலப் பாதையின் நடுவில் நின்றுகொண்டு, வண்டிகளை நிறுத்தக் கட்டளையிட்டான். அவ்வண்டிகள் மூடப்பட்டிருந்தன. இரண்டு வண்டிக்காரர்களைத் தவிர, ஓர் ஆளும் அதில் உட்கார்ந்திருந்தான். வேறு எவரும் இல்லை. சோம தத்தன் வண்டிகளை நிறுத்தக் கட்டளையிட்டதும், வண்டிக்காரர்கள் சோமதத்தனுடைய உடையையும், அவன் பேசிய மாதிரியையும் கண்டு வியந்து, ஒன்றுந் தோன்றாமல் திகைத்து, வண்டியை நிறுத்தினார்கள். பிறகு, சோம தத்தன், "நீங்கள் யார்? எங்குச் செல்கின்றீர்கள்? வண்டிக்குள் என்ன கொண்டு போகின்றீர்கள்?" என்றான். உடனே வண்டிக்காரன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மனிதன் கீழிறங்கி, "ஐயா, இருவண்டிகளிலும் இரு சிங்கங்கள் இருக்கின்றன. அவை ஆப்பிரிக்கா கண்டத்திலிருந்து கொண்டுவரப்பட்டவை. அவைகளை ஒரிஸ்ஸா நாட்டு அரசன், டில்லியிலுள்ள மொகலாய சக்கரவர்த்திக்கு அனுப்பியுள்ளான். அவைகளைக் காப்பவன் யானே. யானே அவைகளைக் கொண்டு செல்கின்றேன்," என்று சொன்னான்.

சோமதத்தன் :—அச்சிங்கங்கள் மிகப் பெரியனவா?

காப்பாளி :—ஐயா, அவைகளைப்போலப் பெரியவை ஆப்பிரிக்காவிலும் வேறு எந்நாட்டிலும் இல்லை எனத் திண்ணமாகச் சொல்வேன்.

சோம தத்தன் :—அவைகள் எப்பொழுது தீனி தின்றன? அவை மூர்க்கமாக இருக்குமா?

காப்பாளி :—ஐயா, அவைகள் தீனி தின்று இரண்டு நாட்களாயின. ஆகையால், இப்பொழுது மிகவும் பசியா

கவேயிருக்கும். இரண்டும் சுபாவமாகவே மிக்க மூர்க்க குணம் பொருந்தியவை. முன் வண்டியிலிருப்பது, ஆண் சிங்கம். பின் வண்டியிலிருப்பது பெண் சிங்கம். ஐயா, தங்களுக்கு வேண்டியது சொல்லியாயிற்று. நாங்கள் செல்கின்றோம். ஏனெனில் சீக்கிரம் நாங்கள் சேரவேண்டிய இடத்திற்குச்சென்று அவைகளுக்குத் தீனி வைக்க வேண்டும்.

இதைக்கேட்ட சோமதத்தன் புன்சிரிப்புடன், "இஃதிருக்கட்டும். உன்னை யான் இப்பொழுது செல்லவிடேன். யான் உலகெங்கும் புகழ்பெற வெளிக்கிளம்பிய ராயதுர்க்க கேசரி. யான் இம்மாதிரி இன்னும் பத்துச் சிங்கங்களைக் கண்டாலும் பயப்படேன். இது கிடக்கட்டும். இப்பொழுது யான் கூறுவதைக் கேள். அதென்னவெனில், முன் வண்டியைத் திறந்து, நீ ஆண் சிங்கத்தை வெளியே வரச் செய்ய வேண்டும். யான் அதனுடன் பொருது அதைத் தோற்கடித்துப் புகழடைய விருப்பங் கொண்டுள்ளேன்," என்றான்.

சிங்கத்தின் காப்பாளிக்கும், சோம தத்தனுக்கும் நடந்த சம்பாஷணையைப் பாலாஜி அருகேயிருந்தே கேட்டுக்கொண்டிருந்தான்; கடைசியில் சிங்கத்துடன் சண்டையிடவேண்டுமெனத் தன் எஜமானன் கூறியதைக் கேட்டதும், நடுநடுங்கி, சோம தத்தனை யணுகி, "தலைவரே, போதும். இதுகாறும் தாங்கள் சண்டையிட்டதுபோல அன்று இது. எவராவது சிங்கத்துடன் சண்டையிடுவாரோ? இதுவென்ன அறியாமை! நாம் நமதுவழிச் செல்வோம். சிங்கத்துடன் போர் செய்யும் எண்ணத்தைத் தயை செய்து விட்டுவிடுங்கள்," என்று இறைஞ்சினான். காப்பாளியும், சோம தத்தனை மிகவும் தடுத்தான். ஆயி

னும், சோம தத்தன் தான் பிடித்த பிடிவாதத்தை விடாமல், பாலாஜியை நோக்கி, "நீ பயப்பட்டால், அப்பால் எட்டிப் போ. யான் சிங்கத்துடன் சண்டையிட்டே தீருவேன்," என்று சொல்லிக் காப்பாளியை நோக்கி, "நீ உடனே அவ்வண்டியைத் திறந்து சிங்கத்தை வெளி விடுகின்றாயா, அல்லது என் ஈட்டியால் ஒரே குத்தாய் உன்னைக் குத்திவிடட்டுமா?" என்றான். அவன் என்ன சொல்லியும், சோம தத்தன் கேட்கவில்லை. பிறகு, "சரி ஐயா, என் வார்த்தையைச் சிறிதேனும் நீர் கேட்பதாகத் தோன்றவில்லை. ஆதலால், நான் நீர் சொல்லுகின்றபடி நடப்பதில் என்ன கேடு வரினும், அதற்கு யான் உத்தரவாதியல்லேன். சற்றுப் பொறும். வண்டிக்காரர்கள் மாடுகளை அவிழ்த்து ஓட்டிக்கொண்டு அப்பால் செல்லட்டும். பிறகு சிங்கத்தை வெளி வரச் செய்கிறேன்," என்றான்.

அவ்வாறே மாடுகளை அவிழ்த்துக்கொண்டு வண்டிக்காரர்கள், பாலாஜி போய் நின்ற குன்றின் சமீபம் சென்றார்கள். பிறகு, மெதுவாக வண்டியின் பின் புறம் சென்று அம்மனிதன் கதவைத் திறக்கலானான். அப்பொழுதும் அவன் சோம தத்தனுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவன் கேட்கவில்லை. இதற்குள் பாலாஜி, தான் எந்த வேளையில் இம்மாதிரிப் பித்தம் பிடித்த எஜமானனை யடைந்தானோவெனத் துக்கித்து, எஜமானன் இறந்ததாகவே நினைத்து அழ ஆரம்பித்தான்.

இதற்குள் சோம தத்தன், "சிங்கத்துடன் குதிரை மீதிலிருந்து சண்டையிடுவதா, அல்லது கீழிறங்கித் தரையில் நின்று சண்டையிடுவதா? என்று யோசித்துப் பிறகு ஒரு சமயம் குதிரை மிரண்டால் யாது செய்வ

தெனத் தரையில் நின்று சண்டையிடத் தீர்மானித்தான். உடனே குதிரையை விட்டிறங்கி, அதைச் சற்றுத் தூரத்தி லுள்ள ஒரு மரத்தில் கட்டிவிட்டு, இடக் கையில் கேடயத் தைப் பிடித்துக்கொண்டு, வலக் கையில் கத்தியை உருவிப் பிடித்துக்கொண்டு, வண்டியின் பின் புறம் சென்று, சிறி தேனும் பயப்படாமல் சிங்கத்தை எதிர்பார்த்துக்கொண்டு தயாராகவிருந்தான். அதே சமயம் கதவும் திறக்கப்பட் டது. யாது நடக்குமோவெனக் காப்பாளி பயந்து, சற்று அப்பால் சென்று நின்றான்.

மிருகேந்திரனாகிய சிங்கம் என்ன செய்தது? அது போருக்கு ஆயத்தமாயிருக்கும் சோம தத்தனைச் சிறிதே னும் இலக்ஷியம் செய்யவில்லை. அஃது எழுந்து திரும்பிக் கொட்டாவி விட்டு, பிறகு சோம தத்தனைச் சிறிது நேரம் உற்று நோக்கிப் பிறகு கண்களையும் முகத்தையும் தன் நீண்ட நாவால் துடைத்துக்கொண்டது; தலையை வெளி நீட்டி, அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்தது. ஒவ்வொரு நிமிடமும், அது தன்மீது பாயும் எனவே சோம தத்தன் கருதினான். ஆனால், அஃது அம்மாதிரி ஒன்றுஞ் செய்ய வில்லை; வண்டிக்குள் தானே சென்று படுத்துக்கொண்டது. பார்த்தான் சோம தத்தன்; மிகவும் அதிருப்தியுடன், காப்பாளியை விளித்துக் குச்சியால் அதை அடித்தும் குத்தியும், வெளிவருமாறு செய்யச் சொன்னான். ஆனால், அவன் அவ்வாறு செய்ய மறுத்தான். "நான் நீர் சொல் லிய வண்ணம், கதவைத் திறந்தேன். எல்லோருடைய அதிர்ஷ்டம், சிங்கம் சும்மாவிருந்துவிட்டது. நீர் அதிர்ஷ் டத்தை மறு தடவை பரீக்ஷிக்கக் கூடாது. தவிர, நான் அதைக் குத்தியோ அடித்தோ துன்புறுத்தினால், முதலில்

என்னையே அது கொன்று தின்னும். ஆதலால், யான் அக்காரியம் செய்யேன்," என்றான்.

"அப்படியாயின், நான் அதைக் கத்தியால் குத்து கின்றேன்," என்றான் சோம தத்தன். அம்மனிதன் அவனைத் தடுத்து, "ஐயா, யான் சொல்லுகிறதைச் சற்றுக் கவனியும். சிங்கம் இருக்கும் வண்டியின் கதவோ, திறந் திருக்கின்றது. சிங்கம் உள்ளே இருப்பதோ, வெளி வருவதோ, அதனுடைய இஷ்டத்தைப் பொறுத்தது. அது வெளிவராததால் இன்று முழுதுமே வெளிவராது. உங்களுடைய சௌரியத்தின் வன்மை இப்பொழுது ஏற்பட்டு விட்டது. நீர் சண்டையிடத் தயாராயிருப்பினும், அது சண்டையிடாமற் போய்விட்டது. இப்பொழுது நீர் ஜயமடைந்த மாதிரியேதான். சிங்கத்திற்கே இஃது அவமானம். அதுவே அபஜயமடைந்தது. உதாரணமாக ஒரு வீரன், மற்றொருவீரனைப் போருக்கிழுத்தால், அவன் வராமல் உள்ளே பதுங்கிக்கொண்டிருந்தால், இழுக்கு எவனுக்கு உண்டாகும்? ஆதலால், தாங்கள் ஜயமடைந்ததாகக் கருதிச் செல்லுங்கள்," என்றான்.

சோம தத்தன் அவன் கூறியது உண்மையெனத் தெளிந்து, சிங்கமிருந்த வண்டிக் கதவைத் தாழிடச் செய்தான்; பிறகு அவனை நோக்கி, "அப்பா, இவ்விஷயம் உலகறிய வேண்டியதாதலால், நீ இங்கு நடந்த விஷயத்தைக் குறித்து ஒரு யோக்கியதா பத்திரம் கொடுக்க வேண்டும். நீ சிங்கத்தை வெளி விடக் கதவைத் திறந்தாய். யானும் தயாராய் இருந்தேன். அது வெளி வரவில்லை. மறுபடியும் காத்தேன். அது வரவில்லை. சத்தியமும் சௌரியமுமே ஜயம். மந்திரமும் தந்திரமும்

என்னிடம் நடவா என்பது இனிமேலாவது அனைவர்க்கும் தெரியட்டும்," என்று ஆரவாரித்துப் பிறகு அவன் குதிரையை அவிழ்த்து, அதன்மீது ஏறிக்கொண்டு, பாலாஜியையும் வண்டிக்காரர்களையும் உரக்கக் கூவினான். பாலாஜி எட்டிப் பார்த்து, மிகவும் அதிசயித்தான். "ஆஹா! என் எஜமானனுடைய வீரத்தையும் தீரத்தையும் என்னென்று சொல்வது! ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனாற்கூட இயம்புவது கடினம்," எனப் போற்றிக்கொண்டு வண்டிக்காரர்களுடன் சோம தத்தன் இருக்குமிடம் ஓடி வந்தான்.

சோம தத்தன் வண்டிக்காரர்களை நோக்கி, "நீங்கள் வண்டிகளைக் கட்டிக்கொண்டு உங்கள் வழிச் செல்லுங்கள்," என்று கூறி, பாலாஜியை அவர்களுக்கும், காப்பாளிக்கும் கால தாமதம் ஆனதற்காக ஐந்து ரூபாய்கள் கொடுக்கச் சொன்னான். அவன் அவ்வாறே செய்து, "சிங்கங்கள் என்னவாயின? உயிருடன் இருக்கின்றனவா? அல்லது கொல்லப்பட்டனவா?" எனக் கேட்டான். சோம தத்தன், தான் பதில் சொல்லாமல் அந்தக் காப்பாளியை நோக்க, அவன் நடந்தவற்றைக் கொஞ்சம் அதிகமாக்கி, சோம தத்தனை மிகவும் புகழ்ந்து சொன்னான்.

சோமதத்தன் பிறகு பாலாஜியிடம், "நீ யாது நினைக்கின்றாய்? என்னுடன் சிங்கம் சண்டை செய்யாத காரணம், மந்திரமா? தந்திரமா? எனது உண்மை வீரத்தனமா?" என்று கேட்டான். பாலாஜி, "உங்கள் வீரத்தனமே இவ்வாறு செய்தது," என உடனே முன் பின் யோசியாமல் பகர்ந்தான். சிங்கங்களைச் சக்கரவர்த்தி

யிடம் அளிக்கும்போது, வழியில் நடந்தவற்றையும், தன்னுடைய பராக்கிரமத்தையும் பற்றிச் சக்கரவர்த்திக்குச் சொல்லுமாறு காப்பாளியை வேண்டிக்கொண்டு, சோம தத்தன் அவனுக்கு மற்றும் ஒரு ரூபாய் கொடுத்தான். அவனும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டான். அப்பொழுது சோம தத்தன், "இன்று முதல் என் பெயருடன் அரி ஜயன் என்ற அடை மொழியையும் யான் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆதலால், என் முழுப் பெயர் இனிமேல் அதிவீர பராக்கிரமராய துர்க்ககேசரி அரி ஜய சோம தத்தன்," என்றான். பிறகு பாலாஜியை அவ் வண்டிகள் பின்னால் ஓடி, அம்மனிதனிடம் அரசனிடம் சொல்லும்பொழுது தன்னை அரிஜயன் என்று குறிப்பிட்டுக் கூறுமாறு சொல்லச் சோம தத்தன் கட்டளையிட்டான். பாலாஜியும் அவ்வாறே சென்று, அவனிடம் மொழிந்துவிட்டுத் தன் எஜமானனை யடைந்தான்.

பிறகு அடிக்கடி இதே விஷயத்தைப்பற்றிப் பாலாஜி பேசி, ஏஜமானனை உற்று நோக்குவதும், தடவிக்கொடுப்பதுமாக விருந்தான். சோம தத்தன் மிகவும் திருப்தி யடைந்தான். பிறகு, அங்கேயே அவர்கள் கொஞ்சம் உணவு புசித்தார்கள். அப்பொழுது பாலாஜி, "எஜமானரே, என் வெகுமதி எப்பொழுது எனக்குக் கிடைக்கும்?" என்றான். சோம தத்தன், "கொஞ்சம் பொறு. காலம் நெருங்கிற்று," என்றான்.

## 13. சோம தத்தன் சந்திரசேனனால் உபசரிக்கப்படல்

பாலாஜியும் சோம தத்தனும் பேசிக்கொண்டே சென்றார்கள். சிறிது தூரம் போனவுடன் அவர்கள் ஒருவன் ஒரு பெருங்கருங் குதிரையின்மேல் ஏறித் தங்களெதிரே வருவதைக் கண்டார்கள். அவன் அவர்களைச் சமீபித்ததும் சோம தத்தனது உடையைப் பார்த்துவிட்டு, அவனை நோக்கி, "என்ன ஐயா, நீர்தானா சற்று முன் சிங்கத்துடன் சண்டையிட ஆயத்தமாயிருந்தவர்? நான் அவ்வண்டிகளைச் சந்தித்தேன். வண்டிக்காரர்கள் உமது தைரியத்தைப்பற்றி மிகவும் மெச்சிக்கொண்டார்கள். உம்மைச் சந்தித்தது எனக்கு மிகவும் சந்தோஷத்தை உண்டாக்குகின்றது. என் மாளிகை அருகேயிருக்கிறது. தாம் வந்து அங்கு என்னுடன் சில நாட்கள் இருந்து பிறகு செல்ல வேண்டும்," எனக் கேட்டுக்கொண்டான்.

சோம தத்தன் அதற்குப் பதில்சொல்லுவதற்குமுன் பாலாஜி தன் எஜமானன் வருவானெனன ஒப்புக்கொண்டு, அவனையும் சம்மதிக்கச் செய்தான். அப்பொழுது சோம தத்தன், "பாலாஜிக்கு உண்டியென்றால் போதும்," எனப் பரிகாசமாகச் சொன்னான். அதற்குப் பாலாஜி, "ஆம் ஐயா, நாம் இவ்வயிற்றுக்காகவே பாடு படுகிறோம். ஆதலால், சாப்பாட்டைக் கவனிக்காமல் பின் எதைக் கவனிப்பது?" என்றான்.

பிறகு சோம தத்தன் வந்தவன் பெயரைக் கேட்க, அவன், 'என் பெயர் சந்திரசேனன்,' எனப் பதில்சொன்னான். பிறகு அவர்களெல்லோரும் சந்திரசேனனுடைய

வீட்டை நோக்கிச் சென்றார்கள். செல்லும்பொழுது, சோம தத்தன் தன் அரிய செயல்களையும், தான் உலகெங்கும் புகழ் பெற்று, துஷ்டர்களைக் கொன்று, தருமம் ஓங்க வெளிக்கிளம்பியதையும் சொன்னான். இவைகளைக் கேட்டுச் சந்திரசேனன், சோம தத்தன் எம்மாதிரி மனிதன் என்பதைக் கண்டுகொண்டான்.

சந்திரசேனன் ஒரு தனவந்தன். ஆதலால், அவன் சோம தத்தனைத் தன் வீட்டில்வைத்து, அவனது பைத்தியத்தை முழுதும் அறிந்து சிறிது வேடிக்கை பார்க்கலாம் என்றும், அப்படிச் செய்வது காலப்போக்காகவும் இருக்கும் என்றும் நினைத்தான். சிறிது நேரத்தில் அவர்கள் சந்திரசேனனுடைய வீட்டையடைந்தார்கள். அஃது ஒரு பெரிய மாளிகை. அவர்களைச் சந்திரசேனனுடைய மனைவி விலாஸவதியும், மகன் சூரசேனனும் எதிர்கொண்டழைத்தனர். அவ்விருவரும் வந்த நூதன மனிதனைப் பார்த்து ஆச்சரியப்படச் சந்திரசேனன் தன் மனைவியை நோக்கி, "விலாஸவதி, இவர் சோம தத்தர் என்று உலகம் புகழும் மாபெரு வீரர்; சமீபத்தில் சிங்கத்தையும் வென்று அரி ஐயர் எனப் பெயர் பூண்டவர். நமது பூர்வ ஜன்ம புண்ணியத்தால் நான் இவரைச் சந்தித்தேன். இவர் நம் வீட்டுக்கு எனது வேண்டுகோளின்மேல் வந்துள்ளார். இவரை நீ மிக்க பரிவுடன் உபசரிக்க வேண்டும்," என்றான். அவ்வம்மையும், "அப்படியேசெய்வேன். வாரும் ஐயா, உம் உடைகளைக் கழற்றி ஸ்நானம் செய்து, எங்கள் வீட்டிலிருக்கும் சொற்ப உணவைப் புசியும்," என்றாள்.

சோம தத்தன், "அம்மா, மிகவும் வந்தனம். உம் கணவர் என்னை மிகவும் பெருமைப்படுத்தினரே யொழிய,

யான் அவ்வளவு பெரிய மனிதனல்லேன்," என மொழிந்தான்.

பிறகு சூரசேனனும் சோமதத்தனும் வார்த்தையாடிக்கொண்டிருந்தனர். சோமதத்தன் உடைகளைக் கழற்றி ஸ்நானம் செய்யச் சென்றபொழுது, தகப்பனும் தனயனும், சோம தத்தனைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். சந்திரசேனன், "சூரா, நமது விருந்தாளியைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என வினவ, அவன், "அப்பா, யான் பழகியது சிறிது நேரமே ஆயினும், இவன் ஒரு பெரும்பித்தனாகக் காணப்படுகின்றான். இவனிடம் அறிவைக்காட்டிலும் அறியாமையே அதிகம் குடிகொண்டு இருக்கிறது என நினைக்கிறேன்," என்றான்.

இதற்குள் சோம தத்தனும் வந்தான். அனைவரும் சென்று வயிறார உண்டனர். பாலாஜி, அன்றைய தினமே தன் ஆயுளில் ஒரு சிறந்த நாளாகக் கருதினான். அவன், அம்மாதிரிச் சாப்பாடு எங்கும் என்றும் சாப்பிட்டதில்லை. அதிலும், சோம தத்தனுடன் அலைந்த நாட்களெல்லாம் அவனுக்குக் கால் வயிற்றுச் சாப்பாடேயொழிய, முழுச் சாப்பாடேயில்லை. எங்குச் சோம தத்தன் சந்திரசேனன் வீட்டைவிட்டுச் சீக்கிரம் கிளம்பிவிடுவானோவெனப் பயந்தான். பல நாட்கள் அவன் அங்குத் தாமதிக்குமாறு கடவுள் அருள் புரிய வேண்டுமெனக் கடவுளைத் துதித்தான். இது நிற்க.

சூரசேனன் கவி பாடுவதில் சிறிது வல்லவனென அறிந்து, சோம தத்தன் அவனைப்பாடச்சொன்னான். அவனும் அவ்வாறே செய்யச் சோம தத்தன் மிகவும் நன்றாயிருக்கிறதென அவனைப் புகழ்ந்தான். பிறகு தான் பள்ளி

யில் கற்கும்பொழுதே கவிபாடுவதுண்டு என்றும், பாக்கள் பாடுவதற்கு முன் சங்கீத சாஸ்திரத்தை நன்கு கற்க வேண்டும் என்றும் சோம தத்தன் சொன்னான். அப்பொழுது சூரசேனன், "ஐயா, தாங்கள் எந்தச் சாஸ்திரத்தை நன்கு கற்றிருக்கின்றீர்?" என்று வினவினான். அதற்குச் சோம தத்தன், "யான் படித்துத் தேர்ந்தது போர் வீர சாஸ்திரம். அந்தச் சாஸ்திரக் கடலைக் கடந்தவன் எனவே என்னைச் சொல்லலாம். அந்தச் சாஸ்திரம், மற்றெல்லாவற்றைக் காட்டிலும் மேம்பட்டது. அச்சாஸ்திரத்தையறிந்தவன், உலகிலுள்ள மாந்தர்களைத் திருத்தவேண்டிய நியாயம் அநியாயம் முதலியவைகளை யறிந்தவனாகவிருக்க வேண்டும். அவன் மத விஷயங்களை நன்கு அறிந்திருந்தாலே, பிற மதஸ்தர்களுடன் சண்டையிட்டு, அவர்களை வென்று, சிறந்த மதத்தின் முக்கிய விஷயங்களை எடுத்துக் காட்டக் கூடும். போரில் காயம் பட்டால், அதை ஆற்றிக் கொள்ள மூலிகைகளின் விஷயங்கள் அவனுக்குத் தெரிய வேண்டும். ஏனெனில், காட்டில் அவனுக்கு எங்கே மருத்துவர்கள் அகப்படுவார்கள்? வீரர்கள் நாட்டிலும் சண்டையிடவேண்டிவரும்; காட்டிலும் சண்டையிடவேண்டிவரும். மற்றும் அவனுக்கு வானசாஸ்திரம்தெரியவேண்டும். அப்பொழுது எந்த நக்ஷத்திரமும் எந்தக்கிரகமும் எந்த இராசியையோவீட்டையோ அடைந்தால் நன்மைபயக்கும், புகழ் உண்டாகும் என்பதை அவன் அறியக் கூடும். கணக்கும் அவனுக்குத் தெரிய வேண்டும். அவன் நன்னடக்கையும் நற்சிந்தையும் உள்ளவனாயிருத்தல் மிகவும் அவசியம். அவன் உண்மையையே கடைப்பிடித்தவனாகவிருக்கவேண்டும். அவனிடம் பொறாமை, சுயநலம் பாராட்டுதல் முத

லிய தீக்குணங்கள் பொருந்தியிருத்தல்கூடாது. ஆதலால், நான் போர் வீர சாஸ்திரம் மற்றெல்லாச் சாஸ்திரத்தைக் காட்டிலும் சிறந்தது என்றேன்,'' என்று கூறித் தன் பிரசங்கத்தை முடித்தான்.

உடனே சூரசேனன், "ஐயா, தாங்கள் சொல்லியவாறே யிருப்பின், அஃது ஒரு பெரிய சாஸ்திரமேயாகும். ஆனால், அம்மாதிரிச் சாஸ்திரத்தைக் கற்றவரும் உளரோ என யான் அயிர்க்கின்றேன்,'' என்றான்.

உடனே சோம தத்தன் மிகவெகுண்டு, "நீயோ, சிறியவன். உலக அனுபவம் உனக்கு இல்லை. போர் வீர சாஸ்திரம் சிறந்தது என்பதைப்பற்றி நீ சிறிதும் சந்தேகிக்க வேண்டா. இப்பொழுது சொல்லிய விஷயங்களை யான் படித்திருக்கின்றேன். இவை யனைத்தும் என்னிடமே உள. யான் இந்நிலவுலகில் தற்காலத்தில் வீரர்கள் வெகு சிலரே உளர் என்பதை அறிந்தே, அவர்களை அதிகப்படுத்தக் கிளம்பினேன். ஒவ்வொருவரும் சுயநலத்தையும் இலாபத்தையும் கருதி, வீரத்தன்மை குன்றி, இழிமக்களாயினர்,'' என்று பலவாறு பேசினான்.

சூரசேனனும், அவன் தகப்பன் முதலியோரு மிவைகளைக் கேட்டுத் தமக்குள் நகைத்துக்கொண்டிருந்தனர்.

சோமதத்தன், இவ்வாறு சந்திரசேனன் வீட்டில் சுகமாக இருக்கும் நாளில், அவ்வூரில் ஒரு விசேஷம் நடந்தது. அதில் நமது கதா நாயகன் முக்கிய மனிதனுக ஆனன். அவ்வூரில் தனபாலன் என்றும் தேவபாலன் என்றும் இருவர் இருந்தனர். அவர்களில் தனபாலன் பெயருக்குத் தகுந்தாற்போல மிக்க தனம் படைத்தவன்; வயதில் மூத்தவன். தேவபாலனேவெனில், ஏழை; ஆயி

னும், மிக்க தேக பலத்துடன் எல்லா நற்குணங்களையும் உடையவன்; அடிக்கடி அந்நாட்டுப் படையுடன் கலந்து போரில் புறங்கொடாது சண்டைசெய்து புகழ்பெற்றவன். அவ்விருவரும் விசித்திரவதி என்னும் பதினாறுவட்டைப் பருவமுள்ள மங்கையைக் காதலித்தார்கள். பெண்ணுக்குத் தேவபாலன்மீது பிரியம் இருந்தாலும், அவளுடைய பெற்றோர் தனபாலனுக்கே அவளை மணம் புரிவிப்பதாக வாக்களித்தனர். இச்செய்தியைச் செவியுற்றதும், தேவபாலன் அவ்வூரை விட்டே அகன்றான்.

நாட்கள் பல சென்றன. கடைசியில் மணச் சடங்கு நிறைவேறும் நாளும் நெருங்கிற்று. மணம் நிகழும் தினம், மணமகளும், மணமகனும் நீராடிப் பட்டு வஸ்திரந் தரித்து, ஊர் வலம் வந்தார்கள். அப்பொழுது திடீரென அவர்கள் முன் தேவபாலன் போர்க் கோலத்துடன் தோன்றினன். அங்குள்ளார் அனைவரும் தேவபாலன் கலியாணத்தைத் தடை செய்வதற்கே வந்தானென நினைத்தனர். ஆனால், அவன் தனபாலனை நோக்கி, "நண்ப, நீ நீடூழி வாழ்க! யான் விசித்திரவதியை முழு மனத்துடன் காதலித்தேனெனினும், எனக்கு அவளை யடையும் பாக்கியம் இல்லை. உனக்கே அது கிடைத்தது. நீங்கள் இருவரும் சுகமாய் இருங்கள். எனக்கு இவ்வுடலைத் தரித்தல் பெரும்பாரமாக விருப்பதால், இதோ உங்கள் முன் இறக்கிறேன்," என்று சொல்லித் தன் உடை வாளை எடுத்துக் கீழே போட்டு, அதன்மீது பொத்தென விழுந்தான். உடனே அவன் தேகத்திலிருந்து இரத்தம் பீறிட்டது. அவன் கண்கள் மேலே செருகின. அப்பொழுது அவன் விசித்திரவதியை விளித்து, "உன்னை நேசித்த எனக்கு நீ இப்

பொழுதாவது சில பிரியமான வார்த்தைகள் உரைக்கக் கூடாதா?" எனச் சொல்லிப் பிறகு தனபாலனை நோக்கி, "நண்பா, யான் இதோ இறக்கின்றேன். இப்பொழுதாவது அவளை என் மனைவியாகச் செய்து, சில மணிகளுக்குப்பின் நீ கலியாணம் செய்துகொள்ளக்கூடாதா? இனிமேல் அவள் உன்னை விட்டுப் போகப் போவதில்லை. நமது ஜாதியில் கைம்பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளும் வழக்கம் உண்டு. அப்படியிருக்கச் சில நாழிகைகள் நீ எனக்கு அக்களிப்பை உண்டாக்கக் கூடாதா?" என்று சொன்னான். அங்குள்ளார் அனைவரும் தேவபாலன் சொல்லிய வண்ணமே செய்யும்படி தனபாலனை வற்புறுத்தினார்கள். எல்லாரைக்காட்டிலும் சோமதத்தனே மிகவும் உரக்கக் கூறி வற்புறுத்தினான். தேவபாலனது இளமையும் தீரமுமே அவன் மனத்தைக் காந்தம்போல அவனிடம் இழுத்தன. கடைசியில் தனபாலன் ஒப்புக்கொள்ள, அப்படியே தேவபாலனுக்கும் விசித்திரவதிக்கும் மணம் நடந்தேறியது. உடனே குற்றுயிராகக் கிடந்த தேவபாலன் திடீரென எழுந்து, மார்பில் இரத்தக் கறையுடன் இருந்த மேல் அங்கியை நீக்கினான். உடனே ஒரு ரப்பர் பை கீழே விழுந்தது. அவன் அது நிறையச் சிவப்பு மையைக் கொட்டி மூடி, மேலங்கியைத் தரித்து வந்து, இம்மாதிரிச் சூழ்ச்சி செய்தான். அவன் விழுந்த பொழுது ரப்பர்பை கிழிந்ததேயொழிய, உடம்பில் காயம் படவில்லை. உதிரம்போலத் தோன்றியது சிவப்பு மையேயொழிய இரத்தமன்று என்பதைக் கண்டதும், அனைவரும் அதிசயித்தனர். விசித்திரவதியும் புன்னகையுடன் தேவபாலனருகில் போய் நின்றாள். தனபாலனுக்கு மட்டும்

கோபம் வெள்ளம்போலப் பொங்கிற்று. அவன் தனது உடை வாளை உருவித் தன்னுடன் போர் செய்யத் தேவபாலனை அழைத்தான். அச்சமயம் சோமதத்தன், அவன் முன் சென்று, "ஐயா, தனபாலரே, வயதில் முதிர்ந்தவனும், சௌரியத்தில் ஈடில்லாதவனுமாகிய அதிவீரபராக்கிரம ராய துர்க்க கேசரி அரி ஜய சோம தத்தனாகிய யான் சொல்வதைக் கேளும்: நீரோ, தனவந்தர். உம்முடைய பணத்திற்கே அனேகர் தத்தம் பெண்களை மணஞ்செய்து கொடுக்க முன் வருவார். ஆனால், இவ்விளைஞனோ, அப்படியல்ல. மேலும், இவ்விருவரும் ஒருவரை யொருவர் உண்மையாகக் காதலிக்கின்றனர். உம்மிடம் அன்பில்லாத அணங்கை மணம் செய்துகொள்வதைக்காட்டிலும் நீர் மணமில்லாதிருத்தலே சிறந்ததல்லவா? ஆதலால், நீர் முழு மனத்துடன் அவர்களைச் சந்தோஷமாக இல்லறத்தை நடத்துமாறு சொல்லும். அப்படியன்றி மறுபடியும் வாதிட்டீரானால், யான் அவ்விளைஞனுடன்சேர்ந்து இவ்வூரார் எல்லாம் ஒருமிக்க வரினும், அவர்களையும் உம்மையும் எமனுலகு அடையச் செய்வேன்,'' என்று சொல்லிப் போருக்குத் தயாராய் நின்றான்.

அங்கிருந்தார் அனைவரும் தனபாலனை விசித்திரவதியை மணம் செய்யும் எண்ணத்தை விட்டுவிட வற்புறுத்தியதன்மேல், அவன் சம்மதித்ததும் தவிர, தனக்குப் போட்ட மணப் பந்தலிலேயே தேவபாலனுக்கும் விசித்திரவதிக்கும் மணம் மிகவும் விமரிசையாக நடத்தி, ஸ்திரீ தனமாக ஒரு வீடும் மிக்க பொருளும் வழங்கினான். அதனால், அனைவரும் தனபாலனைப் போற்றினர்.

சோம தத்தன் சந்திர சேனனுடன் வசித்தபொழுது

மற்றொரு விநோத சம்பவம் நிகழ்ந்தது. அஃதென்ன வெனில், ஊர் ஊராகச் சுற்றும் ஒரு பொம்மலாட்டக் காரன் அவ்வூர் வந்து, அவ்வூர் ஜனங்களுக்குப் பொம்ம லாட்டத்தைக் காண்பிக்க ஆரம்பித்தான். அவன் அனேக வேடிக்கைகளைக் காண்பித்துக் கடைசியில் ஓர் அரசனுடைய நாட்டை மற்றோர் அரசன் பேராசையால் பிடுங்கிக்கொள்ளுமாறு அவனுடன் சண்டைக்குச் செல் வதையும் காண்பித்தான். அப்பொழுது அஃது உண்மை யான சண்டையெனவே சோம தத்தன் நினைத்துத் தன் வாளை ஓங்கி, அம்பொம்மைகளைச் சின்ன பின்னமாக்கி னான். பொம்மலாட்டக்காரன், 'ஐயோ! என் பிழைப்புப் போயிற்றே!' எனக் கதறினான். பிறகு அங்கிருந்தோர் அவனைச் சமாதானப்படுத்திச் சோம தத்தனை அவனுக்கு நஷ்ட ஈடு கொடுக்குமாறு செய்தார்கள்.

இவ்வாறு கவலையின்றிக் காலங்கழித்துவிட்டுச் சோம தத்தன் பாலாஜியுடன் சந்திர சேனனுக்கு அதுகாறும் அவன் தங்களை உபசரித்ததற்காக வந்தனம் கூறி அவனி டமும் அவன் மனைவி பிள்ளை முதலியோரிடமும் அவ்வூரா ரிடமும் செலவு பெற்றுக்கொண்டு கிளம்பினான். ஆனால், பாலாஜி, "இத்தனை நாள் சுகமாக உண்டோமே! இனி மேல் நம் எஜமானர் நம்மை என்ன கஷ்டம் அனுபவிக் கச் செய்வாரோ!" என வருத்தப்பட்டுக்கொண்டே அவ னைப் பின் தொடர்ந்தான்.

# 14. சோம தத்தன் அரசனுடைய விருந்தாளியாதலும், பாலாஜி மாகாண அதிபதியாதலும்

சோம தத்தனும் பாலாஜியும் ஒரு காத தூரம் சென்றிருப்பார்கள். அப்பொழுது, பொழுதும் நன்றாகப் புலர்ந்தது. கதிரவனும் தன் கிரணங்களைச் சுருக்கிக்கொண்டு மேற்கடலில் ஆழ்ந்தான். அவ்வமயம் சற்றுத் தூரத்தில் ஓர் அடர்ந்த சோலை நம் பிரயாணிகள் கண்களுக்குத் தென்பட்டது. அவர்கள் அதை நோக்கிச் சென்றார்கள். அங்குப் பல சேடியர்களாலும் வேலையாட்களாலும் சூழப்பட்டு ஓர் அழகிய மாது பரிமாவின்மேல் இவர்ந்திருந்தாள். அவளைக் கண்ணுற்றதும் சோம தத்தன் பாலாஜியைக் கூப்பிட்டு, "நீ போய் அந்த ஸ்திரீயிடம் என்னுடைய அடைமொழிகளுடன் என் பெயரையும் பிரதாபத்தையும் சொல்லி, யான் நேரில் அவ்வம்மையைக் கண்டு என் வந்தனத்தைக் கூறுவதற்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டு வா," என்றான்.

உடனே பாலாஜி அவனுடைய கழுதையின்மேல் உட்கார்ந்தபடியே அதை அங்கு ஓட்டிச்சென்று, அம்மாதை வணங்கி, "அம்மா, யான் அதிவீர பராக்கிரம ராயதுர்க்க கேசரி அரி ஜய சோம தத்தரின் வேலையாள். ஆயினும், அவருடைய தோழனென்றே நீர் என்னை நினைத்துக் கொள்ளலாம். அவர் மகாராஷ்டிரம் முதல் ஓரிஸ்ஸாவரையில் அனேக வீரச் செயல்களைச் செய்து, இப்பொழுது இங்கு வந்துள்ளார். உம்மை நேரில் காணவேண்டுமென்று அவாக்கொண்டிருப்பதால், நீர் அதற்கு அனுமதிகொடுக்க

வேண்டும்,'' என்று கேட்டான். அவளும் சம்மதித்து, அவனை அழைத்து வரச் சொன்னாள்.

உடனே சற்று அப்பால் ஒரு மண்டபத்தில் இருந்த தன் கணவனை அவள் கூப்பிட்டுச் சமாசாரத்தைச் சொன்னாள். அவர்கள் இருவரும் பிரயாணிகளின் மூலம் சோம தத்தனைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தனர். ஆதலால், அவர்கள் அவனைக் காண மிகவும் சந்தோஷங்கொண்டார்கள். அவர்கள் அவந்தி நாட்டையாளும் அரசனும் அரசியும் ஆவார்கள். அவர்கள் நந்தவனத்திற்குக் காலப்போக்குக்காக வந்தார்கள். வேனிற்காலமாகவிருந்ததால், அவர்கள் தங்களுடைய தலை நகரை விட்டு, மகேந்திர புரம் என்னும் ஒரு குளிர்ந்த ஊரில் ஓர் அரண்மனையில் வசித்து வந்தார்கள்; சோம தத்தனைக் காலப்போக்கிற்குத் தங்களுடன் அழைத்துச் செல்லக் கருதினார்கள். இது நிற்க.

பாலாஜி சோம தத்தனிடம் அச்சீமாட்டி அனுமதி அளித்ததாகத் தெரியப்படுத்தியவுடனே, அவன் தன் உடைகளை ஒழுங்குப்படுத்திக்கொண்டு, ஆயுதங்களைச் சரிப் படுத்திக்கொண்டு, குதிரையைத் தட்டிவிட்டான். பாலாஜியும் அவன் பின்னே சென்றான். அவர்கள் அரசனும் அரசியும் இருந்தவிடம் சென்றவுடன், சோம தத்தன் குதிரையினின்று கீழிறங்கப்போனான். பாலாஜி, அவனை இறக்க வேண்டிக் கழுதையை விட்டு இறங்கும்பொழுது அதன் மேல் போட்டிருந்த சேணம் காலில் மாட்டித் தொங்கலானான். அதைக் கவனியாமல், பாலாஜி நிற்கின்றான் என நினைத்துச் சோம தத்தனும் குதிரையை விட்டு இறங்கித் தடுக்கிக் கீழே விழுந்தனன். உடனே அவன் பாலாஜியைத் திட்டினான். அப்பொழுது அரசன் தனது

வேலையாட்களிற் சிலரை அனுப்பி, அவ்விருவரையும் எழுந்திருக்கச் செய்தான்.

பிறகு சோம தத்தன் அவ்விரு அரச தம்பதிகளையும் அணுகி, வந்தனம் செய்து, அவர்கள் யார் என அறிய விரும்புவதாகச் சொன்னான். உடனே அரசன், "சோம தத்தரே, யான் அவந்தி நாட்டு அரசன். இவள் என்பட்ட மகிஷி. நாங்கள் உம்மைப் பார்த்திராவிட்டாலும், உம்மைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். நெடுநாளாக உம்மைப் பார்க்கவேண்டுமென்று ஆவல்கொண்டுள்ளோமாதலால், இன்று உம்மைக் காண நேர்ந்தது எங்களுக்கு நிரம்பச் சந்தோஷம். நீர் எங்களுடன் வந்து சில நாட்கள் அரண்மனையில் இருந்து போம்," என்றான்.

சோம தத்தன், "மிகவும் வந்தனம். உங்களுடைய அன்பிற்குப் பாத்திரனான எனது பாக்கியமே பாக்கியம்! என் செயல்களைக் கேட்டதாகச் சொன்னீர்களே! சமீபத்தில் சிங்கத்தை வென்று அரி ஜயன் எனப் பெயர் பூண்டதை நீர் அறிவீரோ?" என்று கேட்டான். அதற்கு அரசன், 'அவ்விஷயம் இன்னும் என் காதிற்கெட்டவில்லை,' என்றான்.

உடனே சோம தத்தன் பாலாஜியைக் கூப்பிட்டு, "பாலாஜி, அரசருக்கும் அரசியாருக்கும் நாம் சிங்கத்தை வென்ற விஷயத்தைச் சுருங்கச் சொல்," என்றான். அவனும் எங்குச் சோம தத்தனைப் புகழ வேண்டுமோ, அங்கு மிகவும் விரிவாகச் சொல்லிக் கடைசியில் சோம தத்தனை அரி ஜயனெனக் கூப்பிடுவதே முறைமை எனக் கூறி முடித்தான். எஜமானனுக்குமேல் வேலையாள் பித்தன் என அவர்கள் கண்டு, மனத்துள் சிரித்துக்கொண்டு,

காலப் போக்கிற்கு இருவர் கிடைத்தனரே எனக் களிப் பெய்தினார்கள்.

பிறகு அனைவரும் அரசமாளிகையை நோக்கிச் சென்றனர். பாலாஜியும் சோமதத்தனும் அனேக விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே சென்றார்கள். அப்பொழுது பாலாஜி, தான் சோம தத்தனை யடைந்த காரணம் அவன் தன்னை ஒரு நாட்டிற்கு அதிபதியாக்குவதாக வாக்களித்ததேயெனச் சொன்னான்.

அரசன் வேடிக்கைப் பிரியன். ஆதலால், சோம தத்தன் பித்தத்துக்கு ஏற்ற மருந்து அவனுக்கு மிகவும் மரியாதை செய்வதே எனக் கண்டு, சில வேலையாட்களை முன்னால் அனுப்பி, அவனை எவ்வாறு அழைக்க வேண்டுமோ, அவனுக்கு எவ்வாறு மரியாதை செய்ய வேண்டுமோ, அவையெல்லாம் கூறித் தயாராயிருக்கக் கட்டளையிட்டான்.

அவர்கள் மாளிகையின் வாயிலை அடைந்தார்கள். உடனே மேள வாத்தியங்கள் முழங்கின. நல்ல உடைகள் தரித்த பலர் வந்து சோம தத்தனுக்கு ஆசி கூறிக் குதிரையினின்றும் அவனை இறக்கி, உள்ளே அழைத்துச் சென்றனர். மந்திரி வந்து அவனை வணங்கி, அவன்மேல் ஒரு விலையுயர்ந்த சால்வையைப் போட்டான். அப்பொழுது பல ஆடவர்களும் மகளிர்களும், 'சுத்த வீர சிகாமணியாகிய அரிஜயரென்னும் சோமதத்தர் நீடூழிவாழ்க," என உரக்கக் கூவிப் புஷ்ப வருஷம் வருஷித்தார்கள். சோம தத்தன், "ஆஹா! இதுவரையில் நான் என் பிரதாபத்தை வெளியில் எவரும் அறியவில்லையென்றல்லவா நினைத்தேன்! இப்பொழுதே யான் உலகப் பிரசித்தி

அடைந்ததாகக் கருதுகின்றேன். இன்றேல், எனக்கு இவ்வளவு மரியாதை இங்கு ஏன் நடக்கின்றது ?" என்று நினைத்தான்.

அச்சமயம் பாலாஜி, தன் எஜமானனுக்கு நடக்கும் மரியாதையையும் உபசாரத்தையும் கண்டு, ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தான். "ஆஹா ! இப்பெரியோரை யான் அடைந்ததால் எனக்குண்டான பாக்கியமே பாக்கியம் ! 'பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும்,' என்பது போல, இவரை யடைந்ததாலேயே யானும் அரசரது விருந்தாளியாக நேர்ந்தது. இனிமேல் எனக்கு உண்டிக்கும் உடைக்கும் என்ன குறைவு? என் வாழ்நாள் முழுதையும் யான் இங்கேயேகழித்தால், அதுவே போதுமானது. எனக்கு இராஜ்யமும் வேண்டா; மாகாணமும் வேண்டா," என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அப்பொழுது, தன்னுடைய கழுதையை மாளிகைக்கு வெளியே நிறுத்தியது அவன் ஞாபகத்திற்குவர, "அஃது என்னவாயிற்றோ ! எவரேனும் அதை ஜாக்கிரதையாகக் கவனிப்பார்களா ?" என்று கவலையுற்றான். அப்பொழுது அங்கு நின்ற அரசியின் தோழி ஒருத்தியைக் கூப்பிட்டு, "அம்மா, நீ சற்று வெளிச்சென்று, என் கழுதையைக் கொண்டுபோய் ஜாக்கிரதையாகக் கட்டிவிட்டு வா," என்றான். அவள் மிகவும் கோபங் கொண்டு, "என்ன ஐயா, மூடனாக இருக்கிறாய் ? உன் கழுதையைப் பார்த்துக்கட்ட என்னையா நீ அனுப்புவது? அரசியிடம் யான் கழுதை மேய்க்கவா வேலைக்கமர்ந்தேன் ?" என்று கேட்டாள். பாலாஜி தான் ஒரு பெருந்தப்பும் செய்யவில்லையென்றும், தான் அவளைப் போய்க் கழுதையைக் கட்டச் சொன்ன

தால், தனக்கு நல்ல உண்டியை இழக்க நேரிடுமோவென்றும் பயந்தான். இதற்குள் இச்சச்சரவு அரசன் செவியில் விழுந்தது. அவன் பாலாஜியைக் கூப்பிட்டு, " பாலாஜி, நீ சிறிதேனும் கவலைப்படாதே. உன் கழுதைக்கும் உனக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லையெனச் சொல்லும்படி நான் உன்னைப்போலவே உன் கழுதையையும் நன்கு கவனிக்கச் செய்கிறேன்," என்றான். பாலாஜி மிகவும் சந்தோஷமடைந்தான்.

பிறகு. சோம தத்தனை அரச சபைக்கு அழைத்துச் சென்றனர். அங்குச் சென்றதும், அனைவரும் எழுந்து, அவனை ஆசி கூறி அழைத்தனர்; பிறகு அவனுக்கெனப் பிரத்தியேகமாக ஏற்படுத்திய அறைக்கு அவனை அழைத்துச் சென்றனர். அவ்வறையின் தரை முழுதும் இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. சுவரில் அனேக வகைப் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. கட்டிலும், சோபாவும், நாற்காலிகளும் அவ்வறையில் போடப்பட்டிருந்தன. மூன்று பணிப் பெண்கள் வந்து, அவனுடைய உடையைக் கழற்றினார்கள். அவர்களுக்கு முன்னமே சோம தத்தனை ஒரு பெரிய சீமானையோ அல்லது அரசனையோ எவ்வாறு நடத்துவார்களோ, அம்மாதிரி நடத்துமாறு அரசன் கட்டளையிட்டிருந்தானதலால், அவர்கள் மிகவும் உபசாரம் செய்யத் தொடங்கினார்கள். கவசம், மேல் அங்கி முதலியவைகளைக் கழற்றியவுடன், அவன் பார்வைக்குக் கிளைகளும் இலைகளுமில்லாமலிருக்கும் ஒரு மரம்போலவிருந்தான். உடம்பு மெலிந்து, வாயில் பற்கள் இன்றி, மேல் தாடையும் கீழ்த்தாடையும் ஒன்றைவிட்டொன்று பிரியாமல் இருந்தன. அவனைக்

கண்டோர் நகைக்காமலிருக்கமுடியாது. அப்பெண்களும், அரசன் முன்னமே எச்சரிக்காமலிருந்தால், நகைத்திருப்பார்கள்.

பிறகு பன்னீர் கலந்த வாசனை நீரில் ஸ்நானம் செய்து பட்டாடை யுடுத்திக் கத்தியைப் பட்டையில் செருகி, மேலே சிவந்த சால்வையைத் தரித்து, நெற்றிக்குப் பொட்டிட்டுக்கொண்டு, தலையில் பச்சைக் குல்லாயை அணிந்து, சோம தத்தன் போஜன சாலைக்குச் சென்றான். அவன் பின்னால் பாலாஜியும் ஒன்றுந் தோன்றாதவனாய், "நாம் காண்பது கனவோ, நனவோ!" எனச் சந்தேகித்துக்கொண்டே சென்றான். போஜன அறையில் இருந்த அரசனும் அரசியும் சோம தத்தனை அழைத்து, ஓர் அழகிய மணையில் உட்காரச்செய்து, அவன் பக்கத்தில் அவர்களும் உட்கார்ந்தார்கள். பாலாஜி சற்று அப்பால் உட்கார்ந்து உண்டான். பாலாஜி பேசியது அரசியையும் அரசனையும் விலா வெடிக்கச் சிரிக்கச்செய்தது. அப்பொழுது பரிசாரகனையும் மற்றொரு வேலைக்காரனையும் அரசி கூப்பிட்டு, பாலாஜிக்கு வேண்டியவற்றை அளிக்கக் கட்டளை யிட்டாள்.

அப்பொழுது சோம தத்தன் தன்னுடன் இருந்து தன்னை மிகவும் கவனித்து வந்த பாலாஜியைத் திருப்திப் படுத்த எண்ணங்கொண்டு, அரசனை நோக்கி, "பூபதியே, போர் வீரர்களுடன் அவர்களுக்கு ஏவல் புரிந்துகொண்டு அனேகம் பணியாளர்கள் இருந்திருப்பார்கள். நீங்களும் அவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆயினும், பாலாஜியைப்போன்ற ஒரு மனிதனை ஒருவரும் அடைந்திருக்க முடியாது. இவனுடைய உதார குணமும், சுய

நல மின்மையும், பிறரைப் பாதுகாக்கும் தன்மையும் ஒரு வருக்கும் அமையா. இவன் என்னுடைய சுக துக்கங்களைத் தன்னுடையனவாகவே கருதி யிருக்கின்றான். ஆதலால், இவனுக்கு என்னுடைய வீரத்தால் ஓர் இராஜ்யம் சம்பாதித்துக் கொடுக்க எண்ணியுள்ளேன். ஆதலால், யான் இங்கு நெடு நாள் தாமதிக்க முடியாமைக்காக மிகவும் விசனப்படுகிறேன்,'' என்றான்.

அரசன் பின்னும் வேடிக்கை பார்க்கக்கருதி, "சோம தத்தரே, நீர் எப்பொழுது என்னுடைய விருந்தாளி யாயினீரோ, அப்பொழுது உம் கோரிக்கைகளை நிறைவேற்று வது என் கடமையாகும். ஆதலால், நீர் பாலாஜியைப் பற்றிக் கவலை எடுத்துக்கொள்ள வேண்டா. இப்பொழுது என் இராஜ்யத்தில் மங்கள புரி மாகாணம் அதிபதியின்றி இருக்கிறது. ஆதலால், பாலாஜியை அங்கு நாளையே அனுப்புகின்றேன்,'' என்றான்.

உடனே சோம தத்தன், பாலாஜியை நோக்கி, "பாலாஜி, உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! அரசருடைய பாதத்தில் விழுந்து வணங்குவாயாக,'' எனக் கட்டளையிட்டான். பாலாஜியும் அவ்வாறே செய்தான். அரசி சிரித்த சிரிப்புக்கோர் அளவில்லை.

போஜனம் முடிந்த பிறகு, யாவரும் அடுத்த அறைக்குச் சென்று, தாம்பூலம் தரித்துக்கொண்டனர். அச்சமயம், அரசன் பிரபுக்களையும் மந்திரிகளையும் வரச்சொல்லி, அவர்களிடம் மறு நாள் பாலாஜி மங்கள புரியின் அதிபதியாகச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, அவ்வூரிலுள்ள உத்தியோகஸ்தர்களும் அவனிடம் எவ்வாறு நடக்க வேண்டுமென்பதை எழுதி யனுப்பினான்.

அப்பொழுது அரசி பாலாஜியை நோக்கி, "ஐயா, நீ எவ்வாறு அரசாங்கத்தை நடத்துவாய்?" எனக் கேட்க, அவன், "அரசியே, முன் பழக்கமில்லாவிடினும், எனக்கு அரசாளும் திறமை அதிகம் உண்டு. துஷ்டர்களைக் கண்டித்து நல்லோரை ஆதரிப்பேன். நான் அப்பதவியை ஏற்றுக்கொள்வது என் பேராசையாலன்று. ஆனால், அஃது எம்மாதிரி இருக்கிறதென்று காணவும், பிறரை நல்வழிப் படுத்தவேண்டுமென்னும் எண்ணங்கொண்டுமே அப்பதவியை ஒப்புக்கொண்டேன்," என்றான். அரசி, "உண்மை தான்," என்றாள்.

அச்சமயம் அரசன், "பாலாஜி, நீ நாளை உன் புதிய இராஜ்யத்திற்குச் செல்லத் தயாராக இருக்க வேண்டும். உன் எஜமானர் சோம தத்தர் எங்களுடன் இங்கேயே இருப்பார்," என்றான்.

சோம தத்தனும் பாலாஜியை நோக்கி, "அப்பா, அரசர் சொல்வதைக் கவனித்துக்கொள்," என்றான். பாலாஜி, "எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுகிறேன். ஆயினும், என்ன உடை தரித்தாலும் சரி; எப்பதவியை யடைந்தாலும் சரி; பாலாஜி என என் பெற்றோர் இட்ட பெயரை மாத்திரம் யான் விடேன்; வேறு எப்பெயரையும் பூணேன்," என்றான்.

சோம தத்தன், "நீ அவ்வாறே செய்யலாம்," எனச் சொல்லி, அரசனை நோக்கி, "அரசரேறே, யான் பாலாஜியை அழைத்துச் சென்று அவனுக்குச் சில புத்திமதிகளைச் சொல்ல விரும்புகிறேன். கால தாமதம் செய்ய நேரமில்லை. ஆதலால், என் அறைக்குச் செல்ல அனுமதி கொடுங்கள்," என்றான்.

அரசனும் அதற்குச் சம்மதித்தான், அவர்கள் சென்ற பிற்பாடு, அரசனும் அரசியும் சில நிமிஷங்கள் வரையில் விடாமல் நகைத்தார்கள்.

---

## 15. பாலாஜியின் ஆட்சி

மறு நாட் காலை உதயமானதும், பாலாஜி விலை உயர்ந்த உடுப்புகளைத் தரித்துக்கொண்டு, ஒரு குதிரையின் மீது ஏறி, அனேக சிப்பாய்கள் புடைசூழ, மங்களபுரிக்குப் பிரயாணமானான்; அரசனையும் அரசியையும் குதிரைமீதிருந்தபடியே வணங்கினான்; சோம தத்தனை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி அவர்களை வேண்டினான். பிறகு சோம தத்தன் அவனை யணுகி, ஒரு கடிதத்தில் அவன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதை எழுதி, அவனிடம் கொடுத்து, கண்ணீருடன் அவனுக்கு ஆசி கூறினான். பாலாஜிக்குப் படிக்கத் தெரியாததால், எவரிடமாவது கொடுத்து அதில் எழுதியிருப்பதைப் படித்து அறிந்துகொள்ளுமாறு சோம தத்தன் சொன்னான். பாலாஜியும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு அதைத் தன் அங்கிக்குள் வைக்கப் போகையில், அது கீழே விழுந்தது. பாலாஜி சென்ற பிறகு, அக்கடிதத்தை அரசன் எடுத்துப் பிரித்துப் பார்த்து அதில் சோம தத்தன் எழுதிய புத்திமதிகளை அரசிக்குப் படித்துக் காண்பித்தான். பிறகு அரச தம்பதிகள் இருவரும் குலுங்கக் குலுங்க நகைத்தனர்.

பாலாஜி அதிபதியாகச் சென்றுங்கூட, அவனுடைய கழுதையை விடவில்லை. அதை அவன் தன் பின்னலேயே

நடத்தி வரச் செய்தான். கடைசியில் மங்கள புரியை அடைந்தவுடன், அவ்வூர் அதிகாரிகள் மேள வாத்தியங்களுடன் பாலாஜியை எதிர்கொண்டழைத்து, அவன் கழுத்தில் மாலைகளைப் போட்டார்கள். அவ்வூர் வாசிகள் தங்களுடைய புதிய அதிபதியைப் பார்க்க வீட்டுத் திண்ணைகளிலும் கூரைகளின்மேலும் குழுமினார்கள். மணிகள் ஒலித்தன. தெருக்களில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. அவற்றைக் கண்டு பாலாஜி அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை. கடைசியில் அவன் அரண்மனை வாயிலையடைந்ததும், குதிரையை விட்டிறங்கிக் கொலு மண்டபத்தை அடைந்தான்.

பாலாஜியை முதல் மந்திரி வரவேற்றுச் சிங்காதனத்தில் உட்காரச் செய்து, அதிகாரிகளுள் ஒவ்வொருவரையும் பாலாஜிக்கு அறிமுகம் செய்வித்தான். பாலாஜியினுடைய விநோத உடுப்பும், குறுகிய கால்களும், கைகளும், பருத்த தலையும், நீண்ட தாடியும் கண்டோரை நகைக்கச் செய்தன. ஆயினும், அரசாங்க முக்கிய உத்தியோகஸ்தர்கள் அரசன் வேடிக்கையாகவே பாலாஜியை அதிபதியாக்கினன் என்பதை அறிந்திருந்தார்களாதலால், அவர்கள் சிரிப்பை அடக்கிக்கொண்டார்கள்; பிறகு அனேக உபசாரப் பத்திரிகைகள் வாசித்தார்கள்.

அதன் பின் மந்திரி, பாலாஜியை யணுகி, " எங்களை அன்புடன் ஆள வந்த அதிபதியே, இவ்வூர் வழக்கத்தின்படி யான் உம்மைச் சில கேள்விகள் கேட்க வேண்டும். அவற்றிற்கு நீர் மறுமொழி யளிப்பதைக்கண்டு, நகரவாசிகள் நீர் எப்படிப்பட்டவர் என்பதையும் அரசாளுந் திறமை உமக்கு இருக்கின்றதா என்பதையும் அறிந்துகொள்

வார்கள்,'' என்றான். மந்திரி சொல்லியதைப் பாலாஜி கேட்டுக்கொண்டே, தான் உட்கார்ந்திருந்த இடத்திற்கு எதிரில் ஒரு கரும்பலகையில் சில எழுத்துகள் எழுதியிருப்பதைப் பார்த்து, 'அங்கு என்ன எழுதியிருக்கிறது?' எனக் கேட்டான். அதற்கு மந்திரி, "மகா கனம்பொருந்திய பாலாஜி என்பவர் இன்று அதிபதியாக நியமிக்கப்பட்டார் என எழுதியிருக்கின்றது,'' என்றான். உடனே, பாலாஜி மிக்க கோபத்துடன் தன் கைகளைத் தட்டி, "யான் மகா கனமும் அல்ல; இலேசும் அல்ல. நீங்கள் பாலாஜியென்றே என்னை அழைத்தால் போதும். சரி; இனி நீர் கேட்க விரும்பும் கேள்விகளைக் கேளும். குடிகள் சந்தோஷித்தாலும் சரி; துக்கப்பட்டாலும் சரி; எனக்கு எது நன்று எனத் தோன்றுகிறதோ, அவ்வாறே நான் எதையும் செய்வேன்,'' என்றான்.

அச்சமயம், கிராம வாசிகள்போல உடுத்து இருவர் சபா மண்டபத்துள் வந்தார்கள். அவர்களில் ஒருவன் பாலாஜியை நோக்கி, "பிரபுவே, யான் ஓர் ஏழைத் தையற்காரன். நேற்று இம்மனிதன் என் கடையண்டை வந்து ஒரு துண்டுத் துணியைக் காண்பித்து, இதில் ஒரு குல்லாய் செய்வாயா?' என்றான். அதற்கு யான், 'செய்ய முடியும்,' என்றேன். பிறகு அத்துணியில் யான் கொஞ்சம் திருடிக்கொள்வேன் என நினைத்து, 'இரண்டு குல்லாய்கள் செய்யக் கூடுமா?' என்றான். யான், 'செய்ய முடியும்,' என்றேன். பிறகு மூன்று, நான்கு, ஐந்து என்று எட்டுக் குல்லாய்கள் வரை உயர்த்திக்கொண்டே போனான். யானும் அவ்வாறே தைத்துக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன். இன்று அவன் சொல்லியபடி எட்

டுக் குல்லாய்கள் செய்துகொடுத்தும், அவைகளை வாங்கிக் கொள்ளாமல், இவன் கொடுத்த துணியையே கேட்கிறான்," என்றான்.

உடனே பாலாஜி மற்றொரு மனிதனைப் பார்த்து, "என்ன, ஐயா, இவன் சொல்வது சரிதானா?" என்றான். அதற்கு அவன், "பிரபுவே, இவன் சொல்வது முற்றிலும் உண்மையேயெனினும், தாங்கள் தயவு கூர்ந்து, அக்குல்லாய்களைக் கொண்டுவரச் செய்து பாருங்கள்," என்றான். அப்படியே அவன் குல்லாய்களை எடுத்துக் காட்டச் சொல்ல, அவைகள், பெருவிரலுக்குப் போடுவதற்குக் கூடுமேயன்றி, தலையில் தரிக்க முடியாதபடி தைக்கப்பட்டிருந்தன. "என்ன அப்பா, இம்மாதிரி தைத்தால், யாது உபயோகம்?" என்று பாலாஜி தையற்காரனைக் கேட்க, அவன், "அதிபரே, இவன் ஒரு சிறு துண்டையளித்து எட்டுக் குல்லாய்கள் செய்யச் சொன்னால், யான் வேறு என்ன செய்யக் கூடும்?" என்றான்.

உடனே பாலாஜி, "இது மிகவும் கஷ்டமான விஷயமன்று; சுலபமாகவே தீர்ப்புச் செய்யக் கூடியதுதான்: தையற்காரன், தைத்த கூலியை இழக்க வேண்டும். துணியின் சொந்தக்காரன் துணியை இழக்கவேண்டும்," என்று கூறித் தீர்ப்புச் செய்தான். அங்கிருந்தோரெல்லோரும் பாலாஜியின் புத்திக் கூர்மைக்கு மிகவும் வியந்து, அவனை வாழ்த்தினர்.

அதே சமயத்தில் இரண்டு வயோதிகர்கள் அங்கு வந்தார்கள். அவர்களில் ஒருவன், தன் கையில் பருத்த தடி ஒன்று வைத்துக்கொண்டிருந்தான். மற்றொருவன் பாலாஜியை நோக்கி, "பிரபுவே, ஒரு வருடத்திற்கு முன், என்

னுடன் வந்து இதோ நிற்கும் மனிதனுக்கு யான் ஐம்பது ரூபாய்கள் கடன் கொடுத்தேன். ஆறு மாதங்கள் வரையில் யான் வாளா விருந்தேன். பிறகு யான் போய்ப் பணத்தைக் கேட்ட பொழுது, பணத்தையும் கொடுக்காமல், பணம் வாங்கினதையே மறுக்கின்றான். "அப்படி நான் வாங்கியிருந்தால், உடனே கொடுத்திருப்பேன்,' எனச் சொல்லுகின்றான். அதன் பின் இரு முறை கேட்டும், அம்மாதிரியே சொல்லுகின்றான். நுட்ப புத்தியையுடைய நீர் விசாரித்து, நியாயம் சொல்ல வேண்டும்," என்றான்.

உடனே பாலாஜி, தடியுடன் நின்றிருந்த மனிதனை நோக்கி, "இவன் சொல்லுவது உண்மைதானா?" என்றான். அதற்கு அம்மனிதன், தான் அவனுக்குப் பணம் கொடுக்க வேண்டியதில்லை என்றான். பிறகு பாலாஜி வாதியை நோக்கி, "என்ன ஐயா, உமக்கு எவரேனும் சாக்ஷி யிருக்கின்றாரா?" என, அம்மனிதன், "யான் பணம் கொடுத்தது எவருக்கும் தெரியாது. ஆதலால், இவன் பணம் திருப்பிக் கொடுத்துவிட்டதாகச் சத்தியம் செய்தால், நான் திருப்தி யடைவேன்," என்றான். உடனே பாலாஜி பிரதி வாதியை அவ்வாறே சத்தியம் செய்யச் சொன்னான். அவன் உடனே, கையில் பிடித் திருந்த தடியை வாதியிடம் கொடுத்துப் பிறகு கூண்டில் ஏறி நின்று, "நான் பணம் வாங்கியது உண்மையே. ஆனால், அதை அவன் கையிலேயே கொடுத்துவிட்டேன் எனச் சத்தியம் செய்கின்றேன். அவன் அதை மறந்து விட்டான் எனத் தோற்றுகிறது. அதனாலேயே அவன் அடிக்கடி என்னைக் கேட்கின்றான்," என்றான். பிறகு,

அவன் கீழிறங்கித் தடியை வாங்கிக்கொண்டான். அதன் மேல் வாதி, "அப்படியாயின், சரி. ஒரு சமயம் நானே மறந்துவிட்டேன்போலும்!" என்று சொல்லிப் பிரதி வாதியுடன் மன அமைதியுடன் சென்றான்.

பாலாஜி இதைக் கண்டு சற்று யோசித்து, வெளியே போன இருவரையும் கூப்பிடச் செய்து, பிரதி வாதி கையில் இருந்த தடியை வாங்கி வாதி கையில் கொடுத்து, வாதியை நோக்கி, "ஐயா, நீர் உம் பணத்தை யடைந்து விட்டீர்; போகலாம்," என்றான். வாதி, "தலைவரே, இஃ தென்ன? இத்தடி ஐம்பது ரூபாய் பெறுமா?" எனக் கேட்டான். கொலு மண்டபத்தில் அமர்ந்திருந்தோரனை வரும் அதைக் கேட்டு அதிசயித்தனர். அப்பொழுது பாலாஜி, ஒரு வேலையாளைக் கூப்பிட்டு, "அத்தடியை வாங்கி உடைத்துப் பார். அதற்குள் ரூபாய்கள் இருக்க வேண்டும். அப்படி யில்லாமற் போனால், என்னைப் போன்ற மடையன் வேறு எவனுமில்லையென யான் சொல்வேன்," என்றான். வேலையாள் அப்படியே வாங்கி உடைக்க, அதன் பொந்திலிருந்து ரூபாய்கள் கலகல வெனச் சொரிந்தன. அங்குள்ளோர் அனைவரும் அதைக் கண்டு மிகவும் அதிசயித்தார்கள்; "நமக்கு அதிபதியாய் வந்தவர் மனிதரோ, தேவரோ!" என்றார்கள்.

அப்பொழுது மந்திரி, "தலைவரே, நீர் தடிக்குள் ரூபாய்கள் இருக்கின்றனவென்பதை எவ்வாறு அறிந் தீர்?" என்றான். அதற்குப் பாலாஜி, "பிரதி வாதி கூண் டில் ஏறிச் சத்தியம் செய்யும்பொழுது தடியை வாதியிடம் கொடுத்துவிட்டுப் பணத்தைத் தான் அவன் கையிலேயே கொடுத்ததாகக் கூறினான்; பிறகு கூண்டை விட்டிறங்கி

யதும், தடியை வாங்கிக்கொண்டான். ஆதலால், அதில் ஏதேனும் தந்திரம் இருக்கக் கூடும் என அறிந்தே அவர்களைக் கூப்பிடச்செய்து, தடியை யுடைத்துக் காண்பிக்கச் செய்தேன். நான் நினைத்தது, உண்மையாயிற்று," என்றான். அதைக் கேட்டு மந்திரி முதலிய எல்லா உத்தியோகஸ்தர்களும் பாலாஜியை மெச்சினார்கள். பிறகு கொலுவும் கலைந்தது.

பாலாஜி கொலுக் கலைந்ததும் அரண்மனைக்குள் சென்று, உடைகளைக்கழற்றி, ஸ்நானம் செய்து, புதிய வஸ்திரங்கள் அணிந்து, போஜன சாலைக்குள் நுழைந்தான். அவன் சாப்பிட உட்கார்ந்ததும், அவன் பக்கத்தில் மெலிந்து உயர்ந்த மனிதன் ஒருவன் வந்து உட்கார்ந்தான். பாலாஜியின் எதிரில் மிகவும் இனிப்பான அபூர்வ பண்டங்கள் வைக்கப்பட்டன. பாலாஜி அவைகளில் இரண்டொன்றை எடுத்து வாயில் போட்டதும், அருகே உட்கார்ந்திருந்த மனிதன், தன் கையிலுள்ள பிரம்பால் கீழே தட்டினான். உடனே பரிமாறிய பதார்த்தங்களைச் சமையற்காரர்கள் எடுத்துச் சென்றார்கள். இம் மாதிரியே பாலாஜி ஒன்றையும் வயிறாரத் தின்ன முடியவில்லை. உடனே அவன், அம்மனிதனை நோக்கி, அவன் யாவனென்றும், எதற்காக அம்மாதிரி இடையூறுகள் செய்துகொண்டிருக்கின்றான் என்றும் கேட்டான். அவன் உடனே தான் அரண்மனை வைத்தியன் என்றும், அதிபதியின் உடம்புக்கு ஏற்றவை யெவையெனவும், அதிபதி அவற்றுள் எவ்வளவு புசிக்க வேண்டும் எனவும் உணர்ந்து சொல்வது வழக்கம் என்றும், அப்படியில்லாவிட்டால் தலைவருக்கு அஜீரணம் முதலியவை உண்

டாகும் என்றும், அவ்வாறு செய்யவே அரசர் தன்னை நியமித்திருக்கிறார் என்றும் சொல்லி முடித்தான்.

பாலாஜி, மிக்க கோபத்துடன், "என் உடம்பைப் பார்த்துக்கொள்ள எனக்குத் தெரியும். நீ அப்பால்போ. நீ சொல்லிய வண்ணந்தான் யான் சாப்பிட வேண்டும் என அரசர் கட்டளையிடுவாரானால், உடனே இப்பதவியை யான் விட்டுச் செல்வேன். வயிறாரப் புசிக்காமல் உயர்ந்த பதவி எதற்கு?" என உரக்கக் கத்தி, வேலையாளைக் கூப்பிட்டு, வைத்தியனை வெளியே அழைத்துப் போகச் செய்தான். பிறகு சமையற்காரனைக் கூப்பிட்டுக் கொஞ்சம் கோதுமை மாப்பணியாரமும், ஒரு சேர் திராக்ஷைப் பழமும், கால் படி பாலும் கொண்டுவரக் கட்டளையிட்டு, அவைகளை அருந்திக் கையலம்பித் தாம்பூலந் தரித்துச் சயன அறைக்குச் சென்றான்.

---

## 16. பாலாஜி தன் பதவியை இராஜிநாமா செய்தல்

பாலாஜி, சற்று இளைப்பாறவெண்ணிப் படுக்கையில் படுத்தான். உடனே ஒரு வேலையாள் மிகவும் துரிதமாக ஓடி வந்து, அரசனிடமிருந்து ஒருவன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்திருக்கின்றானெனச் சொன்னான். பாலாஜி அவனை இட்டுவரச் செய்தான். பாலாஜி அக்கடிதத்தை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு, மந்திரியை வரவழைத்து, அவனிடம் கடிதத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னான். அதில் பின் வருமாறு எழுதியிருந்தது:

மகேந்திர புரம்,

பிரபவஞு சித்திரைமூ 15உ

மிக்க தைரியமும், ஊக்கமும், சாமர்த்தியமும் உள்ள பாலாஜி,

நீ சுகமாயிருக்கிருயெனவே நம்புகின்றேன். யான் என் ஒற்றர்கள் மூலம், மாற்ருனும் நம் விரோதியு மான அடுத்த நாட்டரசனுடைய ஆட்களிற் சிலர் மாறுவேடம் பூண்டு உன்னைக்கோல்வதற்காக மங்கள புரியில். வந்து வசிப்பதாக அறிந்தேனுதலால், உனக்கு முன்னமாகவே ஜாக்கிரதையாக விருக்கும்படி எச் சரிக்கை செய்கின்றேன். தவிரச் சிப்பாய்களையும் வீரர்களையும் தயாராயிருக்கச் செய். ஏனெனில், எச்சமயத்தில் அத்துஷ்டன் உன் நகரின்மேல் படை யெடுப்பானேவென்பது எவருக்கும் தெரியாதே! யான் எழுதியிருப்பதை நன்கு கவனித்து, அதற்கேற்ற வாறு நீ நடப்பாயென்று நம்புகின்றேன். அரசியும் உன் க்ஷேமத்தைப்பற்றி மிகவும் விசாரிக்கின்ருள்.

உன் மேன்மையை நாடும்

மகேந்திர வர்மன்

அவந்திநாட்டரசன்.

மந்திரி இவ்வாறு அக்கடிதத்தை முழுதும் படித்தவுடன் பாலாஜி அவனை நோக்கி, "எதிரிகளில் ஒருவன் அகப்பட்டுவிட்டான். அவன் யாவன் எனில், அரண்மனை வைத்தியன் எனச் சொன்ன அந்தத் துஷ்டனேயாவன். அவனே என்னைச் சாப்பிடவொட்டாமல் தடுத்துக் கொல்லப் பார்த்த அயோக்கியன். ஆதலால், அவனை உடனே சிறையிலடைத்து, ஒரு நாளைக்கொருவேளையே உண்டி கொடுக்கச் செய்யும்," என்று கட்டளையிட்டான். மந்திரி அவ்வாறே செய்வதாகச் சொல்லி வெளிச் சென்றான்.

மேற்சொல்லிய சம்பவம் நிகழ்ந்து ஒரு வாரம் வரையில் ஒரு விஷயமும் நிகழவில்லை. மனித தேகமே நீர்க்குமிழி போன்றதென்று பெரியோர் சொல்லியிருக்கின்றனர். அதிலும் தாங்கள் செய்யுங் காரியங்கள் அப்பொழுதே மாந்தர்களால் மறக்கப்படுகின்றன. அவர்கள் செய்யும் நற்செய்கைகளே, உலகத்தில் ஓங்காநிற்கும். பாலாஜி உன்னதப் பதவியில் எட்டுநாட்களே யிருந்தான். மனிதனுடைய நிலையில்லா இருப்புக்கு அவன் பதவியை யடைந்ததும், அதை அவன் இழந்ததுமே பெரிய அத்தாட்சியாகும்.

பாலாஜி அதிபதியான எட்டாம் தினம் இரவு படுக்கையிற் படுத்து நன்றாக உறங்கும் சமயம், திடீரெனப் பலர் ஓடி வரும் அரவம் அவன் காதில் விழுந்தது. அவன் உடனே எழுந்து வெளிவர, இருபது வேலையாட்கள் பாலாஜியின் காலில் விழுந்து, "பிரபுவே, சீக்கிரம் எழுந்து, நீர் கவசத்தையணிந்து, ஆயுதங்களை ஏந்தி, வீரர்களை நடத்தும். எதிரிகள் கோட்டையை முற்றுகை செய்கிறார்கள். சற்று நீர் தாமதித்தால், அவர்கள் உள்ளே

வந்துவிடுவார்கள். உமது தைரியத்தைக் காட்ட இதுவே தருணம்," என்றார்கள். அதற்குப் பாலாஜி, "இச்சண்டை சமாசாரம் எல்லாம் என் எஜமானர் சோம தத்தருக் கல்லவா தெரியும்? அவர் தற்சமயம் இங்கிருந்தால், எதிரிகள் அனைவரையும் ஒரே விநாடியில் புறங் காட்டி யோடச் செய்வார். அது கிடக்கட்டும். நீங்கள் என்னைப் போருக்கு ஆயத்தம் செய்யுங்கள்; ஆயுதங்களையும் கவசத்தையும் எடுத்து வாருங்கள்," என்றான். அவர்கள், அரசனுடைய விருப்பத்திற்கிணங்கப் பாலாஜியை வேடிக்கை செய்ய நினைத்தார்களாதலால், அவர்களில் ஒருவன் போய், இரு பழமையான கெட்டித் தகடுகளைக் கொண்டு வந்து, பாலாஜியின் முன்னும் பின்னும் கயிறு போட்டுக் கட்டினான். பாலாஜி கை கால்களை அசைக்கக் கூட முடியவில்லை. பிறகு அவன் கையில் ஈட்டி ஒன்றைக் கொடுத்தார்கள். அச்சமயம் மந்திரி வந்து, "அதிபதியவர்களே, சீக்கிரம் வாருங்கள்!" என அழைக்க, எல்லோரும் முன் சென்றார்கள். பாலாஜியும் நடக்க முடியாமல் தட்டுத் தடுமாறிக்கொண்டு அரண்மனை வாயிலையடைந்தான்; அங்கு வாயிற்படி தடுக்கிக் கீழ் விழுந்து மூர்ச்சையாயினான். அதே சமயம், பலர் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டும், "கொல்லு, குத்து, பிடி, அடி," எனப் பலவாறு ஆரவாரித்துக்கொண்டு மிருந்தனர். சிலர் வேண்டுமென்றே பாலாஜியை மிதித்துக்கொண்டு சென்றனர். அவர்களில் ஒருவன் பாலாஜியின்மேல் நின்று கொண்டே, "நமது அதிபதியைக் காணோமே! ஒரு சமயம் கிழக்கண்டை வாயிலிற் போர் செய்கின்றாரோ என்னவோ! நீங்கள் மேலண்டை வாயிலிற்குப் போங்கள்.

அங்கேயே எதிரிகள் பலமாக இருக்கின்றார்கள்," என்றான். இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டே, பாலாஜி உடல் நடுக்கத்துடன் படுத்துக்கொண்டிருந்தான்.

இரண்டு மணி நேரம் அவ்வாறு பாலாஜி கிடந்தான். பிறகு ஒருவன் அவனைத் தேடுவான் போன்று அவனையணுகி, "தலைவரே, நீர் இங்கா இருக்கின்றீர்? மந்திரி முதலானோர் உம்மைத் தேடுகின்றனரே!" எனச் சொல்லி, அவனைத் தூக்கி நிறுத்திக் கட்டுகளை அவிழ்த்துத் தகடுகளை அகற்றினான். உடனே மந்திரி முதலானோர் அவன் முன் வந்து வணங்கி, "தங்களுடைய தயவும் ஆசிர்வாதமும் இருந்ததாலேயே நம் விரோதிகளை நாங்கள் துரத்தினோம்," என்றார்கள்.

பாலாஜி ஒன்றும் மறு மொழி கூறாமல், இருள் என்றும் பாராமல், நேரே குதிரை லாயத்திற்குச் சென்று அவனுடைய கழுதையை அவிழ்த்து, அதைப் பார்த்து, "அருமைத் தோழனே, யான் உன்னுடன் கூட இருந்த வரையில் எனக்கு ஒரு விதக் கஷ்டமும் ஏற்படவில்லை. நான் உன்னைப் புறக்கணித்துப் பேராசை யடைந்தேனாதலால், இக்கதிக்கு வந்தேன். உடலெல்லாம் இரத்தப்புண்களாகவிருக்கின்றன," எனச் சொல்லி, அதன்மேல் ஏறினான். பிறகு மந்திரி முதலானோரைப் பார்த்து, "சீமான்களே, உலகத்தில் ஒவ்வொருவனையும் கடவுள் படைக்கும்பொழுது அவன் எவ்வெக்காரியங்களைச் செய்ய வேண்டுமோ, அவற்றைத் திட்டமாக அவன் தலையில் எழுதியுள்ளார். அவற்றின்படி அவன் நடக்காமற் பேராசைப்பேயால் பிடிக்கப்பட்டால், அவனுடைய கதி அதோகதிதான். அதற்கு யானே திருஷ்டாந்தமாக உளேன்.

என்னைக் கடவுள், ஏரைப் பிடித்து எருதுகளை நடத்தி உழு தொழில் செய்யப் படைத்தாரேயன்றிச் சண்டை செய்யவும் செங்கோலைப் பிடிக்கவும் படைக்கவில்லை; நான் பேராசையை யடைந்தேனுதலால், பெருநஷ்டம் எய்தினேன். ஆனல், இப்பொழுதாவது எனக்குப் புத்தி வந்ததே! இஃதும் இறைவன் கருணைதான்," என்றான்.

மந்திரி முதலானோர்களும் மற்றும் அங்குக் கூடியிருந்தவர்களும் பாலாஜியை இழக்க நேர்ந்தது பற்றி மிகவும் வருந்தினர்கள். அவனுக்கு அனேக பழங்களும் தின்பண்டங்களும், பொன்னும் வழங்கினர்கள். ஆனல், அவன் அவைகளை வாங்க மறுத்து, இரண்டு ரொட்டித் துண்டங்களையும், கொஞ்சம் திராக்ஷைப் பழத்தையும் எடுத்துக்கொண்டு, அனைவரிடமும் தான் எங்கிருந்து வந்தானே, அங்கேயே போவதாகச் சொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு சென்றான்.

---

## 17. சோம தத்தனும் பாலாஜியும் இராய துர்க்கத்துக்குத் திரும்புதலும், சோம தத்தனது மரணமும்

பாலாஜி சோம தத்தனை யடைந்தான். அவனைச் சோம தத்தன் அன்புடன் வரவேற்றான்; அவனுக்கு நேர்ந்த கஷ்டங்களைத் தெரிந்துகொண்டு அவனுக்கு ஆறுதல் சொன்னன். அரசனும் அரசியும் பாலாஜியைக் கண்டு, அவனை உயர்ந்த பதவி எங்ஙனம் இருந்தது என வினவ, அவன், "போதும்! போதும்!! இனிக் கனவி

னும் அப்பதவியை யான் வேண்டேன்,'' என்றான். அவர்கள் அதைக் கேட்டு நகைத்தார்கள்.

சோம தத்தன் தான் அத்தனை நாட்கள் சோம்பேறித் தனமாய் அரசனுடன் காலங் கழித்ததுபற்றி மிகவும் வருந்தினான். வீரர்கள் ஒரு நிமிஷமும் அரிய தீரச் செயல்கள் செய்யாமல் இருக்கக்கூடாது என அவன் புத்தகத்தில் படித்திருந்தானாதலால், எங்குத் தான் சும்மா இருந்தமைபற்றிக் கடவுள் தண்டிப்பாரோவெனப் பயந்து அவரை வாயாரப் பாடித் துதித்தான்.

பாலாஜி வந்த மறு நாளே அரச தம்பதிகளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, சோம தத்தனும் பாலாஜியும் அவ்விடத்தைவிட்டு நீங்கினார்கள். அரசன் சோம தத்தனை மிகவும் புகழ்ந்து, சிறிது தூரம் சென்று, அவர்களை வழி விட்டு வந்தான். உண்மையாகவே அரசனும் அரசியும் சோம தத்தனுடனும் பாலாஜியுடனும் கழித்த வினோத நேரங்கள் அப்பால் கிடைக்காவே என வருந்தினார்கள்.

சோமதத்தனும் பாலாஜியும், ஒரு மைதான மார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கையில், பாலாஜி சோம தத்தனை விளித்து, "என் தலைவரே, இனிமேல் அதிபதியாக வேண்டுமென்னும் எண்ணம் எனக்கில்லை. ஆயினும், நீர் சீக்கிரம் அரச பதவியை யடைந்தால், யான் மந்திரியாகவாவது ஆவேன்,'' என்றான். சோம தத்தன், "இருக்கட்டும்; பார்க்கலாம்,'' என்றான்.

சோம தத்தன் வெளிக்கிளம்பியது முதல் செய்த செயல்களெல்லாம் அவனுடைய ஊரார் அறிந்தனர். அவர்கள் எவ்வாறாயினும் அவனை ஊருக்குத் திரும்பச் செய்ய வேண்டுமென்று ஆலோசித்தார்கள். கடைசியில்

அவ்வூராரில் ஒருவன், தான் எப்படியாவது சோம தத்தனை அழைத்து வருவதாகச்சொல்லிச் சென்றான். அவன் ஒரு போர் வீரன் போலக் கவசம் முகமூடி முதலியவை அணிந்து, ஓர் உயர்ந்த பரிமாமீது ஏறிச் சோம தத்தன் வழியில் தங்கிய கிராமத்தை யடைந்தான். அங்குச் சென்று அவ்வூர்த் தலைவனையணுகித் தான் வந்த காரணத்தைத் தெரியப்படுத்தினான். அவனும் வேடிக்கை பார்க்க எண்ணிச் சந்தோஷித்தான். மறு நாள் காலை சோம தத்தன் வெளிச் செல்லுகையில், புது வீரன் குதிரைமீது அவன் முன் தோன்றி, "சோம தத்தரே, என் பெயர் சந்திரவீரன். என்னைப்பற்றி உலகிலுள்ளோர் யாவரும் கேள்விப்பட்டிருக்கின்றனர். நீரும் எனது கீர்த்தியைப்பற்றி அறிந்திருப்பீர். யான் உம்முடன் பொருது, என் ஜயக் கொடியை நாட்ட அவாக் கொண்டேன்," என்றான்.

உடனே சோம தத்தன், "யான் சந்திர வீரனைப்பற்றியோ, சூரிய வீரனைப்பற்றியோ கேள்விப்பட்டதேயில்லை. ஒரு சமயம் யான் சிங்கத்தை ஜயித்து அரிஜயனென்று நாமம் பூண்டதை நீ அறியாயோ? நீ காரணமின்றி உயிரிழக்க ஆவல் கொண்டாய். என்னுடன் சண்டையிட வந்த நீ உயிர் தப்புவது அரிது. யான் உன்னுடன் போர் செய்யத் தயாராயிருக்கின்றேன்," என்றான்.

இவ்விஷயத்தை அவ்வூர்த் தலைவன் அறிந்து, ஊர் முழுதும் முரசு அடிக்கச் செய்தான். அன்று மாலை, அவ்வூர் மைதானத்தில் அவ்வூரார் அனைவரும் குழுமினர். சந்திர வீரனும் சோம தத்தனும் மைதானத்தின் நடுவே நின்றனர். அப்பொழுது சந்திர வீரன் வேண்டுகோளுக்கிணங்க, அவ்வூர்த் தலைவன் இருவருக்கும் ஒரு

நிபந்தனை இட்டான். அதாவது, அவ்விருவரில் எவன் ஜயிக்கின்றானோ, அவனுடைய விருப்பத்திற்குத் தோற்றவன் இணங்க வேண்டும் என்பதே. சங்குகள் முழங்கின. உடனே இரு வீரரும் ஒருவரோடொருவர் சண்டையிட்டனர். சோம தத்தனைக்காட்டிலும் சந்திர வீரன் இளைஞனாதலாலும், மிக்க சுறுசுறுப்புள்ளவனாதலாலும், அவன் சோமதத்தனை ஈட்டிக்குத்தால் குதிரையினின்று வீழ்த்தி, அவன் மார்பின்மேல் ஏறி உட்கார்ந்து, "சோம தத்தரே, நீர் தோல்வி யடைந்தீர். ஆதலால், என்னுடைய நிபந்தனைக்கு நீர் உட்பட வேண்டுவதே," என்றான்.

இதற்குச் சுத்த வீரனாகிய சோம தத்தன், "ஐயா சந்திர வீரரே, யான் கடவுளுக்கு என்ன அதிருப்தி செய்தேனோ! பிறருக்கு என்னென்ன இன்னல் இழைத்தேனோ! இதுகாறும் ஜய பேரிகை கொட்டிய யான் இன்று உம்மால் தோல்வியடைந்தேன். எனக்கு இவ்வுயிரின்மேல் சிறிதும் ஆசையில்லை. தோல்வியடைந்த பிறகு உயிர் வாழ எனக்கு விருப்பமில்லை. ஆதலால், உம் ஈட்டியால் என்னைக் கொல்லும்," என்றான். ஆனால், சந்திர வீரன் அதற்கு ஒப்பவில்லை. அவன் சொல்லிய படியே சோம தத்தன் நடக்கவேண்டுமென்பது நிபந்தனையாதலால், உண்மை வீரனாகிய அவன் மறுக்கக் கூடாது என்றான். பிறகு அவன் சோம தத்தனை நோக்கி, "ஐயா, என் நிபந்தனை என்னவென்றால், நீர் உமது ஊருக்குத் திரும்பி, இன்று முதல் ஒரு வருடம் வெளிக் கிளம்பக் கூடாது என்பதே," என்றான். சோம தத்தன், பத்து வருடம் என்னாமல் ஒருவருடமென்று சொன்னானேயெனச் சந்தோஷித்து, அதற்குச் சம்மதித்தான். பிறகு சந்திர

வீரன் எழுந்து, அனைவரிடமும் செலவு பெற்றுக்கொண்டு இராய தூர்க்கத்தை யடைந்தான். அவ்வூர்த் தலைவன் அவனுடைய அறிவை மெச்சினான்.

சோம தத்தன் எழுந்து, பாலாஜியுடன் மிக்க வருத்தத்தோடு ஊர் திரும்பினான். அப்பொழுது சோம தத்தனைக்காட்டிலும், பாலாஜியே வருத்தமெய்தினான். "ஐயா, நீர் இனிமேல் வெளியே சென்று ஜயமடையாவிட்டால், யான் என் செய்வது? எவ்வாறு மந்திரியாவது?" எனப் பிரலாபித்தான். சோம தத்தன் தான் நிபந்தனைப்பிரகாரம் நடக்க வேண்டுவது ஒரு வருடமேயாதலால், அதன் பின் மறுபடியும் வெளிச்சென்று வீரச்செயல்கள் செய்யக் கூடும் எனக் கூறி, அவனைத் தேற்றினான். கடைசியில் அவ்விருவரும் இராய தூர்க்கத்தை யடைந்தனர்.

அவ்வூராரில் முக்கியமானவர்கள் சோம தத்தனை எதிர்கொண்டழைத்துச் சென்று, அவனுடைய விடுதியில் விட்டனர். தன்னுடைய அரிய செயல்களை அவர்கள் கேள்விப்பட்டதாலேயே தன்னை அவ்வாறு அவர்கள் கௌரவப்படுத்துகின்றார்கள் என அவன் நினைத்தான்.

பிறகு சோம தத்தனிடம் விடை பெற்றுக்கொண்டு பாலாஜியும் அவன் இல்லம் ஏகினான். அவனை அவன் மனைவி மக்கள் எதிர்கொண்டு, அவன் அதிபதியாக விருந்தமையால் என்ன கொண்டுவந்தானோவென அதிசயித்து, அவனைச் சூழ்ந்து நின்றனர்.

அன்றுமுதல் சோம தத்தன் மாலை வேளைகளில் அவ்வூர்க் கழனிகள் இருக்கும் பக்கம் அடைந்து, அவ்வூராருக்குத் தனது வீரச் செயல்களைப்பற்றிச் சொல்லுவது

வழக்கம். பாலாஜியும் அங்குக் கூடவந்து அனைவரிடமும் பேசி அவர்களைச் சந்தோஷிக்கச் செய்வான். இவ்வாறு மூன்று திங்கள் கழிந்தன. ஒரு நாள் சோம தத்தன் உடம்பு அசௌக்கியமாய்ப் படுத்துக்கொண்டான். அது முதல் ஜுரம் அதிகமாயிற்று; ஜுரத்துடன் ஜன்னியுங் கண்டது. வயது ஆனமையாலும், அதிகமாக வெளிச் சென்று உடம்பைக் கெடுத்துக்கொண்டதாலும், அவன் பிழைப்பது அரிது எனத் தோன்றிற்று. வைத்தியர்களும் கை விட்டார்கள்.

பாலாஜி, சோமதத்தன் படுத்தது முதல் அவனைவிட்டகலவில்லை. கடைசியில் அவனுடைய வாழ்க்கையின் இறுதிக் காலத்தை அவன் அடைந்தானெனப் பாலாஜி கண்டதும், கோவென அலறி விழுந்தான். அவன் அப்படி விழுந்தது அனைவருடைய மனத்தையும் கரைத்தது. அது கண்டு சோம தத்தன் பாலாஜியை அருகே கூப்பிட்டு, "அப்பா, பாலாஜி, உன்னைப்போன்ற நம்பிக்கையுள்ளவனும் எஜமானனிடம் பிரியமுள்ளவனும், எங்கும் கிடைப்பதரிதென்பது திண்ணம். ஆயினும், என் சொற்களைக் கேள்: யான் இதுகாறும் இவ்வுலக வாழ்க்கையை நீர்மேல் குமிழி என்று அறியாது இருந்தது என் அறியாமையே. ஆதலால், நீ உனது வாழ்நாளை வீணாகக் கழிக்காமல், நிலத்தை உழுது சாகுபடிசெய்து, பெண்டுபிள்ளைகளைத் திருப்தியடையச்செய்து, மிச்ச நேரத்தைக் கடவுளை வழிபடுதலில் செலவிடு," என்று சொல்லித் தன் சொத்தில் ஒரு பாகத்தை அவனுக்கு வழங்கச் செய்தான். பிறகு, கடவுளையே மனத்தில் நினைத்துக்கொண்டு அமைதியாக உயிர் நீத்தான்.

அவன் இறந்து நெடுங்காலமாகியும் சோம தத்த னுடைய வீரச் செயல்களை உலகம் போற்றுகிற்கின்றது. அவன் என்ன தவறுகள் செய்தாலும், அவன் கொள்கை கள் அனைவரையும் அவனைப் பரிகசிக்கச் செய்தாலும், அவன், "மனம் வேறு, சொல் வேறு, மன்னு தொழில் வேறு," என்றில்லாமல், உள்ளும் புறமும் ஒன்றாகவே வாழ்ந்தான். அவன் ஒரு வீரன் எவ்வாறு இருக்க வேண் டுமோ, அவ்வாறு இருந்தே இறந்தான்.

---

இளமையிற் கல்லா னாகி யெங்குமே திரிந்து பின்னர்
வளமுறு வாலி பத்தில் வாய்ந்தநற் போர்வீ ரர்க்கே
யுளங்கோளத் தகுவ வான வுத்தம நூற்கள் பெற்றும்
களங்கமில் கருத்தைக் காணுங் கலைநல மின்மை யாலே

அத்தகு நூற்கள் சொன்ன அறநெறிப் பயிற்சி யின்றி
வித்தகம் பேசித் தானே வேலற்கரும் போர்க ளாற்றிச்
சுத்தமார் வீர னாகத் தோடங்கிய சோம தத்தன்
இத்தகு ஞாலந் தன்னி லிறந்தனன் நகைக்க யாரும்.

யாவரு நகைத்தற் கான வியற்கையாஞ் செயல்க ளாற்றி
மேவரு புகழ்நீத் தாலும் மேன்மைசால் சோம தத்தன்
நாவலர் புகழ்தற் கான நவிலரு நேயந் தன்னால்
தாவரு பாலா ஜிக்குத் தன்போரு ளீந்தா னன்றே.

ஆதலின் சிறுமை தன்னி லவாவுடன் கலைக ளோதித்
தீதறு நெறியில் நின்று செய்யலாஞ் செயல்கள் செய்து
மேதினி போற்ற வாழ்ந்து மேன்மைசால் புகழை யீட்டிப்
போதலே நெறியா மென்று புகலுவர் புலவர் தாமே.

Kesari Printing Works, Madras.

# OUR LATEST PUBLICATIONS

| | Rs. | As. | P. |
|---|---|---|---|
| **Heroic Kings:** in Tamil by T. V. Ganesan, B.A., L.T., Asst., Pachaiyappa's College School, Madras ... | 0 | 10 | 0 |
| **Dharmadhattan :** in Tamil ,, ... | 0 | 4 | 0 |
| **Devadhattan :** in Tamil ,, | in preparation | | |
| **Somadhattan :** in Tamil ... | 0 | 8 | 0 |
| **Stories for Moral Instruction to Children :** | | | |
| ,, **First Series** in Tamil by T. V. Ganesan, B.A., L.T. and P. Padmanabhan ... | 0 | 5 | 0 |
| ,, **Second Series** in Tamil ... | 0 | 5 | 0 |
| **Children's Hygiene, Simple First Aid & Invalid Cookery :** in Tamil by T. V. Ganesan, B.A., L.T. and P. Padmanabhan... | 0 | 5 | 0 |
| ,, Telugu Edition ... ... | 0 | 5 | 0 |
| **Posture Supplement :** in English, Tamil and Telugu ... ... ... | 0 | 2 | 0 |
| **Rajan's Simple Stories :** in Tamil ... | 0 | 5 | 0 |
| **Stories for the Young :** in Tamil by M. Rajamanikkam, Tamil Pandit ... ... | 0 | 4 | 0 |
| **Rajan's Tamil Readers :** Reader I ... | 0 | 2 | 6 |
| **Rajan's English Primer** ... ... | 0 | 3 | 0 |
| **Child Education Series : General Knowledge of Hygiene, Moral, Civics & Nature Study :** in Tamil Pupils Edition Stage I ... | 0 | 5 | 0 |
| ,, in Telugu ,, ,, ... | 0 | 5 | 0 |
| ,, in Tamil ,, Stage II ... | 0 | 6 | 6 |
| ,, in Telugu ,, ,, ... | 0 | 6 | 6 |
| ,, in Tamil ,, Stage III | (In Press) | | |
| ,, in Telugu ,, ,, | ,, | | |

## M. P. RAJAN & CO.,

**12, Rangashayee Naidu St.,**

PERAMBUR, MADRAS.

Kesari Printing Works, Madras.